வன்னி : ரூபா.20
யாழ் : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily



மழைக்கான சாத்தியம் உண்டு.
27°c 26°c

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 336 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஐப்பசி 12, செவ்வாய் 29.10.2013

# வடக்கு ஆளுநரை விலக்க ஐ.தே.கவும் பச்சைக்கொடி

### பொலிஸ் சேவையில் தமிழர்கள் அவசியம் எனவும் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஒக்.29
வடமாகாண ஆளுநராக இருக்கும் முன்னாள் இராணுவ அதிகாரியான ஜி.ஏ. சந்திர சிறியை நீக்கிவிட்டு அப்பதவிக்கு சிவில் அதிகாரியொருவரை அரசு நியமிக்க வேண்டும் எனத் தமிழத் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு முதல்வர் விடுத்துள்ள அறிவிப்புக்கு பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நேற்று ஆதரவு தெரிவித்துள்ளது.
வடமாகாண பொலிஸ் சேவையில் தமிழர்கள் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும் அந்தக் கட்சி கூறியுள்ளது.
ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடுகையிலேயே கட்சியின் பொதுச்செயலாளர் நாடாமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்த நாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.
" வடக்கு மாகாணம் ஜனநாயக நீரோட்டத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்ற நிலையில், அங்கு ஆளுநராகக் கடமையாற்றிக்கொண்டிருக்கும் ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியை அப்பதவியிலிருந்து நீக்கி, சிவில்

21

# மாநாட்டை புறக்கணித்தாலும் நேரடியற்ற உதவிகள் தொடரும்

### கனேடிய அரசு அறிவிப்பு

கொழும்பு, ஒக்.29
மனித உரிமைகள் பிரச்சினைகள் தொடர்பில் கவலைகள் இருந்தாலும்- கொழும்பு மாநாட்டை புறக்கணித்தாலும் நேரடியின்றி இலங்கை அரசுக்கு வழங்கி வரும் நிதியுதவிகளில் எந்த பாதிப்பும் ஏற்படாது எனக் கனேடிய அரசு தெரிவித்துள்ளது.
இலங்கையின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு நம்பிக்கைக்குரிய சர்வதேச நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு அரசசார்பற்ற நிறுவனங்கள் ஊடாக நிதியுதவிகளைக் கனடா வழங்கி வருகின்றது என கனேடிய வெளி விவகார மற்றும் வர்த்தக திணைக்களத்தின் ஊடாக தொடர்பு அதிகாரி சார்ளின் பேர்டெட் தெரி

21

# படையினரின் குடும்பங்கள் வலி.வடக்கில் குடியமர்வர்

### இதற்காகவே அங்குள்ள தமிழ் மக்களின் வீடுகள் இடித்து அழிப்பு

### சரவணபவன் எம்.பியிடம் மிரட்டலுடன் கூறினார் இராணுவ அதிகாரி

யாழ்ப்பாணம், ஒக்.29
"எங்களது குடியிருப்புக்களை நிறுவுவதற்கும் குடும்பங்களை குடியமர்த்துவதற்காகவும் நாங்கள் இந்தப் பகுதிகளிலுள்ள வீடுகளை இடித்துத் தரைமட்டமாக்குகின்றோம். நீங்கள் உங்களால் முடிந்ததை செய்து பாருங்கள்" என்று உயர்பாதுகாப்பு வலயத்துக்குப் பொறுப்பானவர் என்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட இராணுவ பிரிகேடியர் ஒருவர் தன்னிடம் நேரில் கூறினார் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரி வித்தார்.
வலி.வடக்கில் உயர்பாதுகாப்பு வலயமாக 6ஆயிரத்து 382 ஏக்கர் நிலம் இராணுவத்தினரால் பிடித்து வைக்கப்பட்டுள்ளது. இதனைச் சுவீகரிப்பதற்கான நடவடிக்கை இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்ட நிலையில் இதற்கு எதிராக மக்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.
இவ்வாறானதொரு நிலையில் கட்டுவன் வடக்கில் உயர்பாதுகாப்பு வலய வேலியினுள் உள்ளடங்கும் வீடுகள் கடந்த சில தினங்களாக இராணுவத்தினரால் புல்டோசர்கள் மூலம் இடித்

21





# வடக்கு கன்னி அமர்வில் விக்கி இனவாதக் கருத்து

### சாடுகிறது தேசப்பற்று இயக்கம்

கொழும்பு, ஒக்.29
முதலமைச்சர் விக்னேஸ்வரன் மாகாண சபை கன்னியமர்வில் தெரிவித்த இனவாதக் கருத்துக்களால் -தமிழர்களுக்கு எதிராக இன மோதல்கள் கொழும்பில் ஏற்பட்டால் என்ன நடக்கும்? அவ்வாறான இன மோதல்கள் உருவானால் அதற்கு முழுப் பொறுப்பும் விக்னேஸ்வரனுடையதே என்று தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பொதுச் செயலர் வசந்த பண்டார தெரிவித்துள்ளார்.
வடக்கில் சிங்கள மக்களைக் குடியமர்த்த இடமளிக்கப் போவதில்லையென்ற விக்னேஸ்வரனின் இனவாதக் கருத்தானது கொழும்பிலும், தெற்கிலும் தமிழ் மக்கள் வாழ்வதற்கு இடமளிக்கப்படமாட்டாதென்ற பயங்கரச் சூழ்நிலையையே உருவாக்கும். இதனால் விக்னேஸ்

21

# படங்கள் பிரசுரமானால் அதன்பின் நடப்பது வேறு


### ஊடகவியலாளர்களுக்கு இராணுவம் மிரட்டல்

யாழ்ப்பாணம், ஒக்.29
வலி.வடக்கில் கட்டுவன் பகுதியில் இராணுவத்தினரால் வீடுகள் இடித்தழிக்கும் நடவடிக்கைகளை நேரில் சென்று ஒளிப்படம் எடுத்த ஊடகவியலாளர்களின் ஒளிப்படக் கருவிகள் இராணுவத்தினரால் பலவந்தமாகப் பறிக்கப்பட்டு அதிலிருந்த ஒளிப்படங்கள் அழிக்கப்பட்டன.
அத்துடன் இந்தச் சம்பவம் தொடர்பில் ஏதாவது ஒளிப்படம் வெளியிடப்பட்டால் அதன் பின்னர் நடப்பது வேறு என்று ஊடகவியலாளர்களுக்கு அச்சுறுத்தலும் விடுத்தார் இராணுவ அதிகாரி ஒருவர்.
வலி.வடக்கில் உயர் பாதுகாப்பு வலயப்பகுதியிலுள்ள வீடுகள்

21

# காணாமற்போனோர் குறித்து 'வெள்ளை வான்' திரைப்படம்

### இந்தியாவில் தயாராகிறது




கொழும்பு.ஒக்.29
இலங்கையில் காணாமற்போதல் சம்பவங்களை மையப்படுத்தி இந்தியாவின் சுயாதீன திரைப்பட நெறியாளரான லீனா மணிமேகலை பிரத்தியேகக் காட்சிகளுடன் கூடிய வெள்ளை வான் என்ற விவரணத் திரைப்படத்தை தயாரித்துள்ளார்.
இரண்டு மணி நேரம் ஓடக்கூடிய இந்த வெள்ளை வான் திரைப்படம் அடுத்த மாதம் பிரிட்டனின் சனல் 4 தொலைக் காட்சியில் ஒளிபரப்பாகவுள்ளது.
இந்த திரைப்படத்தின் 12 நிமிடங்கள் கொண்ட விசேட தொகுப்பு அமெரிக்காவின் சி.என்.என். மற்றும் ஆஸ்திரேலியாவின் ஏ.பி.சி ஆகிய தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பப்பட உள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் கலந்து கொள்ளும் மாநாடு கொழும்பில் நடைபெறவுள்ள நிலையில் உலக தொலைக்காட்சிகள் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்துள்ளமை தொடர்பில் கடும் விமர்சனங்களை முன்

21

# ரயில் மோதி முதியவர் சாவு

கிளிநொச்சி, ஒக். 29
முல்லைத்தீவு திருமுறிகண்டிப் பகுதியில் ரயில் மோதி முதியவர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.
கிளிநொச்சியிலிருந்து கொழும்பு நோக்கி சென்ற தபால் ரயிலிலேயே குறித்த முதியவர் மோதியதில் உயிரிழந்ததாகத்

21

# 4 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி நவம்பர் 7இல் கொழும்பில் போராட்டம்

### சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் களத்தில்

கொழும்பு, ஒக்.29
'கஸினோ' ஊக்குவிப்புச் சட்டவரைபை அரசு முழுமையாக மீளப்பெறவேண்டும், 2014 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் மக்களுக்கு மானியம் வழங்கப்படவேண்டும் ஆகியன உட்பட 4 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பொது எதிர்க்கட்சிகள், தொழிற் சங்கங்கள், சிவில் அமைப்புகள் கூட்டாக இணைந்து எதிர்வரும் 7ஆம் திகதி கொழும்பில் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளன.
இது தொடர்பாக சிவில் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினருடன் பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன என்று தெரிவித்தார் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க. நாட்டிலுள்ள அனைவரும் பேதங்களைக் கடந்து இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க வேண்டும் என்றும்

21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராமசேவகர் நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம். ஒக். 29.
நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நடத்தப்பட்ட கிராம சேவையாளர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சையில் தோற்றி சித்தி பெற்ற யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர் வரும் முதலாம் , 2ஆம் திகதிகளில் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக் கப்பட்டுள்ளது.
நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுவோருக்கான அழைப்புக் கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச் சினால் ஏற்கனவே அனுப்பி வைக்கப் பட்டுள்ளன என்றும்.
சம்பந்தப்பட்டவர்கள் உரிய ஆவணங்களுடன் குறிப்பிட்ட நேரத்துக்கு வருகைதந்து நேர் முகத்தேர்வில் தோற்றுமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கேட்டுள்ளார்.
(ஐ-400)

# சுகாதாரப் பணியாளர்கள் நேற்று அமைச்சு அலுவலகத்தில் கவனவீர்ப்பு

### *நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி*

யாழ்ப்பாணம், ஒக்.29
யாழ். மாவட்டத்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் பணிபுரியும் சமூக சுகாதார பணியாளர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி பண்ணையில் உள்ள வட மாகாண சுகாதார அமைச்சு முன்பாக நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த 150 பேருக்கு மேற்பட்டோர் இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.
குடாநாட்டிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் கட்டம் கட்டமாக இணைத்துக் கொள்ளப்பட்ட பணியாளர்களில் பெரும்பாலானவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படாத நிலையில் நெருக்கடிகளுக்கு மத்தியில் தமது சுகாதார பணியை முன்னெடுத்து வருகின்றனர். கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பான ஆரம்பக் கிளினிக் மற்றும் சிகிச்சைகள் நிறையளத்தல் எனப் பல பணிகளை சில வருடங்களாக செய்து வருகின்றார்கள்.
அவர்களில் 1998 ஆம் ஆண்டிலிருந்து பணிபுரியும் நூற்றுக் கணக்கானோர் இன்று வரை நியமனம் செய்யப்படவில்லை. நியமனம் செய்யும் படி பல தடவை கோரிக்கை விடுத்தும் இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் குற்றம் சுமத்துகின்றனர். நேற்றும் இவர்கள் தமது நியமனத்தை வலியுறுத்தியே கவனவீர்ப்பு போராட்டம் நடத்தினர்.
இதன்போது வடமாகாண சுகாதார அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம் அவர்களது பிரச்சினைகள் கோரிக்கைகளை கேட்டறிந்ததுடன்,
வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் ஏராளமானோர் இவ்வாறு பணி புரிந்து வருகின்றனர்.15 வருடங்களாக பணி புரிவோரும் இதுவரை நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. அவர்களது கோரிக்கைகள் நியாயமானவை.
ஆனால் மாகாண சபை தெரிவு செய்யப்பட முன்னர் சிற்றூழியர்கள் என்ற பலருக்கு நியமனம் கொடுத்த போது இந்தச் சமூக சுகாதார பணியாளர்களுக்கு நியமனம் வழங்காது விட்டது பிழையானது.
அரசியல் செல்வாக்கு மற்றும் தனிப்பட்ட நலன்கள் காரணமாக சுகாதார தொழிலாளர்களாக இல்லாத அதனுடன் எவ்வகையிலும் தொடர்புபட்டிராத பலருக்கு நியமனம் வழங்கப் பட்டுள்ளது.
500 - 600 வரையான தொண்டர்கள் 5 வருடங்களுக்கும் மேலாக பணிபுரிகின்றனர்.
எனவே நியமனங்கள் செய்வதற்கு பதவி வெற்றிடம் உள்ளனவா என்று பார்த்தல் வேண்டும். அவைஇனங்காணப்பட்டுசிற்றூழியர் நியமனத்தின் போது சுகாதாரத் தொண்டர்களுக்கு நியமனம் கொடுப்பேன்.
சேவைக் காலத்தையும், தகுதியையும் முன்னுரிமைப்படுத்தியே நியமனம் வழங்கப் படும்- என்றார். (ஐ-4)

## சிறந்த சனசமூக நிலையங்கள் தெரிவு

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலி. மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் சிறந்த சனசமூக நிலையங்களை தெரிவு செய்யும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமையும் நாளைமறுதினம் வியாழக் கிழமை இடம்பெறவுள்ளது.
இதற்கான நடவடிக்கைகளை வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி நா.ஐங்கரன் மேற்கொண்டுள்ளார்.
இன்று சுழிபுரம், சங்கானை ஆகிய பகுதிகளிலும் நாளை மறுதினம் வட்டுக்கோட்டை அராலி ஆகிய பகுதிகளுக்கும் நேரடியாகச் செல்லும் பிரதேச சபையின் தலைமை உத்தியோத்தர்களால் சிறப்பாக இயங்கும் சனசமூக நிலை யங்கள் தெரிவு செய்யப்படவுள்ளன.
தெரிவு செய்யப்படும் 10 சிறந்த சனசமூக நிலையங்களுக்கு விருதுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன என பிரதேச சபைத் தவிசாளர் திருமதி ஐங்கரன் தெரிவித்துள்ளார். (து-400-41)

# சுற்றறிக்கை எதுவும் இல்லாமல் சுகாதாரப் பணியாளர் ஆள்சேர்ப்பு

### *பெரும்பான்மை இனத்தவரும் பங்கேற்றனர்*

யாழ்ப்பாணம். ஒக். 29.
சுற்றறிக்கை எதுவும் விடுக்கப் படாமல் யாழ். போதனா வைத்தியசாலைக்கு சுகாதாரப் பணியாளர்களை இணைத்துக் கொள்ளும் நேர்முகப் பரீட்சை திடீர் என்று இரகசியமாக நடத் தப்பட்டுள்ளது.
இந்த நேர்முகப்பரீட்சைக்கு பெரும்பான்மை இனத்தவர்களும் கொழும்பில் உள்ள தமிழ் அமைச்சர் சிபார்சு செய்தவர்களும் வாகனத்தில் வந்து கலந்து கொண்டதாகத் தெரிய வருகின்றது.
சுற்றறிக்கை விடுக்கப்படாதமையினால் நேர்முகத்தேர்வு நடப்பது பற்றி பலருக்குத் தெரிந்திராத நிலையில் இங்குள்ள கட்சி ஒன்று தமக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் தொலைபேசி வாயிலாக அறிவித்து அவர்களை நேர்முகத்தேர்வில் பங்கு கொள்ள வைத்தமை குறித்து விசனம் வெளியிடப் பட்டுள்ளது.
தகுதியிருந்தும் நேர்முகத் தேர்வுக்குத் தோற்ற முடியாமல் போனமை குறித்து இளைஞர். யுவதிகள் விரக்தி அடைந்துள்ளனர்.
அரச பொது நிறுவனங்களக்கு ஆள்சேர்ப்புச் செய்வதாயின் அது தொடர்பான சுற்றறிக்கை விடுக்கப்பட வேண்டும். இதன் அடிப்படையில் தகுதியானவர்கள் விண்ணப்பிப்பர். திறந்த நேர்முகத்தேர்வும் நடத்தப் படும். என்று மருத்துவர்கள் தெரிவிக்கின்றனர்.
ஆனால் இது தொடர்பில் சுகாதார அமைச்சு சுற்றறிக்கை எதனையும் வெளியிடவில்லை இங்குள்ள அமைச்சர் ஒருவரின் பணிப்பின் பேரில் மட்டும் நேர்முகத் தேர்வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவும் இணைந்தே இந்த நேர் முகத் தேர்வை நடத்தியதாக வைத்தியசாலைத் தொண்டர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.
கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இந்த நேர்முகத் தேர்வில் ஆயிரத்து 63பேர் பங்கு பற்றியிருந்தனர்.
இவர்கள் பல்வேறு இடங்களைச் சேர்ந்தவர்கள் நேர்முகத் தேர்வு நடத்தப்படுவது குறித்து அவர்களுக்குச் சில நாள்களுக்கு முன்னர் தொலைபேசி மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேர்முகத்தேர்வுக்கு வந்தவர்களில் 800இற்கு மேற்பட்டோர் வைத்திய சாலையுடன் தொடர்பு இல்லாதவர்கள் என்று தொண்டர்கள் தெரிவித் துள்ளனர்.
கொழும்பில் இருந்து சுகாதார அமைச்சின் அதிகாரிகள் யாழ். போதனா வைத்திய சாலைக்கு வந்தே நேர்முகத்தேர்வை நடத்தியுள்ளனர். எனினும் நேர்முகத்தேர்வு சனிக்கிழமை நடத்தப்படுவது தொடர்பில் முதல் நாள் வெள்ளிக்கிழமை தமக்கு அறிவிக்கப்பட்டதாக வைத்தியசாலை நிர்வாகத் தரப்பு கூறுகின்றது.
இந்த ஆள்சேர்ப்புக்கு சுற்றறிக்கை வெளியிடப்படவில்லை. என்பதனை வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவின் செயலாளர் இரா. செல்வவடிவேல் உறுதிப்படுத்தினார்.
வைத்தியசாலையில் பணிபுரியும் தொண்டர்கள் அனைவரது பெயரையும் முன்னர் சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைத்ததாகவும் ஜீ.சீ.ஈ சாதாரண தரத்தில் சித்தியடைந்தவர்களின் பெயர்கள் மட்டும் நேர் முகத்தேர்வுக்கு அழைக்கப்பட வேண்டிய பெயர்ப்பட்டியலாக வந்திருந்ததாகவும். திறந்த நேர்முகத்தேர்வு என்று கூறியமையினால் தொண்டர்கள் மட்டுமல்ல பலதரப்பட்டவர்களும் தொலைபேசி மூலம் நேர்முகத்தேர்வுக்கு அழைக் கப்பட்டனர். என்றும் அவர் மேலும் கூறினார். (து-4)

## கல்வி அமைச்சர் உறுப்பினருக்கு தருமபுரத்தில் நேற்று கௌரவிப்பு



யாழ்ப்பாணம், ஒக்.29
வடமாகாண கல்வி அமைச்சர் மற்றும் இருமாகாண சபை உறுப்பிர்களை வரவேற்று கௌரவிக்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி தருமபுரம் மகாவித்தியலயத்தில் நடைபெற்றது.
கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் செ.புஸ்பராசா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மாகாண சபை உறுப்பினர்கள் கல்வியமைச்சர், கரைச்சிப் பிரதேச சபையின் தலைவர் உறுப்பினர்கள், நெத்தலியாறு சிறி முத்தி விநாயகர் முத்துமார் ஆலயத்தின் முன்றலில் இருந்து தருமபுரம் மகா வித்தியாலய மாணவர்களின் பான்ட் வாத்திய அணி வகுப்புடன் அழைத்து வரப்பட்டனர்.
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெல்ல வைக்க வாக்களித்த மக்களுக்கு நன்றிகளைத் தெரிவித்தார் கல்வியமைச்சர்.
நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ-6)

## இந்திய மீனவருக்கு விளக்கமறியல்

எழுவைதீவு கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 15 இந்திய மீனவர்களையும் மேலும் 14 நாள்களுக்கு விளக்க மறியலில் வைக்குமாறு ஊர்காற்றுறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
இந்திய புதுக் கோட்டை ஜனதா பட்டினத்தைச் சேர்ந்த 15 மீனவர்கள் நான்கு படகுகளில் எழுவைதீவுக் கடற்பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை காரைநகர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.
கைது செய்யப்பட்ட 15 மீனவர்களும் அவர்களது படகுகள் நான்கும் யாழ். மாவட்ட கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் துறை திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டதை அடுத்து அவர்களுக்கு எதிராக கடந்த 15 ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட போது 15 மீனவர்களையும் 14 நாள்கள் விளக் கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டிருந்தார்.
இந் நிலையில் குறித்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது அவர்களை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் எம். எஸ். மகேந்திரராஜா உத்தரவிட்டார். (து-400)

## யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை புதிய அதிபர் தெரிவுக்கு எதிர்ப்பு

### *மாகாணக் கல்வி அமைச்சருக்கு மனுக்கள்*

யாழ்ப்பாணம், ஒக்.29
யாழ். இந்து ஆரம்பப் பாடசாலைக்கு புதிதாக நியமிக்கப் பட்ட அதிபரின் தெரிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், நீதியான முறையில் நேர்முகத் தேர்வை நடத்துமாறு கோரியும் பாடசாலைச் சமூகத்தினர் பெற்றோர் வடக்கு மாகாணக் கல்வி அமைச்சருக்குத் தனித்தனியே மனுக்களை அனுப்பியுள்ளனர்.
இதுவரை காலமும் பதில் அதிபராகக் கடமையாற்றிய பிரதி அதிபரைத் தொடர்ந்தும் அதிபராகக் கடமையாற்ற அனுமதிக்க வேண்டும் என்றும், நீதியான முறையில் நேர்முகத் தேர்வை நடத்த வேண்டும் என்றும் கோரியே ஆசிரி யர்கள், மாணவர்கள், மற்றும் பெற்றோர் மனுக்களை அனுப்பி வைத்துள்ளனர். (து-400)




# 720 பேரே இதுவரை மீண்டும் வாக்காளராக சேர்க்க விண்ணப்பம்

யாழ்ப்பாணம், ஒக்.29
இந்த ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியலிலிருந்து 26 ஆயிரம் பேர் நீக்கப்படுகின்ற நிலையில், அந்த பட்டியலிலுள்ள 720 பேரே தம்மை மீளவும் இணைத்துக்கொள்ள யாழ். மாவட்ட தேர்தல் திணைக் களத்துக்கு விண்ணப்பித் துள்ளனர்.
வாக்காளர் பெயர்ப் பட்டியலுக்கான மீளாய்வு நாளை புதன் கிழமையுடன் முடிவடையவுள்ள நிலையில் பெருமளவானோர் இன்னமும் உரிமைக் கோரிக்கைப் படிவத்தினூடாக விண்ணப்பிக்காத நிலைமையே காணப்படுகின்றது.
இந்த ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப்பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த ஜீன் மாதத்திலிருந்து இடம் பெற்று வருகின்றன. இந்த நிலையில் வாக்காளர் பெயர்ப்பட்டியலில் புதிதாகச் சேர்க்கப்படுபவர்கள் நீக்கப்படுபவர்களின் பெயர்கள் இந்த மாதம் இரண்டாம் திகதியிலிருந்து கிராம சேவையாளர் அலுவலகங்கள், பிரதேச சபைகள், தேர்தல் திணைக் களம் என்பவற்றில் காட்சிப் படுத்தப்பட்டுள்ளது.
புதிய பட்டியலின் பிரகாரம் 26 ஆயிரம் பேரின் பெயர்கள் வாக்காளர் பெயர்ப்பட்டியலிலிருந்து நீக்கப்படுகின்றன. நீக்கப்படுபவர்கள் உரிமைக் கோரிக்கைப் படிவத்தைச் சமர்ப்பித்து தமது பெயர்களை இணைத்துக் கொள்ள முடியும்.
இதுவரையில் யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில் 720 பேரே உரிமைக் கோரிக்கை படிவத்தினூடாக தமது பெயர்களை மீள இணைக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (து-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கத்தவரின் ஒத்துழைப்பால் முழுமையான சேவை வழங்குகிறோம்

## கூட்டுறவு தின விழாவில் ப.தெ.கூ.ச. சமாசத் தலைவர் பெருமிதம்






யாழ்ப்பாணம், ஒக். 29

காலத்துக்குக் காலம் பல சவால்களுக்கு முகம் கொடுத்து வரும் பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் அங்கத்தவர்களின் ஒத்துழைப்பால் முழுமையான சேவையை வழங்கி வருகின்றன. இதே விதத்தில் எதிர் காலத்திலும் திறமையான சேவையை வழங்க உரிய ஆலோசனைகள், வழி காட்டல்கள் சங்கத்துக்கு தேவை யாகவுள்ளன என்று வட மாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலை வர் நா.கணேசன் தெரிவித்தார்.

வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஏற்பாட்டில் 91 ஆவது சர்வ தேச கூட்டுறவு தின விழாவும் கௌரவிப்பு விழாவும் நேற்று சமாச கூட்டுறவாளர் மண்டபத்தில் இடம் பெற்றது. இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

42 வருடங்களாக சங்கங்களால் சமாசத்துக்கு முழுமையான பங்களிப்புகள் வழங்கப்பட்டு வருவதால் காலத்துக்குக் காலம் பல சவால்கள், நெருக்கீடுகளை எதிர்கொள்ள நேரிட்ட போதும் சங்கங்கள் திறமையாக செயற்படக் கூடியதாக இருந்தன. சங்கங்களை தகுந்த முறையில் வழி நடத்துவதற்கான ஆலோ சனைகளை வெளியில் இருப் பவர்களும் வழங்க வேண் டும்.

பொதுவாகவே மது என்றால் பல பார்வைகள் சமுதாயத்தில் உள்ளது. எனினும் நெருக்கீடுகளுக்கு மத்தியில் வடி சாலைகளில் உற்பத்தி செய்யப்படுகின்ற சாராயத்தை விற்பனை செய்ய முடியாத நிலைமையும்பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உள்ளன.

கடந்த கால, நிகழ்கால நெருக்கடிகள் இருந்தாலும் அதனையும் தாண்டி முன்னேற்றம் காணவேண்டிய தேவை உள்ளது. பனை அபிவிருத்திச் சபை மற்றும் மாகாண சபையின் ஆலோசனைகளுக்கு அமைவாக சரியான திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். இதனூடாகபனை, தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் முன்னேற்றப்பட வேண்டும்- என்றார். இந்த நிகழ்வில் 2012 ஆம் ஆண்டின் சிறந்த அங்கத்தவர்கள், பணி யாளர்கள் கௌரவிப்பு, 2012 ஆம் ஆண்டில் தரம் 5 புல மைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிப்பு, 2012 ஆம் ஆண்டில் உயர் கல்வி வாய்ப்பு பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு, 91 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில் வழங்கல், 2012 ஆம் ஆண்டில் தெரிவான சிறந்த சங்கங்களுக்கு பரிசில் வழங்கிக் கௌரவித்தல் ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பசுபதி சீவரத்தினம், யாழ்.கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன், மாவட்டக் கூட்டுறவு அபி விருத்தி அலுவலர் பொ.மோகன் ஆகியோரும் சங்கங் களின் தலைவர்கள், முகாமையாளர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர். (வ-14)

## கேதீஸ்வரத்துக்கு நிதி திரட்டிய போலிச் சாமியார் சிக்கினார்

பளை, ஒக். 29

திருக்கேதீஸ்வரம் ஆலயத்துக்கென நிதி திரட்டிய போலிச் சாமியார் பொலிஸாரிடம் சிக்கினார்.




200 ரூபாவுக்கான பற்றுச் சீட்டை (ரசீதை) அச்சிட்டு இந்த (ஆ)சாமி, பொதுமக்களை ஏமாற்றிப் பணம் அற விட்டு வந்துள்ளார். "திருக்கேதீஸ்வரம் கோயில் நரசிங்கசாமி மடாலயம்" என்ற அந்த போலியான பற்றுச் சீட்டில்-

சிவராத்திரி மற்றும் உற்சவ காலத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்க பணம், பொருள் போன்ற உதவிகள் புரியுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அந்தப் பிரசுர சீட்டு காணப்பட்டது.

அடிக்குறிப்பாக, மணியம் சாமியார், சிவரூபசிறி சாமியார், சிவலிங்கம் நடராசா சாமியார், மாரிமுத்து நவரத்தினம் சாமியார் திருக்கேதீஸ்வரம், மன்னார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

முகமாலை வடக்குப் பகுதியில் வீடு வீடாகச் சென்று இவர் பணம் திரட்டிய சமயம், பொதுமக்கள் வழங்கிய தகவலை அடுத்து இந்த ஆசாமியைப் பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.

விசாரணையின் போது "மடாலயத்துக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. பணத்தேவைக்காகவே இவ்வாறான ஏமாற்று நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தேன்" எனக் கூறியுள்ளார் அந்த ஆசாமி. (ஓ-9)

## நீண்ட காலத்தின் பின்னர் அனலைதீவில் நெற் செய்கை

யாழ்ப்பாணம், ஒக்.29

நீண்டகாலமாக நெற் செய்கையில் ஈடுபடாத அனலைதீவு விவசாயிகள் இந்த முறை நெற்செய்கையில் ஈடுபடுவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுத்துள்ளனர்.



அனலைதீவு தெற்கு ஜே/38 கிராம அலுவலர் பிரிவில் உள்ளபண்டர வயல்,பொருக்கு வயல் பகுதிகளில் 785 பரப்புக்கொண்ட காணியில் அனலைதீவைச் சேர்ந்த வெளிநாட்டில் வதியும் ஒருவரின் உதவியுடன் எல்லைகளை அமைத்து விவசாயிகள் நெல் உற்பத்தியில் ஈடுபடவுள்ளனர். இதேவேளை தாழ்வான இந்தப் பகுதியில் நெற் செய்கையை மேற்கொள்ள ஆர்வம் கொண்டுள்ள விவசாயிகள் குறித்த பகுதியில் உற்பத்தி கணிசமான முன்னேற்றத்தைத் தரும் என்ற நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் தெரிவித்தனர். (வ-7)

## சாவகச்சேரி மீன் சந்தைக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நாளை

தென்மராட்சி, ஒக்.29


சாவகச்சேரி பொதுச் சந்தையுடன் இருந்த மீன் சந்தை தனங்கிளப்பு வீதியில் உள்ள நகரசபைக்குச் சொந்தமான காணியில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நாளை புதன்கிழமை நட்டுவைக்கப்படவுள்ளது.

சுமார் 80 லட்சம் ரூபா செலவில் நவீன வசதிகளுடன் மீன் சந்தை, சபை நிதியில் அமைக்கப்படவுள்ளதாக நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். மீன் சந்தையுடன் கருவாடு விற்பனை நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

பொதுச் சந்தையுடன் இயங்கிவந்த இறைச்சி விற்பனைப் பிரிவுகள் கடந்த வருடம் தனங்கிளப்பு வீதியில் அமைக்கப்பட்டு இயங்கிவருவதாகவும் இறைச்சிக் கடைகளுக்கு முன்பாக மீன் சந்தை நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (வ-9)





நானாட்டான் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பொன்தீவுக்கண்டல் கிராமத்தில், அந்தக் கிராமத்துடன் தொடர்பு இல்லாத வேற்று ஆள்களைக் குடியேற்றுவதை ஆட்சேபித்து அந்தக் கிராம மக்கள் நேற்றைய தினம் பதாகைகளை ஏந்தியவாறு நானாட்டான் பிரதேச செயலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (க-12)

## வெளிவாரிப் பரீட்சை பெறுபேறுகளை பார்வையிடலாம்

யாழ்ப்பாணம், ஒக்.29

யாழ்.பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பரீட்சைகள் அலகினால் நடத்தப்பட்ட பரீட்சைகளுக்கான பரீட்சைப் பெறுபேறுகள் கடந்த 23 ஆம் திகதி வெளியாகியுள்ளன. இசைமாணி, நடனமாணி, சிறப்பு கலை மாணி (நுண்கலை) பகுதி I, சிறப்பு கலை மாணி (கிறிஸ்தவ நாகரிகம்) பகுதி I,II,III ஆகியவற் றின் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. பரீட்சார்த்திகள் இன்று செவ்வாய்க்கிழமை தொடக்கம் வெளிவாரி பரீட்சை அலகில் பெறு பேறுகளைப் பார்வையிடலாம் என்று யாழ். பல்கலைக் கழக வெளிவாரிப்பட்டப் பதிவுகள் மற்றும் பரீட்சைகள் அலகின் இணைப்பாளர் அறிவித் துள்ளார். (வ-14)

## சண்டிலிப்பாய் பகுதியில் புகையூட்டல் நடவடிக்கை

### டெங்கு நோயாளிகள் இனங்காணப்பட்டதை அடுத்து

வலி.தென்மேற்கு, ஒக்.29

சண்டிலிப்பாய் சுகாதார அதிகாரி பிரிவில் இருவர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டமையைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் புகையூட்டல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சுகாதாரப் பகுதியினர் டெங்கின் தாக்கம் குறித்து, மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்பாட்டையும் மேற்கொண்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள கூழாவடி என்னும் இடத்தைச் சேர்ந்த இருவர் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டுள்ளமை வைத்திய பரிசோதனைமூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதையடுத்து டெங்குநோயை ஏற்படுத்தும் நுளம்புகளின் உற்பத்தியைக் கட்டுப்படுத்[illegible] சுகாதாரப் பகுதியினர் இனங்காணப் பட்ட நோயாளிக[illegible]ல் புகையூட்டலை மேற்கொண்டுள்ளதுடன் நுளம்புகள் உற்பத்தியாகக் கூடிய தடயப் பொருள்களை அழித்துவிடுமாறும் மக்களுக்கு அறிவுரை வழங்கியுள்ளனர்.



இதேவேளை, சுதுமலை, ஆனைக்கோட்டை, சாவற்கட்டு ஆகிய கிராமங்களில் வயிற்றோட்ட நோய் பரவியுள்ளதால் அந்தப் பகுதிகளிலுள்ள கிணறுகளுக்கு குளோரின் இடுவதில் ஈடுபட்டுள்ள சுகா தாரப் பகுதியினர் ஒலிபெருக்கிமூலம் டெங்கு நோய் குறித்த பரப்புரையிலும் ஈடுபட்டனர். (வ-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழகத் தலைவர்கள் கண்டனம்



## பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பதாக குர்ஷித் வெளியிட்ட கருத்துக்கு

சென்னை, ஒக்.29

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கப் போவதாக மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்த கருத்துக்கு தே.மு.தி.க. விஜயகாந்த், பா.ம. க. தலைவர் ராமதாஸ் மற்றும் தங்கபாலு உள்ளிட்ட தமிழக அரசியல் கட்சித் தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

குர்ஷித் கருத்துக்குக் கண்டனம் தெரிவித்துள்ள தலைவர்கள் இந்தியாவின் சார்பில் பிரதமரோ, மத்திய அமைச்சரோ அல்லது இந்திய அரசின் பிரதிநிதிகளோ எவரும் பங்கேற்கக்கூடாது என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

இதுதொடர்பாக தமிழகத் தலைவர்கள் வெளியிட்ட கருத்து வருமாறு

**தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த்**

"பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்றால் இலங்கையில் இனப் படுகொலையே நடைபெற வில்லை என்று கூறிவரும் இலங்கை அரசை இந்தியா அங்கீகரிப்பது போல அமைந்துவிடும். எனவே இந்தக்கூட்டத்தை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்று தே.மு.தி.க. வலியுறுத்துகிறது.

இலங்கையில் வடக்கு மாகாணத்தில் விக்னேஸ்வரன் முதல் வராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஆனால் அவரது கட்டுப்பாட்டில் பொலிஸ் இருக்காது என்று ஒரு நாட்டு ஜனாதிபதி கூறுகிறார் என்றால் இது என்ன கண்துடைப்பு நாடகமா? மக்கள் தான் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

மஹிந்தவை எதிர்த்தால் தான் தமிழர்கள் நிம்மதியாக இருக்க முடியும் என்பதை விக்னேஸ் வரனிடம் கூறிக் கொள்ள விரும்புகிறேன் "என் றார் விஜய்காந்த்.

**பா.ம.க. தலைவர் ராமதாஸ்**

"பொதுநலவாய மாநாட்டில் இந்தியா நிச்சயமாகப் பங்கேற்கும் என்று கூறியுள்ள சல்மான் குர்ஷித்தைப் பதவியில் இருந்து நீக்கம் வேண்டும். இந்தியா பங்கேற்கக் கூடாது என்று ஒட்டுமொத்த தமிழக மக்களும் வலியுறுத்தி வரும் நிலையில் இந்தியா பங்கேற்கும் என்று சல்மான் குர்ஷித் கூறியிருப்பது ஒட்டுமொத்த தமிழக மக்களின் உணர்வுகளையும் புண்படுத்தும் செயலாகும்.

பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்ளாமலும் இலங்கையுடன் உறவு வைத்துக் கொள்ளாமலும் தமிழக மீனவர்களின் பிரச்சினை களை எவ்வாறு தீர்ப்பது என்று சல்மான் குர்ஷித் கூறியிருப்பது குரூரமான நகைச் சுவையாகும்.

எனவே ஈழத்தமிழர் பிரச்சினையையும், தமிழக மீனவர் பிரச்சினையையும் தொடர்ந்து அவமதிப்பு செய்துவரும் குர்ஷித்தை பிரதமர் உடனடியாகப்பதவிநீக்க செய்ய வேண்டும். பொதுநலவாய அமைப்பில் இருந்து இலங்கையை நீக்க பிரதமர் மன்மோகன் சிங் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார் ராமதாஸ்.

**காங்.தலைவர் கே.வீ. தங்கபாலு**

"கடந்த வாரம் புதுடில்லி சென்று தமிழக மக்களின் உணர்வுகளைப் பிரதமரி டம் எடுத்துக் கூறினோம். எனவே அதைப் புரிந்து கொண்டு, இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டை பிரதமர் மன் மோகன் சிங் புறக்கணிக்க வேண்டும்.

இந்தியா பங்கேற்கும் என வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் தெரிவித்துள்ளார். இந்த விடயத்தில் பிரதமர் தான் இறுதி முடிவு எடுக்க வேண்டும்'' என்றார் தங்கபாலு.

# தனுஷ்கோடியில் இலங்கை அகதிகள் நால்வர் கைது

தனுஷ்கோடி, ஒக்.29

தனுஷ்கோடியில் இருந்து படகு மூலம் இலங்கைக்குத் தப்பிச் செல்ல முயன்ற 4 அகதிகளை இந்திய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இலங்கை மன்னார், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களான சந் திரசேகர் அவரது மனைவி மற்றும் அனோஜன் , ஏசு ராஜ் ஆகிய 4 பேரும் 1990 மற்றும் 2006 இல் அகதிகளாக தமிழகம் சென்றனர்.

அவர்கள் அறந்தாங்கி, ஈரோடு, திருப்பூர் முகாமில் தங்கினர். பின் முகாமில் இருந்து வெளியேறி கோவையில் பெயிண்டிங் வேலை செய்தனர்.

இதில் போதுமான வருமானம் இல்லாததால் மீண்டும் தனுஷ் கோடி வழியாக படகில் சட்ட விரோதமாக இலங்கை செல்லத் திட்டமிட்டனர். இதற்காக முகவரிடம் 35 ஆயிரம் வாடகை பேசி முற்பணம் 5 ஆயிரம் ரூபா கொடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் தனுஷ் கோடி பாறையடி எனும் கடற்கரைக்கு நான்கு பேரும் வந்தனர். பொலிஸார் 4 பேரையும் பிடித்து விசா ரித்து வருகின்றனர்.

**போதுமான வருமானம் இல்லாததால் மீண்டும் தனுஷ் கோடி வழியாக படகில் சட்ட விரோதமாக இலங்கை செல் லத் திட்டமிட்டனர்.**

தப்பிச் சென்ற தனுஷ்கோடி முகவர் முருகேசன் என்பவரை பொலிஸார் தேடி வருகின்றனர்.

இதுகுறித்து அகதிகள் கூறியதாவது:

பெயிண்டிங் வேலையில் போதுமான வருமானம் இல்லாமல் அவதிப்பட்டோம். அதனால் தனுஷ்கோடியில் இருந்து இலங்கை சென்று, கடவுச்சீட்டு பெற்று டுபாய் செல்ல முடி வெடுத்தோம் எனத் தெரிவித்தனர். (வ)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 29.

யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் பொது முகாமையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று செவ் வாய்க் கிழமை பி.ப. 1 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலில் .மேற் குறித்த சங்கங்களின் பொது முகாமையாளர்கள் தவறாது சமூகம் கொடுக்குமாறு யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் வீ.கே. அருந்தவநாதன் கேட்டுள்ளார். (த-19)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி இரத்தினம் சிவமணி



கோப்பாய் வடக்கு, இலகடியைப் பிறப்பிடமாகவும், கருவப்புலம் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாக வும் கொண்ட திருமதி இரத்தினம் சிவமணி நேற்று (28.10. 2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இரத்தினத்தின் அன்பு மனைவியும், சோதிநாதன், பிறேமநாதன், சிவநாதன், சர்வலோக நாதன், விமலநாதன், பேரின்பநாதன் ஆகியோரின் அன்புத் தாயும், லோகேஸ்வரி, மகேஸ்வரி, பூபதி, விஜயமலர், ரஞ் சிதா ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2013) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கருவப்புலம் வீதி,
கொக்குவில் கிழக்கு.
(33561.17-14)
தகவல்:
குடும்பத்தினர்.

### சுப்பிரமணியம் லோகநாதன்

*(முன்னாள் மக்கள் வங்கி முகாமையாளர், நெல்லியடி)*

புலோலி உபயகதிர்காமத்தைப் பிறப்பிடமாகவும், செட்டித்தெரு பருத் தித்துறையை வசிப்பிட மாகவும் கொண்ட சுப்பிரமணியம் லோகநாதன் கடந்த (25.10.2013) வெள்ளிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் (கண்டாவளை விவசாயி) தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், பொன்னம்பலம் தம்பதியரின் அன்பு மருமகனும் , கமலாசினிதேவியின் அன் புக் கணவரும், இந் துமதி (லண்டன்), அன்புமதி (PHILIPPINES) மதியழகன் (கனடா), வளர்மதி (கனடா), அருள்மதி (கனடா), இராசமதி (கனடா) ஆகி யோரின் தந்தையும், பானு பதிப்பிள்ளை (லண்டன்), Dr. கணேசலிங்கம், தில்லைநாயகி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற விநாசித்தம்பி மற்றும் இலட்சுமிப்பிள்ளை, சுப்பிரமணியம், அருணகிரி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (01.11.2013) வெள்ளிக்கிழமை றொரண்டோ கனடாவில் நடைபெறும். இந்த அறிவித் தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உ பய கதிர்காமம்,
புலோலி.
(33259.17-14)
தகவல்:
Dr. ச. கணேசலிங்கம்
(சகோதரர்)

## மரண அறிவித்தல்கள்

### இராமலிங்கம் சிவசுப்பிரமணியம்



வதிரி, இரும்புமதவடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட இராமலிங்கம் சிவசுப்பிரமணியம் கடந்த (25.10.2013) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராமலிங்கம்-பொன்னம்மா தம்பதியரின் ஏக புதல்வனும், காலஞ்சென்ற வீரகத்திப்பிள்ளை-செல்லம்மா தம்பதியரின் மருமகனும், மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும், முகுந்தன் (விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசியகல்வியற் கல்லூரி) திருமதி லிங்கநாதன், லதா, திருமதி ராஜ்குமார் சுகதா ஆகியோரின் தந்தையும், சிவரஞ்சினி, லிங்க நாதன், ராஜ்குமார் ஆகியோரின் மாமனும், சதுசன், மேதுஷன், கிருஷ்டிகா, ஆர்த்திகா, அயன், லதீஸ், லக்ஷிகா, லதுசா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.30 மணியளவில் அவரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இரும்புமதவடி, வதிரி,
கரவெட்டி.
(29581)
(10,14)
தகவல்:
குடும்பத்தினர்.

### ஜெயராஜா ஜெனாட்றீகன்



யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை தற்காலிக வதிவிட மாகவும் கொண்ட ஜெயராஜா ஜெனாட்றீகன் (27-10-2013) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் அகாலமரணமானார்

அன்னார் காலஞ்சென்ற ஜெயராஜா மற்றும் கிறிஸ்ரினா தம்பதியினரின் அன்பு மகனும் ஜானகியின் அன்பு கணவரும் ஜெனாட்ராஜ் (விவசாய பீடம், யாழ். பல்கலைக்கழகம்) ஜெனாட்சன், கிறிஸ்ரிஜீனத் (மாணவி, திருக்குடும்ப கன்னியர் மடம் A/L 2013) ஆகியோரின் அன்பு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

32, கோணாவளை லேன் கொக்குவில். 021 2212316 தகவல் குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### விசுவலிங்கம் இராசேந்திரன்

(ஓய்வுபெற்ற கணக்காய்வு லிகிதர், கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனம்)



கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கரணவாயை வசிப்பிடமாகவும் கொண்ட விசுவலிங்கம் இராசேந்திரன் நேற்று முன்தினம் (27.10.2013) ஞாயிற்றுக்கிழமை காலமனார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் மங்கயர்க்கரசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, மகேஸ்வரி, மகேந்திரன், நாகேந்திரன், புவனேந்திரன் மற்றும் நகுலேந்திரன், தெய்வேந்திரன், பாலேந்திரன் அகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தம்பையா- ஞானம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சித்திரா லெட்சுமியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான வசு மதி, இரவீந்திரன் மற்றும் மாலதி, புவீந்திரன் (கனடா) ஆகியோ ரின் அன்புத் தந்தையும், லயன் பிரபாகரன் (R.M.C), பாலசுப் பிரமணியம், புஸ்பரஞ்சினி (கனடா) ஆகியோரின் பாசமிகு மாமனும், பிரசன்னா, மதுஷா, நிதாப்ரன், நிர்மலதாசன், தனசேகர், அனுஷா, பரணீதரன், சுனிதா, ஜீவிதா (கனடா), பிரவீனா(கனடா), கிருஷானி (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும், நிவர்ஷனா, நிலுக்ஷன், சஸ்விந் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.10.2013) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர் கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சந்திரோதயம், கரணவாய், கரவட்டி. 021 3734024 (33561.17-14) தகவல்: பிரபாகரன் (R.M.C - மருமகன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் பெண் காயம்

வலி.வடக்கு, ஒக்.29

விறகுடன் நடந்து சென்ற பெண்ணை பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியது இதில் குறித்த பெண் முகத்தில் பலத்த காயங்களுக்கு உள்ளான ஞாயிற்றுக்கிழமை மாலை தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

கீரிமலை, ஆலடி சந்தியைச் சேர்ந்த குடும்பப் பெண்ணான பாலசுப்பிரமணியம் ஸ்ரீமதி (வயது-42) என்பவரே முகத்தில் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவராவார்.

கீரிமலை கருகம்பனை சந்திக்கு அண்மையாக குறித்த விபத்து இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளில் வந்து பெண் மீது மோதிய குறித்த நபர் அந்தப் பகுதியில் உள்ள பொதுமக்களால் பிடிக்கப்பட்டு காங்கேசன்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (வ-86)



## எரிகாயங்களுடன் இளைஞர் மருத்துவமனையில்

தென்மராட்சி, ஒக்.29

இரவு உணவு உண்பதற்காக வீட்டுக்குள்ளிருந்த குப்பி விளக்கை எடுத்துச் சென்ற வேளையில் விளக்கிலிருந்த எண்ணெய் உடலில்பட்டு சிதறி தீப்பற்றிக் கொண்டதில் இளைஞர் எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு மட்டுவிலில் இடம்பெற்றது.

அதேஇடத்தைச் சேர்ந்த மாணிக்கம் மயூரன் (வயது-22) என்னும் இளைஞரே எரிகாயங்களுக்கு இலக்கான நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிசைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (வ-9)

# இராணுவப் பிரசன்னம் சிவில் நிர்வாகத்துக்கு தடை

*வடக்கு விவசாய அமைச்சர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஒக்.29

வடக்கில் இராணுவத்தினரின் பிரசன்னம் இருக்கும் வரை சிவில் நிர்வாகத்தில் தடை இருந்து கொண்டே இருக்கும். விடுதலைப்புலிகள் பயன்படுத்தினார்கள் என்பதற்காக கிட்டுப்பூங்கா உட்பட அனைத்தையும் இராணுவத்தினர் கையகப்படுத்துவது ஏற்றுக்கொள்ளமுடியாது. இவ்வாறு தெரிவித்தார் வடமாகாண விவசாய அமைச்சர் பொ. ஐங்கரநேசன்.

> “ நல்லூரிலுள்ள கிட்டுப் பூங்காவை இராணுவத்தினர் கையகப் படுத்தியுள்ளதாக தெரிய வந்துள்ளது. எமது இளம் சிறார் களுக்கு மன நிறைவான பயிற்சியை பொழுது போக்கைக் கொடுக்கவல்லதாக அத்தகைய பூங்கா உள்ளது.

வடமாகாண முதலமைச்சர் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களை வரவேற்கும் முகமாக நல்லூர் பிரதேச சபையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நல்லூரிலுள்ள கிட்டுப் பூங்காவை இராணுவத்தினர் கையகப்படுத்தியுள்ளதாக தெரிய வந்துள்ளது. எமது இளம் சிறார் களுக்கு மனநிறைவான பயிற்சியை பொழுது போக்கைக் கொடுக்கவல்லதாக



அத்தகைய பூங்கா உள்ளது. அதனை விடுதலைப்புலிகள் முன்னர் பயன்படுத்தினார் என்பதற்காக அது உட்பட வன்னியில் கூட புலிகளின் பயன்பாட்டில் இருந்த இடங்களை கையகப்படுத்துவதை ஏற்றுக் கொள்ளமுடியாது.

இத்தகைய சுயநலன் களுக்காக இயற்கைச் சூழல்களை அழிப்பதை ஏற்கமுடியாது. பழைய பூங்காவில் அரச அதிபருக்கு மட்டும் தங்குமிடம் அமைக்க முடியுமாக இருந்தது. ஆனால் ஏனைய மரங்கள் அனைத்தையும் அழித்து ஒழித்து ஆளுநர் தனக்கு அலுவலக தங்குமிடமும் அமைத்து இயற்கை வளத்தை அழித்து விட்டார். அந்தப் பூங்காவில் முன்னர் சூழல் சிறப்பாக இருந்தது.- என்றார். (வ-4)

# வரி செலுத்தாததால் மானிய உரம் இல்லை

## தென்மராட்சி விவசாயிகள் திண்டாட்டம்

தென்மராட்சி, ஒக்.29

தென்மராட்சி பிரதேசத்தில் நெற்செய்கைக்கான வரி செலுத்தாததால் நெற் செய்கையாளர்களுக்கு மானிய உர வகைகள் விநியோகிக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப் பட்டது.

இதுவரை காலமும் அந்தந்த கமக்கார அமைப்புக்களால் நெற்செய்கையில் ஈடுபடுவோரிடம் காணிப் பத்திரம் மற்றும் குத்தகைப் பத்திரம் வைத்திருந்தும் நெற் செய்கை மேற்கொள்ளாத வயல்களின் உரிமையாளர்கள் வெளிநாடுகளில் அல்லது வேறு மாவட்டங்களில் தங்கியிருந்ததால் நெற்செய்கை மேற்கொள்வோருக்குப் பத்திரங்களையும் அந்தக் காணிகளை வழங்கி பரிந்துரை செய்வோருக்கும் மானிய உரவகைகள் விநியோகிக்கப் பட்டன.

இந்த வருட காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படும் வயல்களுக்கு வரி செலுத்த வேண்டும் எனவும் அதற்காக காணிப் பத்திரம் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் நெற் செய்கை மேற்கொள்ளப் படும் பரப்பளவுக்கு வரி அறவிடப்பட்டுமானிய உரங்களுக்கான பதிவுகளும் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டோருக்கே உரவகைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

> *இந்த வருட காலபோக நெற் செய்கை மேற் கொள்ளப்படும் வயல்களுக்கு வரி செலுத்த வேண்டும்*

ஈநல வயலுககான பதத்ரங்கள் வைத்திருப்போரும் குத்தகைக்கு நெற்செய்கை மேற்கொள்வோரும் குத்தகைப் பத்திரத்துடன் காணி பத்திர பிரதிகளைச் சமர்ப்பித்து பதிவுகளை மேற்கொண்டனர். பத்திரம் இல்லாததால் தரிசு நிலமாகக் காணப்படும் வயல்களில் நெற்செய்கை மேற்கொள்பவர்களுக்கு மானிய உரங்கள் வழங்கப்படவில்லை. இதனால் இவ்வாறு நெற்செய்கை மேற்கொள்வோர் தனியார் கடைகளில் அதிக விலையில் உரம் வாங்கிப் பயன்படுத்து வதாகவும் தெரிவித்தனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் வயல்களில் அதிகமாக மானிய உரம் வழங்கப்பட வில்லை எனவும் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் மானிய உர வகைகள் கிடைக்காத நிலையில் நெற்செய்கை மேற் கொள்ளப்படும் வயல்களை நேரில் சென்று பார்வையிட்டோ அல்லது அந்தந்த கமக்கார அமைப்புகளிடம் விவரங்களைப் பெற்றோ அடுத்து வரும் மானிய உர விநியோகத்தில் உரவகைகள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (வ-9)

## சுகாதாரத்தைப் பேணாத 5 வர்த்தக நிலையங்கள்

வலி.வடக்கு, ஒக்.29

உணவு பாதுகாப்பு வாரத்தையொட்டி கோப்பாய் பொது சுகாதார வைத்தியதிகாரி பிரிவிலுள்ள உரும்பிராயில் வர்த்தக நிலையங்களின் மீது சோதனையை மேற்கொண்ட சுகாதார பரிசோதகர்கள் சுகாதாரச் சீர்கேடான முறையில் காணப்பட்ட 5 வர்த்தக நிலையங்கள் மீது நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

கடந்த 21 ஆம் திகதி முதல் ஒரு வார காலம் உணவுப் பாதுகாப்பு வாரமாக சுகாதார அமைச்சால் பிரகடனப் படுத்தட்டிருந்தது.

இந்த நிலையில் உணவகங்கள் உட்பட வர்த்தக நிலையங்களும் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டன.

இதன்போது பழுதடைந்த பொருள்கள் மற்றும் காலம் முடிவடைந்த பொருள்களான பிஸ்கட் வகைகள், குளிர்பானங்கள் இனங்காணப் பட்டதைத் தொடர்ந்து குறித்த வர்த்தக நிலையங்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. (வ-86)

## அகப்பட்டனர் திருட்டு நபர்கள்

தென்மராட்சி, ஒக்.29

விற்பனைக்கு அடுக்கி வைக்கப்பட்டிருந்த மெத்தைகளைத் திருடி விற்பனை செய்த சிறுவனை சாவகச்சேரி பொலிஸாரும்வீட்டினுள்புகுந்துதிருட்டு முயற்சியில் ஈடுபட்ட வேளையில் பொது மக்களால் துரத்திப் பிடிக்கப்பட்ட நபரை கொடிகாமம் பொலிஸாரும் கைது செய்துள்ளனர்.

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் விற்பனைக்காக அடுக்கி வைக்கப்பட்டிருந்த மெத்தைகளை திருடி கிராமங்களில் மலிவு விலையில் விற்பனை செய்த வேளையில் சிறுவன் ஒருவன் சாவகச்சேரி பொலிஸாரிடம் வசமாக மாட் டிக்கொண்டான்.

அதேவேளை கொடிகாமம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட குடமியன் பகுதியில் வீடொன்றில் இரவு திருட்டு முயற்சியில் ஈடுபட்ட திருடனொருவன் வீட்டுக்காரர் கூக்குரலிடவே தப்பியோடியுள்ளான்.

சம்பவம் தொடர்பாக குடமியன் பகுதியைச் சேர்ந்தவர்கள் மிருசுவில் வடக்குப் பகுதியில் உள்ளவர்களுக்கு தொலைபேசியில் அறிவித்ததையடுத்து வீதியில் மறைந்திருந்த பொது மக்கள் அவ்வழியே வந்த திருடனைப் பிடித்து கொடிகாமம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# வேலணையில் சிறப்பாக நடைபெற்ற சிறுவர், மாற்றுவலுவுடையோர் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.29

வேலணை பிரதேச செயலக சர்வதேச சிறுவர், முதியோர், மாற்று ஆற்றல் உடையோர் தின நிகழ்வுகள் கடந்த வியாழக்கிழமை வேலணை பிரதேச செயலர் திருமதி மஞ்சுளாதேவி சதீசன் தலைமையில் வேலணை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும் சிறப்பு விருந்தினர்களாக மாகாண சிறுவர் பராமரிப்பு நன்னடத்தை சேவைகள் ஆணையாளர் தி.விஸ்வரூபன், மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் க.மகேஸ்வரன், தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன் குயின்ரஸ் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வேலணை பிரதேச சபைத் தலைவர் சி.சிவராசா, அரச முதியோர் இல்லஅத்தியட்சகர்க.கிருபாகரன் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றினர்.

முன்னதாக அரச அதிபர், வேலணை பிரதேச செயலர்





ஆகியோர் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர். முதியோர் கௌரவிப்பு, மாற்றுவலுவுடை[illegible] களின் கலை நிகழ்வுகள், பரிசில் வழங்கல் என்பன இடம்பெற்றன. (வ-7)

# தரகர்களை மடக்கிய முதியவர்

யாழ்ப்பாணம், ஒக்.29

காணி உறுதிப் பத்திரத்தை உடனடியாக எடுத்துத் தருவதாகக் கூறி பெருந்தொகைப் பணத்தை அறவிட முயன்றவர்களுக்கு முதியவர் ஒருவர் தகுந்த பாடம் கற்பித்த சம்பவம் ஒன்று கடந்த வாரம் யாழ்.செயலகம் முன்பாக இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது:

பூநகரியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் தொலைந்து போன தனது காணி உறுதிப் பத்திரத்தின் பிரதியொன்றை எடுப்பதற்காக யாழ்.செயலகத்துக்கு சென்றிருந்தார் செயலகத்துக்கு வெளியே தட்டச்சுச் செய்யும் ஒருவரும் வேறு ஒருவருமாக இணைந்து அந்த முதியவரிடம் “ஏன் வந்தீர்கள்?” எனக் கேட்ட போது முதியவர் விடயத்தைக் கூறியுள்ளார். அதற்கு அவ்விருவரும் காணி உறுதிப் பத் திரம் முன்னர் போல இலகுவாக எடுக்க முடியாது பல சட்டங்கள் தற்போது வந்துள்ளன. எனவே அதனைப் பெற்றுக் கொள்ள ஒரு [illegible] என்று கூறியதுடன் எமக்குத் தெரிந்த ஒருவர் காணிக் கிளையில் கடமை புரிகின்றார். அவருக்கு சிறு தொகை கொடுத்தால் இன்று எடுக்கலாம் எனவும் முதியவரிடம் கூறியுள்ளனர். “அதனையடுத்து முதியவர் எவ்வளவு முடியும்?” எனக் கேட்டார்.

மூவாயிரத்து நூறு ரூபா செலவாகும் எனக் கூறியதுடன் முற்பணமாக ஆயிரத்து நூறு ரூபாவை முற்பணமாகவும் பெற்றுக் கொண்டனராம்.

இந்த நிலையில் அருகிலுள்ள தபாலகத்துக்கு முத்திரை வாங்கச் சென்ற முதியவர் அங்கு நின்ற இளைஞர் ஒருவரிடம் காணி உறுதிப் பத்திரம் எடுப்பது தொடர்பாக உரையாடிய வேளை “அதற்கான செலவு ஐந்நூறு ரூபா மட்டுமே. கொடுத்த முற்பணத்தை வாங்கி வாருங்கள். நான் பதிவாளர் அலுவலகத்தில் உறுதிப்பத்திரத்தை உடனடியாக எடுத்துத் தருகிறேன்” என்று அந்த இளைஞர் கூறினார்.

அதனையடுத்து முதியவர் கொடுத்த பணத்தை அவ்விருவரிடமும் கேட்டவேளை பணத்தைத் தர முடியாது. பத்திரம் எடுக்கக் கொடுத்துவிட்டோம் எனவும் அதிகாரத் தொனியில் பதிலளித்துள்ளார். எனினும் அந்த முதியவ ரும் பயப்படாது “பணம் தரா விட்டால் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்வேன்” என்றும் தெரிவித்தார். அப்போதும் கூட அவர்கள் குறித்த முதியவரை அச்சுறுத்தினர். எனினும் விடாப்பிடியாக நின்ற முதியவர் “பணத்தை இப்போது என்னிடம் தர வில்லை என்றால் உடனடியாக கைதடியிலுள்ள மாகாண சபை உறுப்பினர்களிடம் சென்று முறையிடுவேன்” எனக் கூறியதுடன் உடனடியாக கைதடி செல்ல பஸ் தரிப்பிடத்துக்குச் செல்ல முயன்றார்.

நிலமை கைமீறி விட்டது என உணர்ந்த குறித்த இருவரும் உடனடியாக முதியவரிடம் ஆயிரம் ரூபாவைக் கையளித்ததுடன் “நூறுரூபாவுக்கு சாப்பிட்டு விட்டோம் எனவும் இது குறித்து மாகாண சபை அதிகாரிகளுக்கு தெரியப்படுத்த வேண்டாம்” எனவும் மன்றாட்ட மாகக் கேட்டுக் கொண்டனர். இந்த நிலையில் ஆயிரம் ரூபாவை வாங்கிய முதியவர் உடனடி காணிப்பதிவகத்துக் குச்சென்று வழமையான பணத்தைச் செலுத்தி உறுதிப் பத்திரத்தைப் பெற்றுக்கொண்டார். (வ-288)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லையில் மீண்டும் பதற்றம்

## பாக். இராணுவத்தின் தாக்குதலில் இந்திய இராணுவ அதிகாரி சாவு

ஜம்மு, ஒக்.29
இந்திய ஜம்மு-காஷ்மீர் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் இராணுத்தினர் தாக்குதல் நடத்தியதில் இந்திய இராணுவ அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார். அதையடுத்து இந்திய - பாகிஸ்தான் எல்லையில் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.



அண்மைக்காலமாக இந்திய நிலைகள் மீது பாகிஸ்தான் இராணுவம் தாக்குதல்களை நடத்தி வருகின்றது என்று இந்திய இராணுவத் தரப்பால் குற்றஞ்சாட்டப்பட்டு வருகிறது. அதனால் இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பாதிக்கப்பட்டிருந்தன.
இந்தநிலையில் ஜம்மு காஷ்மீர் மாநிலம் யூரி எல்லைப் பகுதியில் இந்திய நிலைகள் மீது நேற்றுமுன்தினம் பாகிஸ்தான் இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர் என்று கூறப்படுகின்றது. இருதரப்புக்கும் இடையே நடந்த நீண்ட நேர துப்பாக்கிச்சண்டையில் இந்திய இராணுவத்தின் இளநிலை அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.
பாகிஸ்தான் இராணுவத்தின் தாக்குதலை அடுத்து ஸ்ரீநகர். முஷராபாத் இடையேயான பஸ் போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளது. (ற)

இந்த ஆண்டு மட்டும் 130 முறை பாகிஸ்தான் அத்துமீறி தாக்குதல் நடத்தியுள்ளது என்று குற்றஞ்சாட்டுகின்றது இந்திய இராணுவம்.




## 4,500 கிராமங்கள் பாதிப்பு

பெர்காம்பூர், ஒக்.29
பைலின் புயலைத் தொடர்ந்து வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக ஆந்திரா மற்றும் ஒரிசாவில் கடந்த சில நாள்களாக கனமழை பெய்து வருகிறது. அங்கு ஓடும் பகுதா நதியின் துணை நதியான பாகியில் வெள்ளம் கரையை உடைத்துக் கொண்டு கிராமங்களுக்குள் புகுந்துள்ளது. மொத்தம் 4 ஆயிரத்து 500 கிராமங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. அதனால் அங்கு அத்தியாவசியப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது என்று கூறப்படுகின்றது. (ற)

## 10 லட்சம் பேருக்கு இந்தியாவில் காச நோய்

புதுடில்லி, ஒக்.29
இந்தியாவில் 10 லட்சம் பேர் மிக மோசமான காச நோய்ப் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர் என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரித்துள்ளது. கடந்த வருடம் மட்டும் இந்தியாவில் 2.7 லட்சம் பேர் அந்த நோயால் உயரிழந்துள்ளனர் என்றும் சுகாதார நிறுவனம் கூறியுள்ளது.
இதுகுறித்து அந்த அமைப்பு வெளியிட்டுள்ள ஆய்வறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:
"கடந்த ஆண்டு 4.5 லட்சம் பேர் புதிதாக காச நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
ஒருவரிடமிருந்து மற்றவருக்கு காற்று மூலமாக பரவக் கூடியது காச நோய். அந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தொடர்ச்சியான இருமல், சளி, காய்ச்சல், பசியின்மை, உடல் எடை குறைதல் போன்றவை இருக்கும்.
இந்தியாவில் மட்டும் காச நோயால் மிக மோசமாக பாதிக்கப்பட்டு கடந்த வருடம், 2.7 லட்சம் பேர் இறந்து உள்ளனர். காசநோயால் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் அதற்கான சிகிச்சை பெறாமலேயே இருக்கின்றனர்" என்று கூறப்படுகின்றது.
உலகளவில் 8.6 மில்லியன் பேர் காசநோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது. அவர்களில் பெரும்பாலானோர் இந்தியா, சீனா மற்றும் ரஷ்யாவைச் சேர்ந்தவர்கள். அதில் 0.5 மில்லியன் பேர் குழந்தைகள். 2.9 மில்லியன் பெண்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)



பீகார் தலைநகர் பாட்னாவில் நேற்றுமுன்தினம் பா.ஜ.க. சார்பான பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடி கலந்து கொண்ட பொதுக் கூட்டத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக 14பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் கூறுகின்றனர். அவர்களிடம் நடத்திய முதற்கட்ட விசாரணைகளில் குறித்த குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கும் இந்தியன் முஜாகுதீன் பயங்கரவாத அமைப்புக்கும் தொடர்பிருக்கலாம் என்று பொலிஸார் கூறுகின்றனர். (ற)

## போராட்டத்தை கைவிட்டார் முருகன்



சென்னை, ஒக்.29
தனது மனைவி நளினிக்காக மேற்கொண்ட உண்ணா விரதப் போராட்டத்தை முடித்துக் கொண்டார் முருகன்.
நளினிக்கு சிறையில் போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்று தெரிவித்தே அவர் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்திவந்தார். அதையடுத்து சிறை அதிகாரிகள் அவருடன் பேச்சுக்களை மேற்கொண்டிருந்தனர்.
அந்தப் பேச்சுகளின் பயனாக முருகன் தனது உண்ணா விரதத்தை முடித்துக் கொண்டுள்ளார் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ற)

## நள்ளிரவில் தனியாக உலாவும் ராகுல்

புதுடில்லி, ஒக்.29
காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல்காந்திக்கு தீவிரவாதிகளால் அச்சுறுத்தல் இருப்பதால் அவருக்கு உச்சக் கட்டப் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகின்றது.
இந்தநிலையில் நேற்றுமுன்தினம் இரவு ராகுல் காந்தி புதுடில்லியில் தனது வீடு அமைந்துள்ள ரேஸ் கோர்ஸ் சாலையில் பாதுகாப்பு அதிகாரிகளோ சாரதியோ இல்லாமல் தனியாக காரில் சென்றுள்ளார் என்று தகவல் வெளியாகி உள்ளது.
இதுகுறித்து மேலும் கூறப்படுவதாவது:
டில்லியைச் சேர்ந்த பெண் ஒருவர் நண்பர்களுடன் இரவு 10 மணி அளவில் தனது செல்லப்பிராணியான நாயுடன் நடைப் பயிற்சி மேற்கொண்டிருந்தார். அப்போது சாலை சமிக்ஞையில் ஒரு கார் நின்றிருந்தது. காரை ஓட்டி வந்தவர் திடீர் என்று கார் கண்ணாடியை இறக்கி விட்டு பெண்ணிடம் அவரது நாய்க்குட்டி பற்றி பேசினார். அதன் உணவுப் பழக்கங்கள் பற்றியும் கேட்டறிந்தார். அவரைப் பார்த்ததும் அந்தப் பெண்ணுக்கு ஒரே ஆச்சரியம். காரணம் காரில் இருந் தவர் ராகுல் காந்தி.
சாரதி இருக்கையில் அமர்ந்து அவரே காரை ஓட்டிவந்தார். பாதுகாப்பு அதிகாரிகள் யாரும் இல்லை. காரில் அவருடன் விலை உயர்ந்த பிரவுனி ரக நாய்கள் இருந்தன. ராகுல்காந்தியும் தனது பிரவுனி பற்றி அந்தப் பெண்ணிடம் விவரித்தார்.
பாதுகாப்பு வளையத்தை மீறி ராகுல்காந்தி நள்ளிரவில் காரில் தனியாகச் சென்ற சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது. ராகுல் காந்தியைப் பார்த்த பெண் தனது பெயர் விவரங்களை வெளியிட மறுத்து விட்டார். (ற)

### பீகார் குண்டுவெடிப்புச் சம்பவம்:

## தமிழகத்தில் பெரும் கண்டனப் போராட்டம்

சென்னை, ஒக்.29
பீகாரில் நரேந்திரமோடி கலந்து கொண்ட பொதுக்கூட்டத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பைக் கண்டித்து தமிழகத்தில் பா.ஜ.க. சார்பில் கண்டனப் போராட்டம் நடத்தப்படும் என்று மாநில தலைவர் பொன். ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:
"பா.ஜ.க வின் பிரதமர் வேட்பாளராக நரேந்திரமோடி அறிவிக்கப்பட்ட பின்னர், நாடு முழுவதும் அவர் செல்லும் இடங்களில் எல்லாம் மக்கள் பெரும் ஆதரவு அளித்து வருகின்றனர்.
மக்கள் சக்தி அவர் பக்கம் சாய்வதும் நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் அவர் பிரதமராவது உறுதி என்பதும் நிச்சயமாகிவிட்ட நிலையில் நரேந்திரமோடியைக் கொலை செய்ய பல தீய சக்திகள் கங்கணம் கட்டி வருகின்றன.
பீகார் மாநில தலைநகர் பாட்னாவில் நரேந்திரமோடி உரையாற்ற இருந்த கூட்டத்தைச் சீர்குலைப்பதற்காக கூட்டம் நடக்கவிருந்த பகுதியிலும், ரயில் நிலையத்திலும் தொடர் குண்டுவெடிப்புகள் நடத்தப் பட்டன. அதிர்ஷ்டவசமாக நரேந்திரமோடி காப்பாற்றப் பட்டு உள்ளார். பலர் உயிருக்கு ஆபத்தான நிலையில் படுகாயத்துடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
அந்தப் பயங்கரவாத செயலை கண்டித்து, பா.ஜ.க. சார்பில் தமிழகம் முழுவது கண்டனப் போராட்டம் நடைபெறும்" என்று தெரிவித்துள்ளார். (ற)



மோடி பிரதமராவது உறுதியாகிவிட்ட நிலையில் அவரைக் கொலை செய்யப் பல தீய சக்திகள் கங்கணம் கட்டியுள்ளன.

## முதலமைச்சர் மீது கல் வீச்சு: கேரளாவில் பதற்றம் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மீது வழக்குப் பதிவு

திருவனந்தபுரம், ஒக்.29
கேரள முதலமைச்சர் உம்மன்சாண்டி மீது கல்வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. அதில் அவரது நெற்றியில் காயம் ஏற்பட்டு மருத்துமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அதனால் அங்கு பெரும் பதற்ற நிலை தோன்றியுள்ளது.
கேரள மாநிலம் கண்ணூரில் பொலிஸ் தடகள போட்டி நிறைவு விழா நடந்தது. இதில் முதல்வர் உம்மன்சாண்டி பங்கேற்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது. அவருக்கு எதிர்ப்பு தெரிவித்து இடதுசாரி முன்னணியினர் போராட்டம் நடத்தக் குவிந்தனர்.



அங்கு வந்த உம்மன் சாண்டி யின் கார் மீது சரமாரியாகக் கற்களை கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டது. அதில் உம்மன் சாண்டிக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டது. அதையடுத்து பொலிஸார் தடியடி நடத்தி கூட்டத்தை விரட்டினர். முதலமைச்சர் தாக்கப்பட்டதை அடுத்து மாநிலம் முழுவதும் காங்கிரஸ் தொண்டர்கள் ஆர்ப்பாட்டங்களில் இறங்கியுள்ளனர். அதனால் அங்கு பெரும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.
அதனால் மாநிலம் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஹ்ரெய்னில் பதற்றம்

லண்டன், ஒக்.29
பஹ்ரெய்னில் குண்டு வெடிப்பில் உயிரிழந்தவருக்காக நடந்த இறுதிச்சடங்கில் கலந்துக் கொண்டவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையே கடும்மோதல்கள் ஏற்பட்டன.
இறுதிச் சடங்கில் அரசுக்கு எதிரான போராட்டக்காரர்களும் கலந்துக்கொண்டதால் மோதல் தீவிரமடைந்தது. பொலிஸார் மீது போராட்டக்காரர்கள் கற்களை வீசித் தாக்கினர். அதையடுத்து போராட்டக்காரர்களை பொலிஸார் கண்ணீர்ப் புகைக்குண்டுகளை வீசி கலைத்தனர் என்று கூறப்படுகின்றது. (ற)

## செய்திகளை அறிய உதவும் பேஸ்புக்

வொஷிங்டன், ஒக்.29
சமூக வலைதளமான 'பேஸ்புக்' மூலம் 30 சதவீத மக்கள் முக்கிய செய்திகளை அறிந்து கொள்கின்றனர் என்று கூறப்படுகின்றது.
அமெரிக்காவில் உள்ள ஆய்வு நிறுவனம் ஒன்று 5,173 பேரிடம் இது தொடர்பாக ஆய்வு மேற்கொண்டது. அதில் 78 சதவீதத்தினர் 'பேஸ்புக்கில்' வேறு காரணங்களுக்காக நுழைந்தாலும், அன்றைய செய்திகளை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது என்று கூறியுள்ளனர். 4 சதவீதத்தினர் செய்திகளை அறிவதற்காக மட்டுமே பேஸ்புக்கில் நுழைவதாகவும் தெரிவித்துள்ளனர்.
நடுத்தர வயதான 47 சதவீதம்பேர், பேஸ்புக் மூலம் செய்திகளை அறிந்து கொள்கின்றனர். குறைந்த வயதுள்ளவர்கள், பெரியவர்களின் செய்திகளை குறைந்த அளவில் அறிந்தாலும் இந்தசமூகவலைத்தளம் மூலம் தங்களுடைய பொது அறிவை வளர்த்துக் கொள்கின்றனர்.
பேஸ்புக் சமூக வலைத்தளத்தில் 18 முதல், 29 வயது வரையுள்ளவர்களில், 34 சதவீதம் பேர் கணக்கு வைத்துள்ளனர். இந்த வலைத்தளம் மூலம், பல்வேறு தகவல்கள், முகவரிகள் மற்றும் முக்கிய செய்திகளை அவர்கள் அறிந்து கொள்கின்றனர் என்று அந்த ஆய்வு கூறுகின்றது. (ற)



இந்தோனேஷியத் தலைநகர் ஜகார்த்தாவில் குரங்குளை வைத்து வித்தை காட்டுவது பிரபலம். குரங்குகளைப் பழக்கி மனிதர்கள் போன்று இரு கால்களில் நடக்க வைத்து அவற்றுக்கு குழந்தைகளின் முகமூடிகளை அணிவித்து வித்தை காட்டுவார்கள். தற்போது அதற்குக் கடும் எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. குரங்குகளைச் சங்கிலியால் கட்டி வைத்து அவற்றை வித்தை காட்ட நிர்ப்பந்திப்பது, அவற்றை சித்திரவதை செய்வதாக உள்ளது என்று விலங்கு உரிமை ஆர்வலர்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வந்தனர். இந்தநிலையில் ஜகார்த்தா பொலிஸார் நேற்று அதிரடி நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு நகரில் குரங்கு வித்தை காட்டுபவர்களைக் கைது செய்துள்ளதுடன் அவர்களிடம் இருந்த குரங்குகளையும் கைப்பற்றியுள்ளனர்.

## 26 பலஸ்தீனர்கள் விடுதலை

ஜெருசலேம், ஒக்.29
26 பலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று இஸ்ரேல் அறிவித்துள்ளது. "1993 ஆம் ஆண்டில் வன்முறையில் ஈடுபட்ட குற்றத்திற்காக சிறை தண்டனை அளிக்கப்பட்ட 26 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். இது ஓர் நல்லெண்ண நடவடிக்கை" என்று தெரிவித்துள்ளது இஸ்ரேல். (ற)

## லண்டனை புயல் தாக்கும்

லண்டன், ஒக்.29
லண்டன் தென்பகுதிகளை சக்தி வாய்ந்த காற்று தாக்கக்கூடும் என்று அந்த நாட்டு வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.
பலம் வாய்ந்த புயல் காற்று வீச வாய்ப்பிருப்பதால் பொது மக்களை வெளியே செல்ல வேண்டாம் என்றும் எச்சரிக்கப்பட்டுள்ளது. "கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு கடுமையான புயலாக இது இருக்கலாம். புயலினால் ஏற்படும் பாதிப்புகளை தவிர்க்க அரசு தீவிர நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. சில இடங்களில் ரயில் போக்குவரத்துகள் மாற்றி விடப்பட்டுள்ளன." என்றும் நகர நிர்வாக அதிகாரிகள் கூறியுள்ளனர். (ற)

# வெடித்தது கார்க்குண்டு

## ஈராக்கில் 39 பேர் உடல் சிதறிச் சாவு

பாக்தாத், ஒக்.29
ஈராக் தலைநகர் பாக்தாத் அருகே நேற்று இடம்பெற்ற கார்வெடிகுண்டுத் தாக்குதலில் 39 பேர் உடல் சிதறி உயிரிழந்துள்ளனர். பலர் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.



ஈராக் தலைநகர் பாக்தாத் அருகே உள்ள ஷிட்டி என்ற நகரத்தில் உள்ளபிரபலமானவணிக வளாகத்திலேயே கார்க்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. கார்த் தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார் ஒன்றில் மறைத்து வைக்கப்படிருந்த குண்டே வெடித்துள்ளது என்று பொலிஸார் கூறுகின்றனர்.
சம்பவ இடத்திலேயே 39 பேர் உடல் சிதறி உயிரிழந்தனர். ஏராளமானோர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
இதுகுறித்து விசாரணைகள் நடத்தி வரும் பொலிஸார், தாக்குதலுக்கு எந்த அமைப்பும் இதுவரை உரிமை கோரவில்லை என்று கூறுகின்றனர்.
இந்த மாதத்தில் மட்டும் குண்டு வெடிப்புகளால் ஈராக்கில் 500க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

ஈராக்கில் இந்த வருடம் மட்டும் வன்முறைச் சம்பவங்களில் 5,250 பொது மக்கள் உயிரிழந்துள்ளனர் என்று ஐ.நா. அறிக்கையிட்டுள்ளது.

# தள்ளாடும் வயதினிலே தந்தைக்குத் திருமணம்

## தாயின் இறுதி ஆசையை நிறைவேற்றினர் தனயன்கள்

லண்டன், ஒக்.29
சவூதி அரேபியாவில் 90 வயதுடைய தமது தந்தைக்கு மறுமணம் செய்து வைத்து ஆனந்தப்பட்டுள்ளனர் அவரின் தனயன்கள்.



சவூதி அரேபியாவின் மேற்குப் பகுதியில் வசிப்பவர் 90 வயதுடைய பதிஸ் அல் தகாபி. நீண்ட நாள்களாக நோய் வாய்ப்பட்டிருந்த அவரது மனைவி அண்மையில் உயிரிழந்தார். அவர் உயிரிழக்கும்போது ஒரு விபரீத ஆசையைத் தெரிவித்து விட்டு உயிரிழந்தார். தனது கணவர் மறுமணம் செய்ய வேண்டும் என்பது தான் அவரது இறுதி ஆசை. எனினும் அதற்கு மறுப்புத் தெரிவித்த தகாபியை வற்புறுத்தி அவரைச் சம்மதிக்க வைத்தனர் அவரது பிள்ளைகள். ஒருவழியாக மணப்பெண்ணையும் தேடிப்பிடித்தனர். 56 வயதுடைய கணவனை இழந்த பெண் ஒருவர் தான் அந்த மணப் பெண். அண்மையில் தகாபிக்கும் அந்தப் பெண்ணுக்கும் திருமணம் நடந்தது. தாயின் இறுதி ஆசையை நிறைவேற்றி விட்டதாக ஆனந்தப்படுகின்றார்கள் தகாபியின் மக்கள். தகாபிக்கு ஏழு மகன்களும் ஐந்து மகள்மாரும் உள்ளனராம். இந்தத்திரு மணத்தில் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனராம் (ற)

# அதற்கு சரிவரார் மோடி

## 'நியூயோர்க் டைம்ஸ்' கருத்து

நியூயோர்க், ஒக்.29
பா.ஜ.கவின் பிரதமர் வேட்பாளர் நரேந்திர மோடியால் இந்தியாவை திறம்பட வழிநடத்திச் செல்ல இயலும் என நம்ப முடியவில்லை என்று அமெரிக்காவில் இருந்து வெளியாகும் 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகை கருத்து வெளியிட்டுள்ளது.
ஏராளமான இந்தியர்களிடையே அச்சத்தையும் விரோதத்தையும் மோடி ஏற்படுத்தி உள்ள நிலையில் அவரால் திறமையாகச் செயற்படமுடியாதிருக்கும் என்றும் அந்த பத்திரிகை கூறியுள்ளது.
"பாஜ.க.வுடனான 17 ஆண்டு கால உறவை ஐக்கிய ஜனதா தளம் முறித்துக் கொண்டதன் மூலம் ஏற்கெனவே மோடி தனிமைப்படுத்தப்பட்டு விட்டார். மோடி பிரதமர் வேட்பாளருக்கு பொருத்தமற்றவர் என்பதாலேயே அக்கட்சி இந்த முடிவுக்கு வந்துள்ளது.
இந்தியாவில் பல்வேறு மதத்தினர் உள்ளனர். இந்நிலையில் பெரும்பாலான மக்களிடையே அச்ச உணர்வையும், விரோத மனப்பான்மையையும் ஏற்படுத்தியுள்ள மோடியால் அந்த நாட்டை திறம்பட வழிநடத்திச் செல்ல இயலும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இல்லை.
குஜராத்தின் பொருளாதாரம் ஒட்டுமொத்தமாக பாராட்டும் வகையில் இல்லை. குஜராத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ளவர்களின் விகிதம் பிற மாநிலங்களைவிட குறைவாகவே இருப்பினும், இந்தியாவின் பிற பகுதிகளில் உள்ள முஸ்லிம்களைவிட அந்த மாநில முஸ்லிம்கள் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றனர்.
மோடி ஆட்சிக்கு வந்தால் பெரும்பாலான இந்தியர்களுக்கு, குறிப்பாக 13.8 கோடி முஸ்லிம்களுக்கும் மற்றும் பிற சிறுபான்மையினருக்கும் பிரச்சினையே." என்று தெரிவித்துள்ளது அந்தப் பத்திரிகை. (ற)

# ஒன்றுமே தெரியாது பராக் ஒபாமாவுக்கு

## ஒட்டுக் கேட்டமை குறித்து என்.எஸ்.ஏ

வொஷிங்டன், ஒக்.29
தமது உளவு நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு எதுவுமே தெரியாது என்று தெரிவித்துள்ளது அமெரிக்க தேசிய உளவு அமைப்பு (என்.எஸ்.ஏ.).



ஜெர்மன் பிரதமர் ஏஞ்சலா மெர்க்கலின் கைத்தொலைபேசி உரையாடல்கள் கடந்த 10 ஆண்டுகளாக ஒட்டுக் கேட்கப்படுகின்றது. அதுகுறித்து அமெரிக்க ஜனாதிபதிக்கும் தெரியப்படுத்தப்பட்டிருந்தது என்று தகவல்கள் வெளியாகியிருந்தன.
அதுகுறித்து விளக்கமளிக்கும் போதே என்.எஸ்.ஏ இவ்வாறு தெரிவித்துள்ளது.
[illegible] பிரதமர் ஏஞ்சலா மெர்க்கலின் கைத்தொலைபேசி ஒட்டுக் கேட்கப்பட்டமை தொடர்பில் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவுக்கு எதுவும் தெரியாது. அதுகுறித்து அவருக்கு அறிவுறுத்தல் வழக்கபடவுமில்லை. எந்தவித பேச்சுகளும் அவருடன் என்.எஸ்.ஏ. நடத்தவில்லை. ஜேர்மனியப் பத்திரிகைகளில் வெளி வரும் தகவல்கள் தவறானவை" என்று விளக்கமளித்துள்ளது என்.எஸ்.ஏ. (ற)

# மருத்துவரை மேலுலகம் அனுப்பினார் நோயாளி

## வழங்கிய சிகிச்சை சரியில்லையாம்

பீஜிங், ஒக்.29
தமக்கு சரியாக சிகிச்சை அளிக்கவில்லை என்று கூறி சீனாவில் மருத்துவரைக் கத்தியால் குத்திக் கொன்றுள்ளார் நோயாளி ஒருவர்.
ஜீஜியாங் மாகாணத்தில் உள்ள வெங்லிங் நகரத்தில் அரசு மருத்துவமனைக்கு நேற்று 33 வயதுள்ள நோயாளி ஒருவர் வந்தார். அவர் ஏற்கனவே தனது மூக்கில் ஏற்பட்ட கோளாறு காரணமாக காது மூக்கு தொண்டை நிபுணரிடம் சிகிச்சை பெற்றிருந்தார். நேற்று மருத்துவமனைக்கு வந்த அவர் தமக்குச் சரியாக சிகிச்சை அளிக்கப்படவில்லை என்றுகூறியுள்ளார் அங்கு பணியில் இருந்தவர்கள் சம்பந்தபட்ட மருத்துவர்கள் தற்சமயம் இல்லை என்பதால் பின்னர் வருமாறு கூறியுள்ளனர்.
அதனால் ஆத்திரம் அடைந்த நோயாளி, அங்கிருந்த மருத்துவரை சரமாரியாக கத்தியால் குத்தினார். மருத்துவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். அதையடுத்து நோயாளி கைது செய்யப்பட்டுள்ளார்.
சீனாவில் மக்களின் நலனுக்காக சுகாதாரத் துறை சார்பில் ஆண்டுதோறும் அரசு பல ஆயிரம் கோடி ரூபா நிதி ஒதுக்கி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் அரசு மருத்துவமனைகளில் ஏராளமான மருத்துவர்கள் நியமிக்கப்பட்டும், சிகிச்சைக்குறைபாடுஉள்ளதாக கூறி மருத்துவர்கள் மீது அடிக்கடி தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை மதிலில் வரையப்பட்ட

# கல்விச் சித்திரங்களுக்கு வீசப்பட்டது கழிவு ஒயில்

தென்மராட்சி, ஒக்.29

சாவகச்சேரி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை மதிலில் வரையப்பட்டிருந்த கல்வி சம்பந்தமான சித்திரங்களுக்கு விஷமிகளால் கழிவு ஒயில் ஊற்றப்பட்டுள்ளது.

பாடசாலை மதிலில் ஏற்கெனவே இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தினரால் கல்வி தொடர்பான சித்திரங்கள் வரையப்பட்டு அவை பழுதடைந்ததால் பாடசாலை அதிபரின் முயற்சியினால் புதிய சித்திரங்கள் கடந்த வாரம் வரையப்பட்டன.

இந்தச் சித்திரங்கள் மீதே கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு விஷமிகளால் கழிவு ஒயில் ஊற்றப்பட்டுள்ளது.

*பாடசாலை மதிலில் வரையப்பட்ட கல்வி சம்பந்த மான சித்திரங்களுக்கு விஷமிகளால் கழிவு ஒயில் ஊற்றப்பட்டுள்ளது.*

கல்வியறிவில்லாதவர்களின் இவ்வாறான ஈனச் செயல்களைக் கண்டிப்பதாக சாவகச்சேரி நகரசபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தெரிவித்தார். (ந-9)

# மதுப்பிரியர்களின் அட்டகாசம்; அச்சத்தில் மக்கள்

யாழ்ப்பாணம், ஒக்.29

இணுவில் சிவகாமி அம்மன் கோயிலடியில் மாலை வேளைகளில் கூடும் மதுப்பிரியர்களினால் அந்தப் பகுதியில் உள்ள பொது மக்கள் பலத்த சிரமங்களுக்கு உள்ளாகின்ற எனினும் பொலிஸார் அதனையிட்டு கவனம் செலுத்துவதில்லையென பொது மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது தொடர்பாக கடந்த வாரம் இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட போதிலும், பொலிஸார் உரிய முறையில் பதிலளிக்காது தட்டிக் கழித்துள்ளதாக பொது மக்களால் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கெனவே இந்த விடயம் தொடர்பாக அந்தப் பகுதி கிராம அலுவலர் நடவடிக்கை மேற்கொள்ள முற்பட்டதைத் தொடர்ந்து குறிப்பிட்ட கிராம அலுவலரின் வீட்டுக்கு இரவு வேளையில் கல்வீச்சு இடம்பெற்றதுடன் வீட்டின் கண்ணாடிகளும் உடைக்கப்பட்டன. இந்த நிலையில் மேற்கொண்டு என்ன செய்வது எனத் தெரியாத நிலையில் பொது மக்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. (ந-86)

## கட்டட இடிபாடுகளை பயன்படுத்தி வீதி புனரமைப்பு

கொடிகாமம், ஒக்.29

இடிந்த கட்டட இடிபாடுகளைப் பயன்படுத்தி வீதி ஒன்று இடைக்குறிச்சி பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் உள்ள பழைமை வாய்ந்த முருகன் கோயில் தற்சமயம் புனரமைக் கப்பட்டு வருகிறது. இதன் போது உடைக்கப்படும் கட்டட இடிபாடுகள் இந்தப் பகுதியில் உள்ள மண் பாதைக்கு போடப்பட்டு, அதன் மேல் கிரவல் இட்டு வீதி செப்பனிடப்பட்டுள்ளது. சாவகச்சேரி பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டில் இந்த வீதிப் புனரமைப்பு மேற்கொள்ளப்பட்டது. (ந-122)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.29

இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையின் கிளிநொச்சி மாவட்ட நிலையத்தில் தேசிய தொழில் தகைமைக்கான கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சன்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி கூட்டுறவு கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி தொழில் பயிற்சி அதிகாரசபையின் பொறுப்பதிகாரி உ.தினேஸ்குமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் 160 மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளன. (ந-14)

# அபிராமி முன்பள்ளியின் சிறுவர் தினவிழா நிகழ்வு



தென்மராட்சி, ஒக்.29

அல்லாரை தெற்கு அபிராமி முன்பள்ளியின் பத்தாவது ஆண்டு நிறைவையொட்டி சிறுவர் தினவிழா கடந்த சனிக்கிழமை முன்பள்ளி வளாகத்தில் இடம்பெற்றது.

முன்பள்ளி அபிவிருத்திச் சங்கத் தலைவர் எ.பிரான்சிஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராஜா, சம்பத் வங்கி சாவகச்சேரி கிளை முகாமையாளர் பா.கிரிதரன், சாவகச்சேரி பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்கத் தலைவர் சி.பூபாலசிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள், அடுத்த வருடம் தரம் ஒன்றில் இணையவுள்ள மாணவர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

முன்பள்ளி சிறார்கள், அல்லாரை அ.த.க.பாடசாலை மாணவர்கள் ஆகியோரின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. (ந-9)

# பரீட்சையில் தெரிவு செய்யப்பட்டும் இதுவரை நியமனங்கள் இல்லை

## பரீட்சார்த்திகள் விசனம்

யாழ்ப்பாணம், ஒக்.29

வடமாகாணத்தில் பல்வேறு திணைக்களங்களில் சிற்றூழியர்கள் நியமனத்துக்காக போட்டிப் பரீட்சையூடாக தெரிவு செய்யப்பட்ட 43 பேருக்கு இதுவரை நியமனங்கள் வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்டுள்ள பரீட்சார்த்திகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் சிறுபணியாளர்களை முகாமைத்துவ உதவியாளர் தரம்III இற்கு நியமிப்பதற்கான மட்டுப்படுத் தப்பட்ட போட்டிப் பரீட்சை பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்பட்டது.

இந்தப் பரீட்சையில் வடமாகாணத்தில் தோற்றிய பரீட்சார்த்திகளில் 43 பேர் சித்தியடைந்துள்ளதாக கடந்த ஜூன்மாதம் வடமாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஊடகங்கள் சித்தியடைந்தவர்களது பெயர் விவரங்களும் வெளியிடப்பட்ட நிலையில் பரீட் சையில் சித்தியடைந்தவர்களுக்கு இதுவரை நியமனங்கள் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக தொடர்புடைய திணைக்களங்களிடம் பாதிக்கப்பட்டவர்கள் கேட்டபோது, வடமாகாணத்தில் ஆளணித் தேவையின் பொருட்டு உச்சப் புள்ளிகளின் அடிப்படையில் மட்டும் நியமனங்கள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான நியமனங்களை உரிய முறையில் வழங்க நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட திணைக் களங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்டுள்ள தரப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-14)



அல்வாய் சீமா ஆலடி
அருள்மிகு வள்ளி தெய்வயானை
சமேத ஸ்ரீசுப்பிரமணிய தேவஸ்தான
**நூதன பிரதிஷ்டா மகா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்**

*முருகப்பெருமான் அடியார்களே!*

நிகழும் மங்கலகரமான விஜய வருடம் ஐப்பசி மாதம் 15ஆம் நாள் (01.11.2013) வெள்ளிக்கிழமை அத்த நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய காலை மணி 9.37 தொடக்கம் 10.20 மணி வரையுள்ள தனுலக்கின சுப முகூர்த்த வேளையில் விநாயகர், வைரவர், அண்ணமார் முதலிய பரிவார மூர்த்திகளுக்கும் வள்ளி தெய்வயானை சமேத ஸ்ரீசுப்பிரமணியப் பெருமானுக்கும் மஹா கும்பாபிஷேகம் நிகழத் திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் கிரியா காலங்களில் ஆசார சீலர்களாய்க் கலந்து நம் சொந்தப் பெருமானாம் கந்தப்பெருமானின் திருவருட் கடாட்சத்தைப் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வீர்களாக.

சுவிஸிலிருந்து பழனி தவராசா

(39539)(7-6-3)

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டுக்குளியில் 1½ (ஒன்றரை) பரப்புக் காணி வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 077 712 0968

(33347)(4.6.3)

**குழந்தையின்மையா? ஆண்மைக்குறைவா? சொரியாசிஸ் நோயா?**
**கவலை வேண்டாம் உயிரணுக்கள் உற்பத்தியின்மை/ குறைவு**
**முழுமையாக குணமடைய உலகிலேயே No:1 வைத்தியம்**







**குழந்தையின்மை:** குழந்தையின்மைக்கு ஆண், பெண் இருவரும் காரணமாகின்றார்கள். பெண்கள் 50 சதம் காரணம் என்றால் 40 சதம் ஆண்களே காரணமாகின்றார்கள். 10 சதம் இருவரும் குழந்தை வேண்டாம் என்று இருப்பது. இதில் கணவன்,மனைவி இருவரும் ஒரு நாளைக்கு பலமுறை முழுமையான தாம்பத்திய உறவில் ஈடுபட்டு வந்தாலும் ஆண்களிடமிருந்து வெளியாகும் விந்துவில் 60%க்கும் மேல் உயிரணுக்கள் இருந்தால் மட்டுமே ஒரு பெண்ணை கருத்தரிக்கச் செய்ய முடியும். ஆனால் 60%க்கும் குறைவாக இருந்தால் கருத்தரிக்கச் செய்ய முடியாது. இப்படிப்பட்ட ஆண்களுக்கு உயிரணுக்கள் உற்பத்தியின்மை/குறைவு போன்ற பிரச்சனைகளுக்கு 100 சதம் உத்தரவாதத்துடன் குணமடைய சிகிச்சையளிக்கப்படுகின்றது. இது போன்று பெண்களுக்கு ஏற்படும் கர்ப்பப்பை பிரச்சனை மாதப்பிரச்சனைகளிலிருந்தும் முழுமையாக குணமடைந்து குழந்தை பாக்கியம் பெறுவது உறுதி. பல நடிகைகள் எங்களிடம் சிகிச்சை பெற்று அழகான, இயற்கையான, கட்டுக்கோப்பான உடலமைப்பைப் பெற்றுள்ளனர். இந்த மருந்துகள் அனைத்தும் அரசு ஆய்வுகூடத்தில் பரிசோதனை செய்த பின்பே சிகிச்சைக்குத் தரப்படுகின்றது. எனவே 100 சதம் பக்கவிளைவுகள் கிடையாது. சிறப்புச் சிகிச்சைக்கு அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர் Dr. G.ஜெகதீஸ்குமார் அவர்களைத் தொடர்பு கொள்ளவும்.

**செல்: 0091 9842457673**
**இலங்கைச் செல்: 0754154364**

**ஸ்ரீ தேவி சித்த ஆயுர்வேத வைத்தியசாலை**
இராமாபுரம், சென்னை-89, இந்தியா.
E-mail: sridevisiddha@gmail.com

**கார் விற்பனைக்கு**

HP-xxxx தொடரிலக்கமுடைய (2003 Make) நல்ல நிலையில் உள்ள மாருதிக்கார் உடன் விற்பனைக்கு.

விலை-800,000/=

தொடர்பு: 077 280 2842 (33341)(6.3.4)

**TVகள் மலிவு விற்பனை**

எங்குமே கிடைக்காத மலிவு விலையில்
SONY Wega TVகள் 21"-14500/=
Sony, Panasonic 29"-16000/= DVD-3000/=
Box, அம்பிளிபயர் என்பன
தொடர்பு: 077 044 0570
ரேவி ரேட்ரெச்ன்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்)
56, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
(33340)(6.3.4)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யா/கல்வயல் ஸ்ரீ சண்முகானந்த வித்தியாலயம்

**2013 தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றோர்.**



ச.கிருஸ்ணவேள் 182 | மு.அஸ்விஜன் 175 | மு.பானுஜன் 164 | உ.சிவப்பிரியன் 154 | சு.வித்தகன் 150 (2012)

100 இற்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்றோர்



கி.தவகேசன் 144 | வி.சனுஸ்ஷா 129 | ஸ். வைஸ்ணவி 126 | பா.கிசானி 120 | ர.டிசிவன் 113 | கே.கௌசிகன் 104

தரம் 1 தொடக்கம் தரம் 4 வரை கல்வி புகட்டிய ஆசிரியர்களுக்கும் தரம் 5 புலமைப் பரிசில் வகுப்பினை சிறப்பாக நடத்தி வழிப்படுத்திய சாதனை ஆசிரியர் க.தவயோகராசா அவர்களுக்கும் இவர்கள் அனைவரின் செயற்பாடுகளையும் நெறிப்படுத்தி வழிப்படுத்திய பாடசாலை அதிபர் இ.ரவீந்திரன் அவர்களையும் மனமாரப் பாராட்டி வாழ்த்துவதுடன், தொடர்ந்தும் இப் பணியினை சிறப்பாக ஆற்ற இறை ஆசியை வேண்டி நிற்கின்றோம்.

Conguralation

**பெற்றோர்.**

(சி/2773)(3.5.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு வழிப் பாதை

வவுனியா, ஒக்.29
வவுனியா முதலாம் குறுக்குத்தெரு ஒருவழிப்பாதையாக அறிவிக்கப்பட்டுள்ளது.
கடந்த காலங்களில் மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள்களில் செல்வோர் இருவழிப் பாதையாக இதனைப் பயன்படுத்தினர். கடந்த வாரம் முதல் மோட்டார் சைக்கிள், சைக்கிள்களில் செல்வோர் உட்பட அனைத்து வாகனங்களுக்கும் இந்தப் பாதை ஒருவழிப்பாதையாக அறிவிக்கப்பட்டுள்ளது. மீறிச் செல்வோரிடமிருந்து தண்டம் அறவிப்படும் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
முதலாம் குறுக்குத் தெருவில் தனியார் வாகனங்கள் தரித்து நின்று பயணிகளை வெளிமாவட்டங்களுக்கு ஏற்றிச் செல்லும் நடைமுறை தற்போதும் உள்ளமையாலேயே போக்குவரத்து நெருக்கடியைக் குறைக்கும் முகமாக இந்தப் பாதை ஒரு வழிப்பாதையாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

## புதிய இயக்குநர் சபை தெரிவு

வவுனியா, ஒக்.29
வவுனியா பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குநர் சபையைத் தெரிவு செய்வதற்கான விசேட பொதுக் கூட்டம் தலைவர் சி.சுப்பிரமணியம் தலைமையில் நேற்று முன்தினம் முத்தையா மண்டபத்தில் நடைபெற்றது.
புதிய இயக்குநர் சபைக்கான தெரிவு வவுனியா கூட்டுறவு உதவி ஆணையாளர் வி.கே. ரவீந்திரநாதன் தலைமையில் இடம்பெற்றது. வாக்கெடுப்பின் மூலமாக இயக்குநர் சபைக்குத் தெரிவு செய்யப்பட்டோர் விவரம் வருமாறு- தலைவர்- சி.சுப்பிரமணியம், உப தலைவர்- க.சிவ சேகரம், நிர்வாக சபை உறுப்பினர்கள்- து.கனகரட்ணம், பொ.செகராஜசேகரம், வே.இந்திரகுமார், ப.கங்கைஅமரன், சு.ஜெனாந்தனன். வவுனியா கிழக்குக் கிளையிலுள்ள கட்டப் பொருள்களை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வதற்கும் இந்தக் கூட்டத்தில் பொதுச்சபை அனுமதி வழங்கியது. எதிர்காலத் திட்டங்கள் கடந்தகால செயற்பாடுகள் தொடர்பான அறிக்கைகளும் இதன்போது முன்வைக்கப்பட்டன. (க-402)


## பாதுகாப்பற்ற கழிப்பறைக்குழி: உடன் மூடிவிடுமாறு கோரிக்கை

நெளுக்குளம், ஒக்.29
வவுனியா ஓமந்தை வேப்பங்குளம் பகுதியில் பாதுகாப்பில்லாத நிலையில் காணப்படும் மலசலகூடக் குழியொன்று ஆபத்தை எந்த நேரமும் ஏற்படுத்தலாம் என்ற அச்சத்தில் மக்கள் உள்ளனர்.
இந்தக் குழி வேப்பங்குளம் வீட்டுத் திட்டத்துக்குச் செல்லும் பாதையில் அமைக்கப்பட்டுள்ள பெட்டிக் கடைக்கு அருகில் காணப்படுகின்றது.
இந்தக் குழி எந்த நேரமும் திறந்த நிலையில் இருப்பதால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது. அத்துடன் மழை காலத்தில் தண்ணீர் இந்தக் குழியில் தேங்கி நிற்பதால் நுளம்புகள் உற்பத்தியாவதுடன் டெங்கு நோய் பரவும் அபாய நிலையும் ஏற்பட்டுள்ளது.
மேலும் மழை வெள்ளம் ஏற்பட்டு இந்தக் குழியை மேவி நீர் ஓடும் வேளைகளில் சிறுவர்கள் உட்படப் பலரும் இதில் வீழ்ந்து உயிராபத்தை எதிர்கொள்ள வேண்டிய அபாய நிலையும் தோன்றியுள்ளது. அண்மையில் கால்நடைகள் பல இக் குழியில் வீழ்ந்து மீட்கப்பட்ட சம்பவமும் நிகழ்ந்துள்ளது.
எனவே இந்தக் குழி மனித உயிர்களைக் காவு கொள்ள முன்னர் இதனை மூடிவிடுவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.
(க-402)

# பொன்தீவுக் கண்டல் காணிகளை முஸ்லிம் மக்களுக்கு வழங்காதீர்!

### அப்பகுதி மக்கள் அரச அதிபருக்கு அவசர மனு

மன்னார், ஒக்.29
தாம் பூர்வீகமாக வாழ்ந்த பொன்தீவுக் கண்டல் கிராமத்தின் காணிகள் சட்ட விரோதமாக முஸ்லிம் மக்களுக்கு வழங்கப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு இந்தக் கிராம மக்கள் மன் னார் அரச அதிபருக்கு மனுவொன்றைக் கையளித்துள்ளனர்.
அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-
இந்தக் கிராமம் 1866 ஆம் ஆண்டு 3 குடும்பங்களுடனேயே உருவானது. பூதத்தின் பொற்பேழை இந்தத்தீவில் இருப்பதால் இந்தக் கிராமம் பொன்தீவுக்கண்டல் எனப் பெயர்பெற்றது. இந்தத் தீவானது எமது கிராமத்தை அண்டிய தீவாக அமைந்துள்ளது. எமது மக்கள் இந்தத் தீவில் வசித்தமைக்கான ஆதாரங்கள் எம்மிடம் உள்ளன. உதாரணமாக அந்தோனி, பேருது, கைத்தான், பேதுருசெபமாலை, சுவக்கீன் சந்தான், கபிரியேல், அந்தோனி பிலிப்பையா போன்றோர்கள் இந்தத் தீவில் அன்று வாழ்ந்து வந்தார்கள். அவர்களின் வழித்தோன்றல்களே நாம். இங்கு வாழ்ந்தவர்கள் தொழில் நடவடிக்கைக்காகவும் இந்தத் தீவில் காணப்பட்ட தண்ணீர் தட்டுப்பாடு காரணமாகவும் சற்று அகன்று அண்மையில் உள்ள வயல்களை நிரப்பி வீடுகளை அமைத்து வாழ்ந்து வருகின்றனர். ஆனால் தற்போது எமது சமூகம் பரந்து விரிந்துள்ளது. இங்குள்ளவர்களுக்கு காணிகள் இல்லாத நிலையில் இந்தத் தீவை நாம் மீண்டும் புதுப்பித்து காணிகளைப் பிரித்து மக்களுக்கு வழங்குவதற்கு எண்ணியுள்ளோம். எமது கிராமம் முழுவதுமே கத்தோலிக்க மக்களைக் கொண்டுள்ளது. ஆனால் எமது கிராமத்துக்குச் சொந்தமான இந்தக் காணிகளை முஸ்லிம் மக்களுக்கு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் எமது மக்களுக்குக் காணிகள் இல்லாத நிலை ஏற்படும் என்பதைத் தங்களுக்கு அறியத்தருகிறோம்.
அத்துடன் எமது பொதுத் தேவைகளான குழந்தை இயேசு ஆலயம், அநாதை இல்லம் என்பன அமைப்பதற்கு கலந்தாலோசித்து வரும் வேளையில் இவ்வாறான இனவாதத்தை தூண்டும் இந்தச் செயற்பாடு எம்மக்களை ஆழ்ந்த கவலைக்குள்ளாக்கியுள்ளது. அத்துடன் எமது பாடசாலை மற்றும் விளையாட்டு மைதானம், சேமக்காலை, சூடடிப்புக்களம் ஆகியன இந்தத் தீவிலேயே அமைந்துள்ளன. அத்துடன் மல்வத்து ஓயா பெருக்கெடுக்கும் ஒவ்வொரு வேளையும் எம் மக்கள் இந்தத் தீவிலேயே தஞ்சம் புகுவதுண்டு. எனவே எமது நிலம் எமக்குத் தேவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். எனவே உடனடியாக இந்தச் செயற்பாட்டை தடுத்து நிறுத்துமாறு வேண்டிக் கொள்கின்றோம்.- என்றுள்ளது.
(க-12)



முத்துஜயன்கட்டு வலதுகரை இரண்டாம் கண்டத்திலிருந்து முத்துஜயன் கட்டு இடது கரை செல்லுகின்ற வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட பேராறுப் பாலம் உள்ள வீதியில் அமைந்துள்ள வேறொரு பாலம் சீரான முறையில் அமைக்கப்படாததால் பருவமழை ஆரம்பமாகவுள்ள வேளையில் உடைந்து போகும் நிலையில் உள்ளது. இதனால் இரண்டு கிராமங்களையும் இணைக்கும் பிரதான பாதை துண்டிக்கப்படும் அவல நிலையும் ஏற்பட்டுள்ளது. (க)

## மாணவர் வாசிப்பை உயர்த்த பாடசாலைகளில் நூலகங்கள்

### சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் நடவடிக்கை



கிளிநொச்சி, ஒக்.29
கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் 20 ஆரம்ப பாடசாலைகளில் மாணவர்களின் வாசிப்புத் திறனை உயர்த்தும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளது.
கிளிநொச்சி வலயப் பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவு மாணவர்களிடையே வாசிப்புத் திறன் குறைந்து காணப்படுகின்றது. இதற்கு முக்கிய காரணங்களாக கடந்த காலப் போர், இடம்பெயர்வு, நலன்புரி வாழ்வு ஆகியன அமைந்துள்ளன. இந்நிலையில் வாசிப்பு வாரத்தை முன்னிட்டு சிறுவர் பாதுகாப்பு நிறுவனம் பாடசாலைகளில் வாசிப்புத் திறனை அதிகரிக்கும் வகையில் நூலகங்களை உருவாக்கும் பொருட்டு பெற்றோர், சமூகப் பிரநிதிகள் ஆகியோருடன் கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது.
இந்த வகையில் அக்கராயன் ஆரம்ப வித்தியால்யத்தில் கடந்த 25 ஆம் திகதி கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.
பாடசாலை அதிபர் ப.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் திட்டமிடல் அலுவலர் எஸ்.கலிஸ்ரஸ் கருத்துரை வழங்கினர்.
(க-18)

## வவுனியா தெற்குப் பகுதியில் டெங்கு ஒழிப்புச் சிரமதானம்

வவுனியா, ஒக்.29
வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபைக்குட்பட்ட பிரதேசங்களில் சிரமதானப் பணிகளும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
பிரதேச சபைத் தலைவர் க.சிவலிங்கம் தலைமையில் பிரதேச சபை உறுப்பினர்களின் மேற்பார்வையின் கீழ் இந்தச் சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.
நெளுக்குளம், சாம்பல் தோட்டம், கூமாங்குளம், விநாயகபுரம், இராசேந்திரபுரம், நேரிய குளம், புதையற்பிட்டி உட்பட பல்வேறு பகுதிகளிலும் பொதுமக்கள் உள்ளூராட்சி வாரத்தையொட்டித் தாமாகவே வீதிகளையும் வீடுகளையும் துப்புரவு செய்து வருகின்றனர்.
இவ்வாறான துப்புரவுப் பணிகள் மூலமாக டெங்கு நுளம்புகளின் பெருக்கம் மட்டுப்படுத்தப்பட்டதுடன், சுகாதார நடைமுறைகளும் பேணப்பட்டு வருகின்றன எனவும் நெளுக்குளம் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்தனர். (க-402)

## வர்த்தக நிலையங்களில் முண்டியடிக்கும் மக்கள்

தீபாவளித் திருநாளை முன்னிட்டு வவுனியா வர்த்தக நிலையங்கள் சனக் கூட்டத்தால் நிரம்பி வழிகின்றன.
உடுபுடைவைகள், துணி வகைகள் என்பன நடைபாதைகளில் விற்பனை செய்யப்படுவதையும் காண முடிகின்றது.
தமிழர்களின் திருநாளில் ஒன்றான தீபாவளித் திருநாளையொட்டி வர்த்தக நடவடிக்கைகள் வவுனியாவில் களைகட்டத் தொடங்கியுள்ளன. தீபாவளி வாழ்த்து அட்டைகள், உடுபுடைவைகள், சீன வெடிகள் உட்பட பல்வேறு பொருள்களின் விற்பனை கடந்த வாரமுதல் அதிகரித்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்தனர்.
கடந்த மாதங்களில் இந்த வர்த்தக நிலையங்களில் விற்பனை மந்த கதியிலேயே இருந்தன. தற்போது தீபாவளியை முன்னிட்டு பெருமளவான பொருள்கள் இங்கு கொண்டு வரப்பட்டதால் மக்கள் தட்டுப்பாடு இன்றிப் பொருள்களைக் கொள்வனவு செய்து வருகின்றனர். மேலும் வழமையை விடவும் அதிக நேரம் வர்த்தக நிலையங்கள் திறந்து வைக்கப்பட்டிருப்பதையும் காண முடிகின்றது.
(க-402)

## அக்கராயன் பகுதிக்கு நூலக வசதிகள்

அக்கராயன், ஒக்.29
அக்கராயன் பகுதிக்கு நூலக வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
கிளிநொச்சி அக்கராயன் ஆரம்ப வித்தியாலயம் அக்கராயன் கொங்காதரன் குடியிருப்பு, அக்கராயன் மத்திய பகுதி ஆகிய இடங்களிலேயே புதிதாக நூலக வசதிகள் உருவாக்கப்படவுள்ளதாக சிறுவர் பாதுகாப்பு நிறுவனத்தின் திட்ட அலுவலர் எஸ்.கலிஸ்ரஸ் தெரிவித்தார்.
வாசிப்பு வார நிகழ்வுகளின் தொடர்ச்சியாக இந்த நூலக வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.
ஆரம்பப் பிரிவு மாணவர்களின் வாசிப்புத் திறனை மேம்படுத்துவதே இந்த நூலகங்களை அமைப்பதன் முக்கிய நோக்கமாகும்.
கட்டட வசதி உள்ள இடங்களில் நேரடியாகவும் கட்டட வசதியில்லாத இடங்களில் பாடசாலைகள் ஊடாகவும் நூல்கள் வழங்கப்படவுள்ளன- என்றும் அவர் தெரிவித்தார்.
(க-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற ஐந்து பேர் கைது

அம்பாறை, ஒக்.29
சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றதாகக் கூறப்படும் 5 பேரை தமண பொலிஸார் கைது செய்துள்ளனர்.
மின்சார சபையின் அம்பாறை கிளையினரும் தமண பொலிஸாரும் இணைந்து ஞாயிற்றுக்கிழமை இரவு சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.
இதன்போது சட்டவிரோதமாக மின்சாரம் பெற்றதாகக் கூறப்படும் 5 பேரை பொலிஸார் கைது செய்தனர்.
தமண, இறக்காமம், இங்குராணை ஆகிய பிரதேசங்களிலேயே இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டது
சட்டவிரோதமாக மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்காக பயன்படுத்திய மின்சார வயர்களையும் பொலிஸார்



கைப்பற்றியுள்ளனர்.
சந்தேகநபர்களை அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## சிகிச்சை பெற பாம்புடன் வந்த நபர்

திருகோணமலை, ஒக்.29
வெருகல் பிரதேச வைத்தியசாலைக்கு ஞாயிற்றுக்கிழமை அதிகாலை ஒரு மணிக்கு ஒருவர் பாம்புடன் வந்துள்ளார் என்று வைத்திய சாலையின் பொறுப்பு வைத்தியர் பாக்கியதுரை வடிவுக்கரசி தெரிவித்தார்.
ஈச்சிலம்பற்று, கிண்ணையடியைச் சேர்ந்த எஸ். கோபி(வயது-27) என்பவரே இவ்வாறு பாம்புடன் வைத்தியசாலைக்கு வந்துள்ளார்.
சனிக்கிழமை இரவு வீட்டில் தூங்கிக் கொண்டிருக்கும்போது பாம்பு அவரது கழுத்தைச் சுற்றியுள்ளது. உடனடியாக தூக்கம் கலைந்து விழித்தெழுந்த அவரின் கழுத்தில் பாம்பு மாலை போலத் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டுள்ளார்.
உடனே பாம்பை கழுத்தை விட்டுப் பிரித்தெடுக்க முயற்சித்துள்ளார். அந்தத் தருணம் பாம்பு கையிலும் வளையமாகச் சுற்றிப் பிடித்துள்ளது. கடும் முயற்சியின் பின்னர் கையிலிருந்தும் பாம்பைப் பிரித்தெடுத்து போத்தல் ஒன்றினுள் போட்டு அடைத்துக் கொண்டு வைத்தியசாலைக்குச் சென்றுள்ளார்.
நல்லவேளையாக பாம்பு அவரைத் தீண்டியிருக்கவில்லை. எனினும் அவரை உடனடியாக திருகோணமலை வைத்திய சாலைக்கு அவசர சிகிச்சைக்காக அனுப்பி வைத்துள்ளதாக வைத்தியர் பாக்கியதுரை வடிவுக்கரசி தெரிவித்தார்.





இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் திருகோணமலை சிவானந்த தபோவனத்தில் நடைபெற்ற பாரம்பரிய கலைகளின் திருவிழாவில் பல்வேறு கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.

# மாகாணசபை நிதி ஒதுக்கீடுகளில் தமிழ் பிரதேசங்கள் புறக்கணிப்பு

## சாடுகிறார் துரைரெட்ணம்

மட்டக்களப்பு, ஒக்.29
கிழக்கு மாகாணசபையின் நடப்பாண்டுக்கான நிதி ஒதுக்கீடுகளிலும், அமைச்சின் சிற்றூழியர் நியமனங்களிலும், பாரபட்சமான முறைமையில் ஆளும் தரப்பு நடந்து கொண்டுள்ளது. அதனால் தமிழ் பிரதேசங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளன.
இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் குற்றம் சாட்டியுள்ளார்.
இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
வடக்கு, கிழக்கு மாகாண சபை இரண்டாகப் பிரிக்கப்பட்டதன் பின்னர் நடைபெற்ற இரண்டாவது தேர்தலின் பின் மக்கள் பிரதிநிதிகளின் ஆட்சி ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருட பூர்த்தியை எட்டியுள்ளது. கிழக்கு மாகாண சபையில் விரும்பியோ, விரும்பாமலோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு போட்டியிட்டு வெற்றி பெற்று எதிர்க்கட்சியில் இருந்து செயல்பட்டு வருகின்றது.
இந்தக் கால கட்டத்தில் மாகாண சபையின் சகல திணைக்களங்களையும் சேர்ந்த உயர் அதிகாரிகளும், உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் தங்களது கடமைகளைச் சிறப்பான முறைமையில் நிறைவேற்றியமை பாராட்டுக்குரியது.
இத்தகைய சூழலில் ஒருசில அமைச்சுகளுக்கான நடப்பாண்டுக்கான நிதி ஒதுக்கீடுகளிலும், அமைச்சின் சிற்றூழியர் நியமனங்களிலும் இன விகிதாசாரப் பரம்பலை கவனத்தில் கொள்ளாமல் முறை



கேடான முறைமையில் ஆளும் தரப்பு நடந்து கொண்டுள்ளது.
கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சுக்கு 2013 ஆண்டு ஆயிரம் பாடசாலை திட்டத்துக்கென மொத்தம் 40 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டன. அதில் அம்பாறை மாவட்டச் சிங்களப் பாடசாலைகளுக்கு 30 மில்லியன் ரூபாவும், மட்டக்களப்பு மாவட்டப் பாடசாலைகளுக்கு 5மில்லியன் ரூபாவும், திருகோ ணமலை மாவட்டப் பாடசாலைகளுக்கு 5 மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளன.
சுகாதார அமைச்சு திருகோணமலை மாவட்டத்துக்கு 69 மில்லியன் ரூபாவும், அம்பாறை மாவட்டத்துக்கு 99 மில்லியன் ரூபாவும், மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 52 மில்லியன் ரூபாவையும் ஒதுக்கியுள்ளது.
உள்ளூராட்சி அமைச்சு திருகோணமலை மாவட்டத்துக்கு 32மில்லியன் ரூபாவையும், மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 24 மில்லியன் ரூபாவையும், அம்பாறை மாவட்டத்துக்கு 31 மில்லியன் ரூபாவையும் ஒதுக் கியுள்ளது.
கிழக்கு மாகாணசபையின் பாரபட்சமான செயற்பாடுகளை உடன் தடுத்து நிறுத்தி நல்லாட்சிக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சம்பளத்தை அதிகரிக்ககோரி உத்தியோகத்தர் போராட்டம்

அம்பாறை, ஒக்.29
அம்பாறை, தமண பிரதேச சபை உத்தியோகத்தர் ஒருவர் இங்குராணை பிரதேச தனியார் தொலைத்தொடர்பு கோபுரத்தின் உச்சியில் ஏறி நேற்று திங்கட்கிழமை காலை முதல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார் என்று தமண பொலிஸார் தெரிவித்தனர்.
தனது மோட்டார் சைக்கிள் எரிபொருள் கொடுப்பனவையும் சம்பளத்தையும் அதிகரிக்குமாறு கோரியே அவர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.
தமண பிரதேச சபையின் வருமான வரி உத்தியோகத்தராக கடமையாற்றும் ஆர். டி.டி.சோமசிறி என்பவரே, இவ்வாறு கோரிக்கை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.
வருமானவரி அறவீடு செய்வதற்காக மோட்டார் சைக்கி



ளுக்கு வழங்கும் எரிபொருளை 3 ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரித்துத்தருவதோடு, தனது சம்பளத்தையும் கூட்டித் தருமாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.
எனது கோரிக்கையை நிறைவேற்றும் வரை போராட்டத்தை கைவிட மாட்டேன் என்று தமண பிரதேச சபையின் வருமான வரி உத்தியோகத்தரான ஆர்.டி.டி. சோம சிறி தெரிவித்தார். (ச)

## காலாவதியான உணவை வைத்திருந்தோர் மாட்டினர்

மட்டக்களப்பு, காத்தான்குடி நகர சபைப் பிரிவில் பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்களை வைத் திருந்ததாகக் கூறப்படும் 5 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று காத்தான்குடி மேற் பார்வை



பொதுச்சுகாதார பரிசோதகர் ஏ.எம்.றபீக் தெரிவித்தார்.
உணவுப் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு காத்தான்குடியில் உள்ள ஹோட்டல்கள், சிற்றுண்டிச்சாலைகள், உணவகங்கள் ஆகியவற்றில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட பரிசோதனையின் போதே, பாவனைக்கு உதவாத உணவுப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
இந்தப் பரிசோதனையை காத்தான் குடி சுகாதார வைத்திய அதிகாரி யுஎல்.நசிர்தீனின் வழிகாட்டலில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்டனர். (ச)

## நிலங்கள் ஆக்கிரமிப்பு; எதிர்த்துப் போராட்டம்

மட்டக்களப்பு, ஒக்.29
திருக்கோவில், வட்டமடு பிரதேசத்தில் கால்நடைகளுக்காக ஒதுக்கப்பட்ட மேய்ச்சல் தரை பிரதேசத்தில் அத்துமீறி சட்டவிரோதமாக காடுகளை அழிப்பது மற்றும் மேய்ச்சல் தரைக்கு சொந்தமான நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ளல் ஆகியவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கால்நடை பண்ணையாளர்கள் வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.
அம்பாறையில் பால் உற்பத்தியை பெருக்குவதற்காக 1976 ஆம் ஆண்டு வர்த்தமா



னியில் வட்டமடு பிரதேசம் கால்நடைக ளுக்கான மேய்ச்சல் தரைக்காக அறிவிக்கப்பட்டது.
இந்நிலையில் கடந்த காலப் போர் காரணமாக இந்தப் பிரதேசத்துக்கு மக்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அதனைப் பயன்படுத்திய சிலர் சட்டத்துக்கு விரோதமாக மேய்ச்சல் தரைக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களை சிலர் ஆக்கிரமிப்பு செய்து வருகின்றனர். (ச)

## தனியார் கட்டடங்களில் இயங்கும்

# மாட்டிறைச்சிக் கடைகளை குத்தகைக்கு விடமுடியாது

மட்டக்களப்பு, ஒக்.29
தனியார் கட்டடங்களில் இயங்கும் மாட்டிறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்வி கோரப்படுவது சட்ட முரணான விடயமாகும்.
கல்முனை மாநகரசபையின் ஐக்கி மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் இஸட்.ஏ.எச்.றஹ்மான், கல்முனை மாநகர ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள மனுவிலேயே இவ்வாறு கூறியுள்ளார்.
இந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-
கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கட்டடங்களில் மாட்டிறைச்சிக் கடை



களை நடத்துவதற்கான கேள்வி கோரல் விண்ணப்பம் வருடா வருடம் கோரப்படுவது வழமையாகும்.
ஆனால் தனியார் கட்டடங்களில் இயங்கும் மாட்டிறைச்சிக் கடைகளை குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்வி கோரப்படுவது சட்டத்துக்கு முரணான விடயமாகும்.
தனியார் கட்டடங்களில் இயங்கும் மாட்டிறைச்சிக் கடைகளுக்கு சட்டத்துக்கு முரணனாக கேள்வி கோரப்படும்போது மாட்டிறைச்சிக் கடைகளை அதிக குத்தகைக்கு பணம் செலுத்தி பெற வேண்டிய நிலை ஏற்படுகின்றது.
அதனால் இறைச்சிக் கடைக்காரர்கள் பாவனையாளர்களுக்கு இறைச்சியை அதிக விலைக்கு விற்க வேண்டிய நிலை எற்படுகின்றது. அதனால் பாவனையாளர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.
கடந்த இருபது வருடங்களாக இந்த நடை முறையே பின்பற்றப்பட்டு வருகின்றது. இந்தப் பிழையான நடவடிக்கைக்கு நாங்கள் துணை போக முடியாது.
எனவே தனியார் கட்டடங்களில் இயங்கும் மாட்டிறைச்சிக் கடைக்காரர்களுக்கு மாநகர சபையால் வழங்கப்படும் வியாபார அனுமதிப் பத்திரத்துக்கான கட்டணம் மட்டுமே அறவிடப்படவேண்டும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மேல்மாகாணசபைத் தேர்தலில்

# பலவீனப்படுத்தாமல் விட்டுக்கொடுங்கள்!

## ஏனைய தமிழ்க் கட்சிகளிடம் கோருகிறார் மனோகணேசன்

கொழும்பு, ஒக்.29

சமீபகால வடமாகாண, சப்ரகமுவ மாகாண தேர்தல் வரலாறுகளை எடுத்து பார்த்து, மேல்மாகாணத்தில் எங்களைப் பலவீனப்படுத் தாமல் இருக் கும் கடப்பாடு சம்பந்தனுக்கும், ஆறுமுகன் தொண்ட மானுக்கும் உள் ளது. அதை அவர்கள் செய்யவேண்டும்.

இவ்வாறு ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

கொழும்பு தமிழ்ச் சங்கம் நடத்திய கண்ணதாசன் நினைவு நிகழ்வில் கலந்து கொண்ட மனோகணேசன் மேலும் தெரிவித்ததா வது:-



மேல்மாகாணசபைத் தேர்த லில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு கொழும்பில் நேரடி யாகப் போட்டியிடுமா அல் லது உங்கள் கட்சிக்கு ஆத ரவு வழங்குமா என்று என் னைப் பலர் கேட்கிறார்கள். இதற்கு நான் என்ன பதில் சொல்ல முடியும்? இந்தக் கேள்வியை கூட்டமைப்பு தலைவர் சம்பந்தனிடம் கேளுங்கள் என்று நான் சொல்கிறேன். அதேபோல் சேவல் சின்னம் மேல் மாகா ணத்தில் களமிறங்குமா என் றும் என்னிடம் கேட்கிறார் கள். இதற்கும் நான் என்ன சொல்ல முடியும்? இது பற்றி சேவலுக்கு சொந்தக்காரரான அமைச்சர் ஆறுமுகன் தொண் டமானிடம் கேளுங்கள் என்று தான் நான் கூறியுள்ளேன்.

கடந்த காலத்தில் நாங்கள் அவர்களுக்கு செய்துள்ளதை சுட்டிகாட்டி, மேல்மாகா ணத் தில் எங்களைப் பலவீனப்ப டுத்தாமல் இருப்பதற்கு, கூட் டமைப்புக்கும், இ.தொ. காவுக்கும் இருக்கின்ற கடப் பாட்டை ஞாபகப்படுத்த மட் டுமேஎன்னால் முடியும். மேல் மாகாணத்தில் ஜனநாயக மக்கள் முன்னணிக்கு வாக்க ளிக்கும் கடப்பாடு தமிழ் பேசும் மக்களுக்கு இருக்கின் றது. அதை அவர்கள் செவ் வனே செய்வார்கள் என்ற நம் பிக்கை எனக்கு இருக்கின்றது.

வடமாகாணசபை தேர்த லின்போது, நாங்கள் வடக்கே சென்று கூட்டமைப்புக்கு ஆத ரவளித்தோம்.

அதேபோல் சப்ரகமுவ மாகாணத் தேர்தலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுடன் கரங்கோர்த்து போட்டியிட்டு அங்கு தமிழ் பிரதிநிதித்துவங்களை பெற்று எடுத்தோம். நமது கூட்டு செயற்பாடு பற்றி நண்பர் ஆறுமுகன் தொண்டமானுக் கும், பெரியவர் சம் பந்தனுக் கும் நன்கு தெரியும்.

வடக்கை விட, மலைய கத்தை விட மேல்மாகாணம் ஒரு சிறிய தளம். ஆகவே மேல்மாகாணத் தேர்தலை இந்த இரண்டு கட்சிகளுடன் பகிர்ந்து கொள்ள சாத்தியம் கிடையாது. அத்துடன் பெரும் பான்மை கட்சி வேட்பாளர் களுடன் சமர் செய்து இங்கே வெற்றி பெறுவது சுலபமும் அல்ல. இந்நிலையில் இங்கு தமிழ் வாக் குகள் சிதறடிக்க பட்டால், தமிழ் பிரதி நிதித்து வம் பறிபோகும். இதைக் கவனத்தில் கொண்டே நாங் கள் கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மூன்று மாவட்டங்களிலும் எங்க ளுக்கு எதிராகப் போட்டியிடும் அனைத்து அணியின ருக் கும் எதிராகப் போட்டியிட வியூகம் வகித்து வருகிறோம் - என்றார்.

## ஜெயசூரியாவின் மனைவி விவாகரத்து கோரி வழக்கு



கொழும்பு, ஒக்.29

இலங்கை கிரிக்கெட் அணியின் முன் னாள் தலைவரும் கிரிக்கெட் தெரிவுக்குழுவின் தலைவரும் பிரதியமைச் சருமான சனத்ஜெயசூரியாவின் மனைவி விவாகரத்து கோரி விண்ணப்பித்திருக்கின்றார் என்று சட்டத்தரணிகள் ஊடாகத் தெரியவந்துள்ளது.

சனத்தின் மனைவியான சன்ரா ஜெயசூரியா, கொழும்பு நீதிமன்றத்தில் கடந்த 23 ஆம் திகதி விவாகரத்து கோரி விண்ணப்பம் செய்தார் என்று அவருடைய சட்டத்தரணி அனோமா குணதிலக்க தெரிவித்தார்.

சனத் ஜெயசூரியாவிற்கு அறிவிப்பு கொடுத்தபின் வழக்கு தொடரும் என்றும் அவர் மேலும் கூறினார்.

2010 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத்தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற சனத் ஜெயசூரியா பிரதியமைச்சராக இம்மாதம் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது மனைவியின் விவாகரத்து விண்ணப்பத்தில் தனக்கு இருபது மில் லியன் ரூபாய் வீதம் தனக்கும், தனது மூன்று பிள்ளைகளுக்கும் தரவேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

## அதிவேக நெடுஞ்சாலை மூலம் 3 மில்லியன் ரூபா வருமானம்

### 13 மணித்தியாலங்களில் மட்டும்

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை மூலம் 13 மணித்தியா லங் களில் மூன்று மில்லியன் ரூபா வருமானம் கிடைத் துள்ளது.

கொழும்பு - கட்டுநாயக்கா அதிவேக நெடுஞ்சாலை ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ வினால் நேற்றுமுன்தினம் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிலையில், நேற்றுமுன் தினம் மாலை 6.00 மணி தொடக்கம் நேற்றுக் காலை 7.00 மணிவரை யான காலப்பகுதியிலேயே இந்த வருமானம் கிடைத்துள் ளது.

அதேவேளை, குறித்த காலப் பகுதி யில் இந்தப் வீதியால் 11 ஆயிரம் வாகனங்கள் பய ணித்துள்ளன என்று வீதி அபி விருத்தி அதிகாரசபை தெரிவித் துள்ளது.

25.8 கிலோ மீற்றர் நீள முள்ள இந்த அதிவேகப் பாதை சீன அரசின் அனுசரணை யோடு அமைக்கப்பட் டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## அதிவேக நெடுஞ்சாலையில் சொகுசு பஸ் சேவை ஆரம்பம்





கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் சொகுசு பஸ் சேவை நேற்று திங்கட்கிழமை காலையிலி ருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த அதிகவேக நெடுஞ்சாலையில் சுமார் 20 சொகுசு பஸ்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இதன் ஆரம்ப நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் சுதர்சினி பெர்னான்டோபிள்ளை உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

கொழும்பு - கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையூடாக நீர்கொழும்பிலிருந்து கொழும்புக்கான விசேட சொகுசு பஸ் சேவையும் நேற்று ஆரம்பித்துவைக்கப்பட்டது.

நீர்கொழும்பு பிரதான பஸ் நிலை யத்திலிருந்து இந்த சொகுசு பஸ் சேவையை பிரதி அமைச்சர் சரத்குமார குணரட்ன ஆரம்பித்து வைத்தார்.

அதிவேக நெடுஞ்சாலையூடாக நீர் கொழும்பிலிருந்து கொழும்பிற்கு ஏழு பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன.

## மாணவன் வன்புணர்வு; பிக்குவுக்கு வலைவீச்சு

பாடசாலை மாணவன் ஒருவரைக் கடுமையான முறையில் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய பௌத்த பிக்குவை கைது செய்வதற்கான நட வடிக்கையை மாரவில பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

நாத்தாண்டிய பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றில் தரம் 9இல் கல்வி பயிலும் 13 வயதுடைய சிறுவன் ஒருவனே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். குற்றஞ்சுமத்தப்பட்டுள்ள பிக்கு, சிறுவன் கல்வி கற்கும் பாடசாலையில் கல்வி கற்பித்து வருபவர் எனத் தெரி யவந்துள் ளது.

நடனம் மற்றும் சங்கீதப் போட்டி பயிற்சிக்கு குறித்த மாணவன் சென்றவேளை, அவ்ரை பிக்கு துஷ்பிர யோகத்திற்கு உட்படுத்தியுள்ளார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் முதல் ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி வரையில் சிறுவன் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத் தப்பட்டுள்ளான் என்று பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட் டுள்ளது.

சந்தேகநபர் இதுவரையில் கைது செய்யப்பட வில்லை என்று தெரிவித்த மாரவில பொலிஸார், இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கடல் எல்லையை மீறிய காரணத்தால்

## 82 இலங்கை மீனவர்கள் கைதாகி வெளிநாடுகளில்

கடல் எல்லைகளை மீறிய மையால் 82 இலங்கை மீனவர்கள் வெளிநாடு களில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கடற்றொழில் திணைக் களம் தெரி வித்துள்ளது.


இவர்களின் 16 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என் றும் திணைக் களத்தின் பணிப்பாளர் நாயகம் நிமல் ஹெட்டிஆராய்ச்சி கூறுகின் றார்.

இந்தியா, மியன்மார் மற்றும் ... ஆகிய நாடுகளில் குறித்த இலங்கை மீனவர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 63 பேர் இந்திய கடற்பரப்பில் கைது செய்யப் பட்டுள்ளனர் என்று கடற் றொழில் திணைக்களம் சுட் டிக்காட்டுகின்றது.

வெளிநாடுகளில் கைதுசெய் யப்பட்டுள்ள மீனவர்களை விடுவிப்பதற்காக இராஜதந் திர மட்டத்தில் கலந்துரையாடி வருவதாக திணைக்களத் தின் பணிப்பா ளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

அடுத்த சில வாரங்களுக்குள் கைது செய்யப்பட்டுள்ள மீன வர்களை மீட்க நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ள தாகவும் கடற்றொழில் திணைக் களத் தின் பணிப்பாளர் நாய கம் நிமல் ஹெட்டி ஆராய்ச்சி மேலும் தெரிவித்துள்ளார்.



## தம்புள்ளையில தீ விபத்து

தம்புள்ளை - தம்மன்னா எல பிரதேசத்தில் உள்ள மரக்கறி மற்றும் பழக்கடை கள் என்பன திடீர் தீ விபத் தின் காரணமாக எரிந்து நாசமாகியுள்ளன.

நேற்றுமுன்தினம் இரவு 9.00 மணியளவில் ஏற்பட்ட இந்த தீ விபத்தை தம்புள்ளை பொலிஸார், தம் புள்ளை நகரசபை தீயணைப்பு படை யினர், மின்சார சபையினர் மற்றும் பிரதேசவாசிகள் ஆகி யோர் இணைந்து தீயை அணைத்தனர் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## வடக்கின் நிலம் சார்ந்த வளங்களைப் பாதுகாக்க விரைந்து மனம் கொள்வோம்

கிளிநொச்சி வன்னேரிக்குளம் கிராமம் ஆபத்தில் உள்ளதாக அபாயமணி அடிக்கப்படுகிறது. அங்குள்ள பெரு மரங்கள் அழிக்கப்படுவதால் அந்தக் கிராமம் உவராகும் விளிம்பில் உள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. குறிப்பாகப் பாலை போன்ற பெருமரங்கள் கேட்பார். தடுப்பார் இன்றி மிகப் பெரும் எண்ணிக்கையில் தறிக்கப்படுவதால் மழைவீழ்ச்சி குன்றி . சுற்றுச்சூழல் பெருமளவில் பாதிக்கப்படும் ஆபத்து விரைந்து வந்து கொண்டிருப்பதாக அந்தப் பிரதேச வாசிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

வன்னி மாநிலத்தில் நடைபெற்ற பெரும்போரின் போது. ஷெல் மற்றும் குண்டு வீச்சுக்களால் மர வளம் பெருமளவில் அழிந்து போயிற்று; அழிக்கப்பட்டு விட்டது. அவற்றை ஈடு செய்வதற்கு துரிதகதியில் மரம் நட்டு. வனவளத்தைப் பெருக்கி ஈடு செய்ய வேண்டிய வேளை இது.

ஆனால் அதற்கு நேர்மாறாக மர அழிப்பும், அதனூடான காடழிப்பும் தங்கு தடையின்றி, த்டுப்பார் எவரும் இன்றி பெரும் வீச்சில் நடத்தப்படுகின்றன.

போர் நடைபெற்ற வேளையிலும் கூட, சுய பிரக்ஞையுடன் மிகப்பெரும் எண்ணிக்கையான தேக்க மரங்கள் வன்னிப் பிரதேசம் எங்கணும் நாட்டப்பட்டு பேணி வளர்க்கப்பட்டன.

என்னே அக்கிரமம், போர் முடிவுற்ற கையோடு. முதிரடைந்த அந்த மரங்கள் , கேட்பார் தடுப்பார் இன்றி, இரவிலும் பகலிலுமாக 'லொறி லொறியாக' தென்னிலங்கைக்கு ஏற்றிச் செல்லப்பட்டன.

வன்னேரிப் பகுதியின் காட்டு வளம் அழிக்கப்பட்டுக் கொண்டிருப்பதால் அந்தப் பிரதேசத்தின் நீர் வளம் மிகப் பெரிய அளவில் பாதிப்புறும், அதனூடு விவசாயம் பிழைக்கும். அப்பிரதேச மக்களின் பிரதான தொழிலான விவசாயம் செய்ய முடியாத கட்டத்தில் அவர்கள் குடிபெயர நேரிடலாம். அதற்கு நிர்ப்பந்திக்கப்படுவர்.

வன்னேரிக்குளம் பிரதேசத்தின் குஞ்சுக்குளம் பகுதியில், நன்னீர் உவரானதால் மக்கள் இடம்பெயர வேண்டிய துர்ப்பாக்கியம் உண்டானமை இங்கே குறிப்பிடப்பட வேண்டியதாகும்.

வன்னேரிக்குளம் குடியேற்றத்திட்டம் 1953 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. அதன் உயிர்நாடியாக விளங்குவது அந்தக் குளமே. கிளிநொச்சிப் பிரதேசத்திலேயே எழில் கொஞ்சும் பிரதேசமாக அது விளங்கியது.

முன்னர் அந்தப் பிரதேசத்தை சுற்றுலா மையமாக மாற்றும் திட்டமொன்று இருந்தது. கரைச்சிப் பிரதேச சபையால் அதற்கான, அது தொடர்பான தீர்மானமும் நிறைவேற்றப் பட்டிருந்தது.

அதனை மனதில் வைத்தாவது வன்னேரிக்குளம் கிராமம் உவராகுவதைத் தடுப்பதில் உடனடிக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

வடக்கு மாகாண சபை உருவாகிவிட்டது. காடழிப்பு, பயன்தரு மரங்களை அழித்து நீர், நில வளங்களை நிர்மூலமாக்குதல் மற்றும் இயற்கை வளங்களைச் சீண்டுதல்- மாகாணத்தின் வளங்களை சிதைப்பதாகும். அவற்றை அழிப்போரைப் புல்லுருவிகளாகக் கருதி, அதற்கான, கடுமையான சட்ட திட்டங்களை' வகுத்துத் தண்டிக்க வேண்டும். வெறும் அறிவுறுத்தல்கள் நாட்டுப்பற்று உள்ளவர்களை மட்டுமே தமது தவறுகளை உணர வைக்கும். ஆகையால் அதற்கு சட்ட விதிகளை நிறைவேற்றுவதில் வடக்கு மாகாண சபை விரைந்து செயற்பட வேண்டும்.

விவசாயம், கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, உள்ளூராட்சி அலகுகள், போக்குவரத்து சமூக சேவை உட்பட பல விடயங்களில், சட்ட அதிகாரங்களை கைக்கொள்ளவும் , அவற்றுக்கான சட்ட விதிகளை இயற்றவும் மாகாண சபைகளுக்கு அதிகாரம் உண்டு. அரசமைப்புச் சட்டத்துக்கான பதின்மூன்றாவது திருத்தம் அதற்கு வகை செய்கிறது.

காணி உரிமை, காணிப் பங்கீடு, காணிகளைப் பாராதீனப்படுத்துதல், அரச காணிகளில் குடியமர்த்தல், காணி அபிவிருத்தி உட்பட்ட இன்னும் பல அம்சங்கள் அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தின் முக்கிய பிரிவுகளாக அடக்கப்பட்டுள்ளன.


எங்கள் மத்தியிலும் புல்லுருவிகள் இருப்பார்கள் இருக்கிறார்கள் என்பதனைப் புரிந்து கொண்டு, -

தெரிந்தவர் தெரியாதவர், அரச ஆதரவாளர் , நலன் விரும்பி என்ற வகுப்பனவுகள் இல்லாமல், இயற்கை வளங்களைச் சீண்டுவோரையும் , அவற்றைத் தமது சுயநலன்களுக்கு பயன்படுத்த முனைவோரையும் தண்டிக்க வேண்டும்.

அதற்கான சட்ட விதிகளை விரைந்து செயற்படுத்த வடக்கு மாகாண சபை முன் வரவேண்டும்.

# தேர்தலுக்குப் பின்...

இரா.உமா



"எயர் லங்கா விமானம் ஏறி கலை இலக்கிய சங்கமத்துக்கு மட்டும் ஈழம் வந்து போகின்றவர்களும், இந்தியாவின் ராஜபக்ஷ, மோடியோடு கூட்டணி வைத்து, பத்ம வியூகம் அமைப்பதில் முன்னணியில் நிற்பவர்களும், விக்னேஸ்வரன், ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்றதில் எனக்குத் துளியும் மகிழ்ச்சியில்லை' என்று சொல்வதும், விமர்சனம் செய்வதும் எந்த விதத்திலும் நியாயமில்லை.

07.10.2013 அன்று, நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் வடக்கு மாகாண முதலமைச்சராக பதவியேற்றுக் கொண்டார். அமைச்சர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கடந்த 11ஆம் திகதி பதவியேற்றனர். முதன்முறையாக வடக்கில், தங்களுக்கான ஒரு மாகாண அரசைத் தமிழ்மக்கள் அமைத்திருக்கிறார்கள்.

இந்த வெற்றியானது, ஈழத்தமிழர்களைப் பற்றி இரண்டு வெவ்வேறு விதமான எண்ணங்களை, உலகநாடுகளுக்கும், சிங்கள அரசியல்வாதிகளுக்கும் தோற்றுவித்துள்ளது. இந்த வெற்றி, சுயஉரிமையே, தமிழ்மக்கள் விரும்பும் அரசியல் தீர்வு என்பதை உலக நாடுகளுக்கு உணர்த்தியிருக்கிறது. மற்றொருபுறம், சிங்கள ஆட்சியாளர்களுக்கு ஒருவிதமான அச்சத்தை உருவாக்கியிருக்கிறது.

உண்மையில் இப்போது அமைந்துள்ள வடக்கு மாகாண அரசு, மத்திய சிங்கள ஆட்சிக்குக் கீழ் அமைந்துள்ள அரசு. ஒரு மாநில அரசுக்குரிய முகாமையான அதிகாரங்களான நிலம்சார்ந்த அதிகாரமும்,பொலிஸ் அதிகாரமும் மாகாண அரசுக்குக் கிடையாது. இனி மேலும் வழங்கப்படக்கூடாது என்று, ஜாதிக ஹெல உறுமய உள்ளிட்ட இனவாதக் கட்சிகள் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருக்கின்றன. எந்த ஒரு வளர்ச்சி நடவடிக்கையையும், சிங்கள ஆளுநரின் ஒப்புதலுடன்தான் மேற்கொள்ளப் படமுடியும். சுருக்கமாகச் சொன்னால், ஆட்சியில் இருந்தாலும், அதிகாரமற்ற அரசாகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசு இருக்கும்.

### எதற்காக அச்சம்

"விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவுதான், தேர்தலில் நின்று வெற்றி பெற்று, ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது. அரசியல் தந்திரத்தின் மூலம், தமிழர்கள் தங்களுடைய உரிமைகளைப் பெற்றுவிடுவார்களேயானால், அதனைச் சிங்களவர்களால் திரும்பப் பெற முடியாது. தமிழ் இன வாதம் புதிய வடிவில் ஆரம்பித்துள்ளது" என்று ஜாதிக ஹெல உறுமய கட்சியைச் சேர்ந்த அமைச்சர் உதய கம்மன்பில சொல்கிறார். "மீண்டும் நந்திக்கடல் நோக்கிப் போக வேண்டாம் என்று விக்னேஸ்வரன் ஐயாவைக் கேட்டுக்கொள்கிறோம்" என்றும்எச்சரிக்கிறார். இப்படிப் பேசி, சிங்கள மக்களிடம் அச்சத்தையும், இனவெறியையும் தூண்டி விடுகின்ற வேலைகளில் சிங்கள அமைப்புகள் இறங்கியிருக்கின்றன.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் உலக நாடுகளின் கண்துடைப்புக்காக நடத்தப்பட்ட தேர்தல்தானே அன்றி, தமிழர்களுக்கு உண்மையான அரசியல் அதிகாரத்தை வழங்கும் நோக்கில் நடத்தப்பட்ட தேர்தலன்று என்பதையே இதுபோன்ற பேச்சுகள் காட்டுகின்றன.

### எச்சங்களை அழிக்கும் நடவடிக்கை ஏன்?

வடக்குப் பகுதியில் வளர்ச்சிப் பணிகள் பாதிக்கப்படாது, இலங்கை மத்திய அரசு தமிழ் மாகாண அரசுக்குத் தேவையான ஒத்துழைப்பை வழங்கும் என்றெல்லாம் ஒரு பக்கம் சொல்லப்பட்டாலும், நிலவுகின்ற சூழல் அதற்கு மாறாகவே உள்ளது. ஈழத்தமிழர்களின் விடுதலைப் போராட்ட நினைவுகளை அந்த மண்ணில் இருந்து சுவடே இல்லாமல் அழித்துவிட நினைக்கின்றனர் சிங்கள ஆட்சியாளர்கள்.

ஏற்கனவே மாவீரர் துயிலும் இல்லங்களும், புலிகளின் தலைவரின் பிறந்த வீடும் சிதைக்கப்பட்டுவிட்டன. தொடர்ந்து, புதுக்குடியிருப்புப் பகுதியில் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் பயன்படுத்திய கட்டடம் என்று சொல்லி, நிலக்கீழ் மாடிகளைக் கொண்ட கட்டடத்தை இராணுவம் குண்டு வைத்துத் தகர்த்துள்ளது. [illegible] அழித்துள்ளோம். தீவிரவாதியின் ஆவியை உயிரோடு விட்டுவைத்திருக்க வேண்டிய அவசியம் எமக்கு இல்லை. விடுதலைப் புலிகளின் தடயங்களை இனியும் வைத்திருக்க வேண்டிய தேவையில்லை" என்று விளக்கமளித்திருக்கிறார், இராணுவப் பேச்சாளர் ருவான் வணிகசூரிய.

தமிழர் பகுதிகளில் இருந்து இராணுவத்தைத் திரும்பப் பெற வேண்டும், சிங்களக் குடியேற்றங்களை நீக்க வேண்டும், 13ஆவது சட்டத்திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பனவற்றைத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புத் தொடர்ந்து முன்வைத்து வருகிறது.

### இலங்கை இந்திய அரசுகளின் இரட்டை வேடம்

வட மாகாண அரசும் இவற்றை, ஜனாதிபதி ராஜபக்ஷ, இந்திய வெளியுற வுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் ஆகியோரிடம் வலியுறுத்தி இருக்கிறது. 13ஆவது சட்டத்திருத்தம் தொடர்பாக இலங்கைக்கு இந்தியா அழுத்தம் கொடுக்கும் என்று இலங்கையில் சொன்ன குர்ஷித், இந்தியா திரும்பியதும் அதைப் பற்றி எதுவுமே பேசாமல், பாகிஸ்தான் பற்றிப் பத்திரிகையாளர்களிடம் பேசி விட்டுப் போய்விட்டார்.

13ஆவது திருத்தம் பற்றிய இந்திய வெளியுறவுத் துறை அமைச்சரின் கருத்துக்கு, அது குறித்து முடிவு செய்ய வேண்டிய இடம் இலங்கை நாடாளுமன்றம்தான்' என்று ராஜபக்ஷ விடை சொல்லி இருக்கிறார். ஆனால் சிங்கள அரசியல்வாதிகளோ, "வடக்குக் கிழக்கு இணைப்பு என்பது என்றைக்கும் சாத்தியமில்லை. தமிழர்களுக்கு நிலம் மற்றும் காவல்துறை அதிகாரங்கள் வழங்கக் கூடாது" என்பதில் மிகவும் கவனமாக இருக்கிறார்கள்.

இப்படி இந்தியாவும், இலங்கையும் இரட்டை வேடம் போடுகின்ற நிலையில், நம்முடைய அணுகுமுறையிலும் மாற்றம் மேற்கொள்ள வேண்டிய தேவை ஏற்பட்டி ருக்கிறது. அதன் வெளிப்பாடு தான் வடக்குத் தேர்தல் வெற்றி.

ராஜபக்ஷ முன்னிலையில், பதவியேற்றுக் கொண்ட பின்பும் விக்னேஸ்வரன் மீது விமர்சனங்கள் அதிகமாகியிருக்கின்றன. அவருடைய அணுகுமுறை, குற்றவாளிக் கூண்டிலிருந்து ராஜபக்ஷவைக் காப்பாற்றவே உதவும் என்றும், தண்டிக்க உதவாது என்றும் குற்றம் சாட்டப்படுகிறது.

இலங்கை அரசமைப்புச் சட்டத்துக்கு உட்பட்டு நடந்த தேர்தலின் மூலம்தான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்னும் போது, அந்நாட்டு அதிபரின் முன்பாகப் பதவியேற்றது ஒன்றும் பிழையானதாகிவிடாது.

### எவரும் எதிர்பார்க்காத தமிழரின் ஒட்டுமொத்த குரல்

போர்க்குற்றங்களை முன்னெடுத்துள்ள உலக நாடுகளிடம், தமிழர் பகுதிகளில் ஜனநாயகமான முறையில் தேர்தல் நடத்துகின்ற அளவுக்கு இங்கே அமைதியான சூழல் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதைக் காட்டுவதற்காக இந்தத் தேர்தல் பயன்படும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை. எனினும் சிறுகச் சிறுகச் செத்துக்கொண்டிருக்கும் மக்களைக் காக்க வேண்டிய தேவை நமக்கு இருக்கிறது.

இந்தத் தேர்தலை ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட உலக நாடுகள் வரவேற்றுள்ள நிலையில், அந்நாடுகளின் கவ னம் தமிழர் பகுதிகளின் மீது இருக்கும்படிச் செய்ய வேண்டியது அவசியம். காரணம், ஈழத்தமிழர்கள் இந்தத் தேர்தலில் இப்படிப்பட்ட ஒருமித்த வெற்றியைப் பெறுவார்கள் என்பதை இந்தியாவே எதிர்பார்த்திருக்கவில்லை என்பதை, வெளிவிவகாரத்துறை அமைச்சர் சல்மான் குர்ஷித்தின் பேச்சு காட்டுகிறது.

சம்பூரில் அனல் மின்நிலையம் அமைக்க ஒப்பந்தம் செய்துகொண்டு வந்திருக்கிறார் சல்மான் குர்ஷித். அந்தப் பகுதி மக்களின் எதிர்ப்பினால், சிங்கள அரசு செய்யத் தயங்கிக் கொண்டிருந்த ஒன்றை, இந்திய அரசு போய் முடித்து வைத்திருக்கிறது. இதுதான் உண்மை நிலை என்னும்போது, பாறாங்கல்லில் மோதி மண்டையை உடைத்துக் கொள்வது புத்தி சாலித்தனமாகுமா?

### தேர்தலின் மூலம் கிடைத்த பிடிமானம்

இவ்வளவு சிக்கல்களுக்கு நடுவில், வட மாகாண சபையைப் பொறுப் பேற்றிருக்கும் தமிழ்த்தேசியக் கூட்ட மைப்பின் உறுப்பினர்கள், மக்களின் நம்பிக்கைக்கு உரியவர்களாக நடந்து கொள்ள வேண்டியது மிக முக்கியம். ஆனால், அவர்களுக்குள்ளும் பதவிச் சண்டைகள் வந்து போயுள்ளது என்னும் செய்தி வேதனையைத் தரக் கூடியதாக இருக்கிறது. திக்கு திசை புரியாமல் இருந்த நிலையில், தேர்தலின் மூலம் ஒரு பிடிமானத்தைப் பெற்றிருக்கிறார்கள் ஈழத்தமிழர்கள் வாழ்க்கையைப் பணயம் வைத்துத் தேர்தலில் வாக்களித்த, ஈழத்தில் வாழும் மக்களுக் கும், அவர்களின் விருப்பங்களுக்குமே மாகாண அரசு முக்கியத்துவம் அளிக்க வேண்டும். நெருப்புக்கு அருகில் இருப்பவனுக்குத் தான் அதன் கொடுமை தெரியும். எயர் லங்கா விமானம் ஏறி கலை இலக்கிய சங்கமத்துக்கு மட்டும் இலங்கை வந்து போகின்றவர்களும், இந்தியாவின் ராஜ பக்ஷ, மோடியோடு கூட்டணி வைத்து, பத்ம வியூகம் அமைப்பதில் முன்னணியில் நிற்பவர்களும், விக்னேஸ்வரன், ராஜ பக்ஷ முன்னிலையில் பதவியேற்ற தில் எனக்குத் துளியும் மகிழ்ச்சியில்லை' என்று சொல்வதும், விமர்சனம் செய்வதும் எந்த விதத்திலும் நியாயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய வடலிகள் நாளைய தோப்புகள்

சிறுவர்களது உள்ளம் வெள்ளை மனம் கொண்டது. இவர்கள் 18 வயதுக்குக் குறைந்தவர்கள், துடுக்குத்தனம் மிக்கவர்கள், விளையாட ஆசைப் படுபவர்கள், கள்ளம் கபடமற்றவர்கள்



த.சிவகுமார்
விரிவுரையாளர் விசேட கல்வித்துறை
தேசிய கல்வியியற் கல்லூரி
யாழ்ப்பாணம்

இன்றைய வடலிகள் நாளைய தோப்புக்களாகி நாட்டை அலங்கரிப்பது போல, இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்களாகின்றனர். சிறுவர்களுக்கான அடித்தளம் முன்பள்ளிப் பருவத்தில் இருந்தே இடப்பட வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் அவர்கள் பல்துறை சார்ந்த ஆளுமைப் பண்புகளைக் கொண்டவர்களாகவும், பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து சாதனை படைக்கக்கூடிய திறன்களைக் கொண்டவர்களாகவும் மாறமுடியும்.

சிறுவர்களது உள்ளம் வெள்ளை மனம் கொண்டது. இவர்கள் 18 வயதுக்குக் குறைந்தவர்கள், துடுக்குத்தனம் மிக்கவர்கள், விளையாட ஆசைப் படுபவர்கள், கள்ளம் கபடமற்றவர்கள், அன்பை எதிர்பார்ப்பவர்கள், வன்முறையை எதிர்ப்பவர்கள், பெறு மதி சார்பில்லாது விருப்பப்படுபவர் கள், எதற்கும் ஆசைப்படுபவர்கள், பயம் தெரியாதவர்கள், இனிப்புச் சுவையை அதிகம் விரும்புபவர்கள், பாகுபாடு பற்றிச் சிந்திக்கத் தெரியாதவர்கள்.

உயிர் வாழும் உரிமை, பெயரும் தேசியமும் பூணும் உரிமை, பெற்றோரை அறியவும், அவர்களின் பராமரிப்பைப் பெறுவதற்குமான உரிமை, விருப்பத்துக்கு மாறாக பெற்றோரிடம் இருந்து பிரிக்கப்படாமை, சிந்தனை மனச்சாட்சி, சமயம் ஆகிய சுதந்திரங்களும், அந்தரங்கத்துக்கான உரிமை, கல்விபெறும் உரிமை, ஓய்வு, பொழுதுபோக்கு, கலாசார நடவடிக்கைகளுக்கான உரிமை, பொருளாதார ஏமாற்றத்திலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான உரிமை, பாலியல் இம்சையில் இருந்து பாது காப்பு பெறும் உரிமை, கடின உழைப் பிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை, சித்திரவதை -கொடுமைப் படுத்தல்- இழிவுபடுத்தும் விதமாக நடத்தப்படுவதிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை, நியாயமான விசாரணை பெறும் உரிமை, சுதந்திரம்-பாதுகாப் புக்கான உரிமை போன்ற சிறுவர்களுக்கான உரிமைகளும் முக்கியத்துவம் பெறுகின்றன.

**சிறுவர்கள் கற்க விரும்பும் முறைகள்**

◆ சிறியவர்கள் வளர்ந்த மனிதர்களின் உள்ளம் கொண்டவர்கள் அல்லர். அவர்கள் குழந்தை உள்ளம் உடையவர்கள். அவர்களின் வயது, பால், பலவீனங்கள், விருப்பு, வெறுப்பு என்பவற்றைக் கருத்தில் கொண்டே கற்பித்தல் இடம்பெறவேண்டும். குழந்தைகளை குற்றப்பட்ட வண்ணத்துப்பூச்சிகள் போன்று வகுப்ப றையில் அமர்த்தி கற்பிப்பதை விட, சுதந்திரமான சூழலில் இசைவாக்கமடைந்து அனுபவம் ஊடாகவே கற்க விரும்புகின்ற அவர்களுக்கு அதற்கேற்பவே கற்றல் கற்பித்தல் இடம்பெறவேண்டும்.

◆ சிறுவர்கள் தமது அனைத்துச் செயற்பாடுகளையும் விளையாட்டாகவே புரிய விரும்புவர். கற்றலையும் விளையாட்டின் மூலம் பெற முனைவர்.

◆ ஆடல் ,பாடல் , கவிதை ஆரம்பத்தில் சிறுவரது வெளிப்பாட்டு சாதனமாகும். இவை பொழுதுபோக்கு சாதனமாகவும் உணர்ச்சி வெளியேற்றத்தின் ஊர்தியாகவும் அமைந்து காணப்படுகின்றன. இவை அவர்களது மனவெழுச்சியைத் தூண்டவல்லனவாகவும் உடலியக்கத்தைத் தூண்டுவனவாகவும், மிதமிஞ்சிய சக்தி வெளியேற்றத்துக்கு துணை புரிவதாகவும் உற்சாகத்தை ஏற்படுத்துவதாகவும் தனது லயத்தைத்தானே கண்டு கொள்ளவும், கூட்டுச் செயற்பாட்டுக்கு உதவுவதாகவும் அமையும். இவை விளையாட்டின் அனைத்துத் தன்மைகளையும் கொண்டிருப்பதுடன் சுதந்திரம் கற்பனை, அவதானம் , கருத்தூன்றல் ஆகிய பண்புகளையும் வளர்க்கும்.

◆ கதை கேட்டல் மூலம் கற்பதற்கும், பிள்ளைகள் அதிக விருப்பத்தைக் காட்டுகின்றனர்.

◆ சிறுவர்கள் இயல்பாகவே கற்பனை வளம் நிரம்பியவர்களாக உள்ளனர். அதனால் விநோதங்களை விருப்புடன் நயக்கும் ஆற்றலுடையவர்களாக உள்ளனர். தீப்பெட்டியொன்று அவர்களது கற்பனையில் மோட்டார்காராகவும், மாட்டுவண்டிலாகவும் காட்சிதரும். தாமே மோட்டார் சைக்கிளாகவும் , காராகவும் மாறிக் கடைக்குச் சென்று வீட்டுக்கு வேண்டிய பொருள்களை வாங்கி வருவர். சிறுவர்களின் விநோதங்களைக் கருத்தில் கொண்டே பண்டைய காலம் முதல் மிருகங்கள், பறவைகள் என்பவற்றை பாத்திரமாகக் கொண்டு கதைகள் புனையப்பட்டது.

◆ மேலும் வர்ணப்பகட்டான நிறங்களையே அவர்கள் விரும்புவர்.

**பிள்ளைகளின் ஆளுமையை வளர்ப்பதற்கான அடிப்படை வாழ்க்கைத் திறன்கள்**

தற்போது பிள்ளைகளிடம் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளான பல மொழிப் புலமை, பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கும் ஆற்றல், உலகத்தோடு சேர்ந்து வாழ்தல் போன்றவற்றுக்கு பின்வரும் திறன்கள் முக்கியம் பெறுகின்றன.

◆ ***முடிவெடுக்கும் திறன்***-எமது வாழ்க்கையில் முன்னேற்றகரமான முடிவுகளை எடுப்பதற்கு உதவுகிறது.

◆ ***பிரச்சினைக்குத் தீர்வு காணல்***- எமது நாளாந்த பிரச்சினை களை அணுகும் முறையை தெளிவாக்குகின்றது. தீர்க்கப்படாத முக்கிய பிரச்சினைகள் எமக்கு உள நெருக்கீட்டையும் உளப் பலவீனத்தையும் உண்டாக்கும்.

◆ ***ஆக்கபூர்வமான சிந்தனைத் திறன்***- தகவல்களையும் அனுபவங்களையும் ஒரு நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு ஆராயவும் பல்வேறு மாற்றுச் செயல் வடிவங்களில் தெரிவை மேற்கொள்ளவும் உதவும்.

◆ ***ஆராய்ந்தறிதல் திறன்***- ஒருவரின் மனப்பாங்கு, நடத்தை ஆகியவற்றில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளான நண்பர்களின் தலையீடு தொடர்பு சாதனங்கள் ஆகியவற்றின் தாக்கத்தை இனம் காணவும் மதிப்பிடவும் உதவுவதன் மூலமும், அக வாழ்வை வலுப்படுத்த உதவுகின்றது. ஒவ்வொரு தெரிவுகளையும் நாம் மேற்கொள்ளும்போது அதன் நன்மை தீமைகளை வேறுபடுத்தி கண்டறியவும் இந்தத் திறன் அவசியமாகின்றது.

◆ ***நேர்த்தியான தொடர்பாடல் திறன்***- ஒலி, வரிவடிவிலும் ஒலிசாரா வடிவிலும் எம்மை எமது கலாசார சூழ்நிலைக்கேற்ப வெளிப்படுத்த உதவும். இதன்மூலம் எமது தேவைகளைச் சிறப்புற தெரிவிக்கவும் சந்தர்ப்பத்தில் தேவைப்படும் ஆலோசனையைப் பிறரிடம் கேட்டுப் பெற்றுக் கொள்ளவும் இலகுவாக்குகின்றது.

◆ ***தனி நபரிடம் தொடர்புத்திறன்***- நாம் பழகும் நபர்களுக்கிடையே சிறப்புத் தொடர்பு கொள்ள உதவவும் நீடித்த ஆழமான நட்புறவு வளரவும் , எமது மனச்சுகம் மேம்படவும் இது காரணமாகின்றது. குடும்ப உறுப்பினரிடையே உறவு வளரவும் சமூகத்தின் ஆதரவை பெறவும் தேவையான சந்தர்ப்பங்களில் மிகவும் நல்ல முறையில் சில உறவுகளை முடிவுக்கு கொண்டு வரவும் இந்தத் திறன் அவசியமாகிறது.

◆ ***சுய விழிப்புணர்வு***- எம்மை, எமது இயல்புகளை, எமது பலத்தை விருப்பு வெறுப்புக்களை இனங் காண்பதற்கு உதவுகின்றது. தன்னுணர்வுத்திறனை வளர்த்துவிடுதல் இளம் சந்ததியினரிடையே உள நெருக்கீட்டை இனங்காணவும் மன அழுத்தத்துக்கு உட்படும் நிலைமையை இனங்காணவும் உதவும்.

◆ ***புறநிலை நின்று உணர்தல் திறன்***- மற்றவர் வாழ்வு எப்படி உள்ளது என அனுபவிக்காது அறிந்து கொள்ள வகை செய்கிறது. இதனால் மற்றவர்களிடம் காணும் வேறுபாடுகளை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவம் இளம் பிள்ளையிடத்தில் ஏற்படும். உதாரணமாக சமூக ஊடாட்டம், பல்லினங்கள் வாழும் சூழலில் புறநிலை நின்றுணரும் திறன்மிக்கவர்கள் ஆதரவான நடத்தையும் பொறுமையும் காண்பிப்பவர்களாகவும் பாதிக்கப்பட்ட அல்லது பின் தங்கியவர்களுக்கு அல்லது சமூகத்தில் ஒதுக்கப் பட்டவர்களுக்கு உதவும் மனப்பான்மையை பெற்றுக் கொடுத்தல்.

◆ ***உணர்வலைகளுக்கு முகம் கொடுக்கும் திறன்***- விருத்தி பெற்றால் கோபம், பயம், கவலை முதலிய உணர்வுகள் தூண்டப்படும் விதம் பற்றியும் அவற்றை முகாமைப்படுத்தும் வழிமுறைகளையும் இலகுவாக இளம் பிள்ளைகளிடம் வளர்த் தெடுக்க முடியும்.

***மன அழுத்தத்துக்கு முகம் கொடுக்கும் திறன்***- மன அழுத்தத்தை கையாளக்கூடிய பிள்ளைகள் அந்த அழுத்தத்தை குறைப்பதற்குரிய படிமுறைகளை இலகுவாக கையாளுபவர்கள். மேலும் சுகாதார பிரச்சினைகள் வளர்வதைத் தடுப்பதற்கு இந்தத்திறன் உதவுகின்றது.

குழந்தைகள் உடலாலும், உள்ளத்தாலும் முதிர்ச்சியற்றிருப்பதன் காரணமாகவே கருவில் இருக்கும் போதும், பிறந்த பின்னரும் முறையான சட்ட ரீதியான பாதுகாப்பு உட்பட விசேட பாதுகாப்புக்களும் பராமரிப்புக்க ளும் அவர்களுக்கு அவசியமாகின்றது.

சிறுவர்கள் ஒவ்வொருவரும் தனித்துவமானவர்கள். அவர்கள் ஒவ்வொருவரிடமும் நிறைய ஆற்றல்கள் பொதிந்துள்ளன. அந்த ஆற்றல்களை வெளிக் கொணர்வதற்கு நாம் அனைவரும் ஒன்றுபட்டு செயற்படும்போதே ஆரோக்கியமான சமூகத்தையும், நாட்டையும் உருவாக்க முடியும்.

# அச்சம் தவிர்

பி.விபிஷனா

பயம் என்ற அனுபவம் நமக்குப் புதிதல்ல.

ஆனால் அது என்ன? அது எங்கிருந்து வருகிறது? எங்கு தோன்றுகிறது? அதன் தன்மை என்ன? அதன் விளைவு என்ன? அதைத் தவிர்க்க என்ன வழி? இப்படி நாம் சிந்தித்துப் பார்ப்பதில்லை.

எல்லா எண்ணங்களும் மனதில் தான் தோன்றுகின்றன. காரணம் மனம் என்பதே இடைவிடாத எண்ணங்களின் சேர்க்கை. ஒரு நாய் குரைத்துக் கொண்டு நம்மை நோக்கி ஓடி வருகிறது. அதைக் கண்டதும் 'அது நம்மைக் கடிக்குமோ' என்ற நினைப் பில் (பயத்தில்) ஓர் அவ நம்பிக்கை பிறக்கிறது. எமது தைரியம் நம்மை விட்டு விலகுகிறது. நாம் ஓடத் தொடங்குகிறோம்.

நாயும் வெகு வேகவேகமாக எம் மைத் தொடர்ந்து வருகிறது.அதன் விளைவு? எமது தேகம் நடுங்குகிறது. எம்மில் ஒரு தரம் சூடு பரவுகிறது, எமக்கு வியர்க்கிறது. எமது நாடி வேகமாக துடிக்கிறது. மூச்சு வாங்குகிறது. கடைசியில் நாம் செயலற்றுப் போகின்றோம். ஓட முடியாமல் நின்று விடுகின்றோம். இதைப் பார்த்த நாய் தன்னைக் கல்லால் அடிப்பார்களோ என்று பயந்து பின் நோக்கி ஓடுகிறது. அப்போது நமக்குத் தன்னம்பிக்கை பிறக்கிறது. எமது தேகத் துடிப்புக் குறைகிறது. சரியாக மூச்சுவிட முடிகிறது. பயம் அகலுகிறது. இப்போது நாம் உணர்வது என்ன? நாய் நம்மைக் கடிக்குமோ என்ற பொய் எண்ணம் எம்மைப் பயத்தில் ஆழ்த்தியது.

அது திரும்பிப் போனதும் நமக்கு உண்மை விளங்குகிறது. இறப்பில் எல்லோருக்கும் பயம் வருவது இயற்கை. காரணம் இறப்பு என்பது எமது உலக அனுபவங்களின் முடிவு. நம்மால் அதை நினைத்துக்கூடப் பார்க்க முடிவதில்லை. உலக வாழ்க்கை தற்காலிகம், அது ஒரு மாயை, அதற்கு முடிவு உண்டு என்ற எண்ணம் நமக்கில்லை.உங்களுக்குப் பரீட்சைக் காலத்தில் படிக்கும்போது சித்தி அடைவோமா என்ற திகில் எழுகிறது. ஏன்? நீங்கள் நன்றாகப் படிக்கவில்லையேல் உங்கள் மீதே உங்க ளுக்கு சுயநம்பிக்கை இல்லாமல் போகிறது. அதனால்,இந்தப் பயம் உங்களைத் தாக்குகிறது. நீங்கள் நன்றாகப் படித்து சுயநம்பிக்கையுடன் பரீட்சை எழுதினால் நிச்சயம் சித்தி அடைவீர்கள்.

பொய் நினைப்பு, அவநம்பிக்கை, உண்மை உணராத நிலை இவைகளே எமது பயத்தின் அடித்தளம். எந்த நிலையிலும் தைரியத்தை கைவிடக் கூடாது. எப்பொழுதும் நல்லதையே நினைக்கவேண்டும் கெட்ட நினைப்பை அகற்ற வேண்டும்.

அப்பொழுதுதான் எமக்கு எம்மேல் சுய நம்பிக்கை எழும். அப்பொழுது பயம் நம்மைத் தாக்காது.சுருங்கச் சொன்னால் பயம் என்பது மனதில் எழும் ஒரு கெட்ட எண்ணமே.

அதன் அடித்தளம் சுயநம்பிக்கை இல்லாமலிருப்பது. கெட்ட நினைப்புகள் நம்மைத் தாக்குவது. உண்மையை உணராத நிலை.

பயம் எம்மைத் தாக்கினால் உண்மை எது பொய் எது என்ற தரம் பிரித்துப் பார்க்கும் சக்தியை நாம் இழக்கிறோம்.அது நம் உடல், மனம், புத்தி இவைகளைப் பாதிக்கிறது.


இதைத் தவிர்க்க, எந்தக் காரியமானாலும் அதை சீர்தூக்கிப் பார்த்து அதன் உண்மை நிலையை உணர்ந்து, வருவதை தைரியமாக எதிர்கொள்ள நம்மைத் தயார் செய்து, செய்யும் காரியத்தில் முழு மனதைச் செலுத்தி, விளைவு நன்றாகவே அமையும் என்ற சுயநம்பிக்கையுடன், சரிவர அந்தக் காரியத்தில் ஈடுபடுவோமானால், அதனது பலன் நல்லதாகவே நிகழும்.எண்ணத்தில் தெளிவும், உள்ளத்தில் உறுதியும் இருந்தால் பயம் நம்மை நெருங்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆங்கில புலமைப் பரிசில் யாழ்.மாவட்டத்திலிருந்து 200மாணவர்கள் தெரிவு

ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் சமூகப் பொறுப்பாண்மை திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கில மொழிக்கான புலமைப் பரிசில் திட்டத்துக்கமைய கடந்த 18 ஆம் திகதி நடை பெற்ற நேர்முகப் பரீட்சையில் 200 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சி கல்வி வலயத்திலிருந்து 132 பேர் முன்னோடி பரீட்சைக்குத் தோற்றி அவர்களில் 50 பேரும். தென்மராட்சி கல்வி வலயத்திலிருந்து 85 பேர் முன்னோடிப் பரீட்சைக்குத் தோற்றி அவர்களில் 50 பேரும். யாழ்ப்பாணம். வலிகாமம். தீவகம் கல்வி வலயங்களிலிருந்து 152 பேர் முன்னோடிப் பரீட்சைக்குத் தோற்றி 100 பேருமாக மொத்தம் 200 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (422)



## ஹற்றன் நஷனல் வங்கியின் மாணவர்களுக்கான போட்டிகள்

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு ஒக்ரோபர் மாதம் முழுவதும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான பல்வேறு போட்டிகளை ஹற்றன் நஷனல் வங்கி நாடளாவிய ரீதியில் நடத்தி வருகிறது.

ஹற்றன் நஷனல் வங்கியில் சேமிப்புக் கணக்கைப் பேணும் சிறுவர்கள் அந்தந்தப் பிரதேசங்களில் உள்ள வங்கிக் கிளைகளுடன் தொடர்பை ஏற்படுத்தி போட்டியில் பங்குபற்றலாம். இதற்கமைவாக யாழ்.மாவட்ட சிறுவர்களுக்கான போட்டிகள் கடந்த 27 ஆம் திகதி வங்கியின் பசுமைக் கட்டடத்தில் நடைபெற்றன. இதன் போது மாணவர்களுக்கான சித்திரப் போட்டி. பலூன் உடைத்தல் போட்டி என்பன நடத்தப்பட்டன. போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன. (த-14)

## கிளிநொச்சி 'செலான்' வங்கியின் பணப் பரிசு உதவி வழங்கும் நிகழ்வு

கிளிநொச்சி, ஒக். 27

செலான் வங்கியின் கிளிநொச்சிக் கிளையில் 'மணி கிராம்' மூலம் வெளிநாட்டில் இருந்து பணத்தைப் பெற்றுக் கொள்பவர்களுக் கான போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பணப்பரிசு வழங் கும் நிகழ்வும். ஜோர்தான் நாட்டில் நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டிக்குச் செல்லும் கிளிநொச்சி மாவட்ட மாணவனுக்கு உதவி வழங்கும் நிகழ்வும் அண்மையில் நடைபெற்றன.

செலான் வங்கியின் கிளிநொச்சிக் கிளையில் 'மணி கிராம்' மூலம் வெளிநாட்டில் இருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டவர்களுக்கு நடத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா பணப்பரிசு வழங்கப்பட்டது.

அத்துடன் ஜோர்தான் நாட்டில் நடைபெறவுள்ள உதைபந்தாட்டப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள கிளிநொச்சி வலைப்பாட்டைச் சேர்ந்த மாணவனுக்கு நிதியுதவி வழங்கும் நிகழ்வும் அண்மையில் செலான் வங்கியின் கிளிநொச்சிக் கிளையில் கிளை முகாமையாளர் இ.சுதாகரன் தலைமையில் நடைபெற்றது. இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எட்மன் மகேந்திரா பரிசில்களை வழங்கி வைத்துள்ளார்.

இதில் வங்கி உத்தியோகத்தர்கள், வாடிக்கையாளர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (த-6)

## யாழ்.மண்ணில் IIS இன் முதுமாணி கற்கை நெறிகள்

அநேக தொழில் வல்லுநர்கள் மற்றும் இளமாணி பட்டதாரிகளின் எதிர்பார்ப்பைப் பூர்த்திசெய்யும் நோக்கில் யாழ் மண்ணில் IIS City Campus முதுமாணி கற்கைநெறிகளை ஆரம்பிக்கின்றது. உயர்கல்வி வளாகங்கள், நிறுவனங்களுடன் இணைந்து கல்விச்சேவையை வழங்கிவரும் IIS City Campus நிறுவனமானது Aldersgate University/College உடன் இணைந்து முதுமாணி கற்கைநெறிகளை ஆரம்பிக்கவுள்ளது. இந்தக் கற்கைநெறியானது இளமாணிப்பட்டத்தை பூர்த்திசெய்து, முதுமாணிப்பட்டப் படிப்பினை மேற்கொள்வதற்கு ஆவலாக உள்ளவர்களுக்கும், அனுபவமிக்கதொழில் தகைமை கொண்டவர்களுக்கும், தமது சொந்த மண்ணிலேயே முதுமாணிப்பட்டத்தைப் பெற்றுக்கொள்ள ஆவலாக உள்ளோருக்கும் ஒரு வரப்பிரசாதமாகும்.

வடமாகாணத்தில் முதன் முறையாக Aldersgate பல்கலைக்கழகத்துடன் இணைந்து IIS City Campus நிறுவனம் உங்களுக்கான ஒரு உலகத்தரம் வாய்ந்த முதுமாணிபட்டப்படிப்புக்கான வாய்ப்பினைத் தரவுள்ளது.

ஒரு வருடகால இந்தக் கற்கை நெறியானது பத்துப்பாட அலகுகளுடனும் ஒப்பீட்டளவில் மிகக் குறைந்த கட்டணத்துடனும் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்தக் கற்கைநெறிக்கு பதிவு செய்வதன் மூலம் நிலையற்ற வேலைச் சந்தையில் ஒரு நிலையான மற்றும் அதிகூடிய வருமானத்தைப் பெறும் ஒரு திறமையான மனிதவளமாக மாறுங்கள். இது உங்களுக்கான சிறந்ததொரு சந்தர்ப்பமாகும்.வெளிநாட்டு. உள்நாட்டு வேலைச்சந்தையில் உங்களின் தரத்தை இந்த முதுமாணிக்கற்கைநெறி மிகச்சிறப்பாக விளம்பி நிற்கும் என்பதில் எந்தவொரு ஐயமும் இல்லை. நீங்கள் மேற்கொள்ளப் போகும் முதுமாணிக்கற்கைநெறியை வழங்கும் பல்கலைக்கழகம் இலங்கை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு (UGC) ஐரோப்பிய ஒன்றியம் (EU) கனேடிய பொறியியல் தொழில்நுட்பக்கழகம் (CCTT) மற்றும் பொதுநலவாய நாடுகளின் பல்கலைக்கழகங்கள் (Commonwealth University) ஆகியவற்றின் கீழ் பதிவுசெய்யப்பட்டதொரு பல்கலைக்கழகமாக இருப்பதால் நீங்கள் எந்தவித தயக்கமும் இன்றி உங்கள் முதுமாணிக்கற்கைநெறியை இந்தப் பல்கலைக்கழகத்தில் பயில்வதன் மூலம் உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ வேலைவாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள பூரண தகைமையை அடைகிறீர்கள்.

இந்த கற்கைநெறிக்குத் தேவையான அடிப்படைத்தகுதிகள்

* அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் இளமாணிப்பட்டதாரி
* அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் தகமை * 24 வயதுக்குமேற்பட்டவராகவும் நிறுவனம் ஒன்றில் 3 வருடம் நிர்வாகப் பதவியினை முழு நேரமாக வகித்த அனுபவமுள்ளவராகவும் இருத்தல்வேண்டும்.
* ஆண்டுதோறும் கொழும்பில் இடம்பெறும் பட்டமளிப்புவிழாவில் சிறப்பாக பூர்த்திசெய்த மாணவர்களுக்கான பட்டங்கள் வழங்கிக் கௌரவிக்கப்படும். கற்கைநெறிக்கான பாடவிதான அலகுகள்
* Marketing Management
* Financial Management
* Business Strategy
* Human Resource Management
* Leadership and OB
* Information Management
* Business Law for Managers
* Operations Management and Supply Chain
* MBA Capstone உங்கள் எதிர்காலக்கனவை எங்களுடன் இணைவதன் மூலம் வளமாக்கிக்கொள்ளுங்கள். அத்துடன் தரமான கல்விமுதலீடு உங்கள் நாளைய பயமற்ற மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு ஒரு வழிகாட்டி.

## டொச் மொழியை சிறந்த முறையில் கற்பிக்கும்

## German Language Academy



இந்த நிறுவனத்தில் ஆசிரியரால் தயாரிக்கப்பட்ட டொச் புத்தகங்களும் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப் படுகின்றன.

வடமாகாணத்தில் யாழ்.மண்ணிலும் வவுனியா மண்ணிலும் பல வருடங்களாக வேரூன்றி நிற்கின்றது German Language Academy.

இந்த நிறுவனத்தில் அதிகமான மாணவர்கள் சித்தியடைந்து ஜேர்மனி. சுவிஸ், ஒஸ்றியா நாடுகளுக்கு சென்றுள்ளார்கள். இந்த நிறுவனம் ஜேர்மன் தூதரகத்தினால் நடத்தப்படும் A1 பரீட்சைக்கு ஏற்றவாறு கற்பிக்கின்றது. German Language Academy வெளிநாடு செல்பவர்களுக்கு ஓர் இலகுவான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது.

இல.23, பலாலி வீதியில் அமைந்துள்ள German Language Academy யில் கற்பிக்கும் ஆசிரியர் எஸ்.கோணேஸ்வரன் தனது சொந்த நாடான இலங்கையில் இருந்து புறப்பட்டு ஜேர்மனியில் தனது சிறு வயதில் இருந்து டொச் மொழியை நன்கு தேர்ச்சி பெறக் கற்று தற்பொழுது German Language Academy யில் ஓர் பிரபல ஆசிரியராகப் பணியாற்றுகிறார்.

இந்த நிறுவனத்தில் ஆசிரியரால் தயாரிக்கப்பட்ட டொச் புத்தகங்களும் மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன. German Language Academy மாணவர்களுக்கு கல்வி ஊட்டு விப்பதற்காக மிகச் சிறந்த முறையில் கை நீட்டி வரவேற் கின்றது.

இந்த நிறுவனம் அரச அங்கீகாரம் பெற்றதொரு நிறுவனம். (கு)




...மணிகிராம் பணப்பரிமாற்றலூடாக வெளிநாட்டுப் பணத்தைப் பெற்றுக்கொண்ட ...களின் குலுக்கல் முறை மூலம் தெரிவு செய்யப்பட்ட சு.பிரேமன் என்ற அதிர்ஷ்டசாலி வாடிக்கையாளருக்கு முகாமையாளர் பணப்பரிசை வழங்குகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நியாயமற்ற கோரிக்கையாம் மகேஸ்வரி நிதியம் அறிக்கை

யாழ்ப்பாணம், ஒக்.29
மணல் அகழ்வில் ஈடுபடுவதற்கு 100 பாரஊர்திகளுக்கே தற்போது வாய்ப்புள்ளது. ஆனால் 1000 பாரஊர்திகளுக்கும் நாளாந்தம் வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என்று கேட்பதில் நியாயமில்லை என்று மகேஸ்வரி நிதியம் அறிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் மகேஸ்வரி நிதியத்தின் திட்ட இணைப்பாளர் ரி.ரஜீப் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடமாகாணத்தில் மன்னார், வவுனியா தவிர்ந்த ஏனைய 3 மாவட்டங்களில் மட்டும் மணல் அகழ்வுக்காக அனுமதிபெற்ற 140 பேர் 140 இடங்களில் மணல் அகழ்வில் ஈடுபடுகின்றனர்.

இது வட மாகாண விவசாய, கால்நடை, சூழலியல் அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்குத் தெரியாமல் இருப்பது வருந்தத்தக்கது. மாறாக வடமராட்சியில் எமது நிறுவனம் மணல் அகழ்வதை மட்டும் சுட்டிக்காட்டியிருப்பதானது அமைச்சரின் அரசியல் உள்நோக்கத்தையே அம்பலப்படுத்துகின்றது.


புலிகள் முறையற்ற மணல் அகழ்வில் ஈடுபட்டபோது இதே பாரஊர்திச் சங்கத்தினர் சுற்றுச்சூழல் பற்றியோ, நிலத்தடி நீர் பற்றியோ கவலைப்படவில்லை. அது பற்றி வாய் திறக்கவும் இல்லை.

மோசடிகளுக்கு துணையாகச் செயற்பட்டு பெரும் பணம் சம்பாதிப்பதிலேயே அக்கறையாக இருந்தார்கள். இப்போது எமது நிறுவனம் மணல் அகழ்வில் பின்பற்ற வேண்டிய ஒழுங்குகளை பின்பற்றியும், தேவையான அளவு மணலை மட்டுமே அகழ்வு செய்வதையும் இவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை.

100 பார ஊர்திகளுக்கே தற்போது வாய்ப்புள்ளது. ஆனால் ஆயிரம் பார ஊர்திகளுக்கும் நாளாந்தம் வாய்ப்பு வழங்கப்படவேண்டுமெனக் கேட்பது நியாயமில்லை. நியாயமற்ற கோரிக்கையுடன் யாருடைய அலுவலகங்களைத் தட்டினாலும் மணல் அகழ்வை இவர்களுக்காக முறைகேடாக செய்ய முடியாது.

மேலும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நீதிமன்றம் மகேஸ்வரி நிதியம் மண் அகழக்கூடாது என்றோ மணல் அகழ்வது தவறானது என்றோ தடை உத்தரவு பிறப்பிக்கவில்லை என்று-தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பாக மாகாண அமைச்சர் ஐங்கரநேசனிடம் கேட்டபோது, "மேலதிக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேற்படி விடயம் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பகிரங்கப் படுத்தப்படும்போது உண்மைகள் தெரியவரும்" என்றார். (ஐ-5)



ஜி.ஐ.சற் நிறுவனத்தின் ஏற்பாட்டில் உள்ளூராட்சி மன்றங்களால் நடத்தப்படும் மக்கள் பங்கேற்றல் தொடர்பான பயிற்சிநெறி நல்லூர் பிரதேச சபையில் நடைபெற்றது. இந்தப் பயிற்சி நெறியில் உள்ளூராட்சி மன்றங்களின் உறுப்பினர்கள், உத்தியோகத்தர்கள், சனசமூக நிலையங்களின் உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டு பயன் பயன்பெற்றனர். (வ-7)

# கரைச்சி மயானம் விரைவில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், ஒக்.29
வலி.மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட சங்கானை கரைச்சி மயானம் 5 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் அபிவிருத்திப் பிரிவின் மேலதிக செயலாளர் ஏ.ஏ.மஜீட் அண்மையில் கரைச்சி மயானத்தை சுற்றிப் பார்வையிட்டு, மயான அபிவிருத்தி தொடர்பான விடயத்தை மதிப்பீட்டுடன் வழங்குமாறு சபைத் தலைவர், செயலாளர் ஆகியோரைக் கோரியுள்ளார்.

கரைச்சி மயான மீள் புனரமைப்புப் பணிகளை ஆராய்ந்த பின்னர் அபிவிருத்தியின் முதற்கட்டமாக சுற்று மதில், மயான கொட்டகை, சேமக்காலை வீதி, பொது மண்டபம் ஆகியவற்றை 5 மில்லியன் ரூபாவுக்கு உட்பட்ட செலவில் மீள் புனரமைப்புப் பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்படவுள்ளன.

இதேவேளை- 37 மில்லியன் ரூபா செலவில் மின்சாரம் மூலம் உடலங்களை எரியூட்டும் நவீன தகன நிலையத்தை அமைக்கும் திட்டமும் உள்ளது. இது சாத்தியமாகும் நிலையில் வழுக்கை யாறு மயானப் பகுதியில் மின்சார எரியூட்டியை நிறுவ நிதி உதவி வழங்க இயலும் என மேலதிக செயலாளர் ஏ.ஏ.மஜீத் வலி.மேற்கு தவிசாளருக்கு அறிவித்துள்ளார். (வ-50)

## முன்பள்ளிக் கல்வி சான்றிதழ் பாடநெறிக்கு விண்ணப்பிக்கலாம்

அச்சுவேலி, ஒக்.29
"இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் "முன்பள்ளிக் கல்விச் சான்றிதழ்" பாடநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. அடுத்த மாதம் 12 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பங்களை பிராந்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்பள்ளிக் கல்விச் சான்றிதழ் பாடநெறி தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடைபெறவுள்ளது. பாடநெறிக்கான விண்ணப்பங்களையும் கையேட்டினையும் நாவல, நுகேகொட திறந்த பல்கலைக்கழகத்திலும் பல்கலைக்கழக பிராந்திய நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-11)

# மன்னாரில் சிறப்பாக நடைபெற்ற மரநடுகை

மன்னார், ஒக்.29
உள்ளூராட்சி வார நிகழ்வுகளின் வரிசையில் மரநடுகை நிகழ்வுகள் சனிக்கிழமை இடம்பெற்றது.

மன்னார் பொதுநூலகத்தில் நடைபெற்ற மரநடுகை சிறப்பு நிகழ்வுகளைத் தொடர்ந்து மன்னார் பொது நூலக வளாகம் மற்றும் அதனை அண்மித்த எஸ்பிளெனட் வீதி ஆகிய இடங்களில் பயன் தரும் மரக்கன்றுகள் நடப்பட்டன.

மன்னார் நகரசபையின் தலைவர் எஸ்.ஞானப் பிரகாசம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் நகரசபை உபதலைவர், உறுப்பினர்கள், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் நகரசபைச் செயலாளர் ஆகியோருடன் நகரசபை உத்தியோகத்தர்களும் சூழல், சுற்றாடல் உத்தியோகத்தர், நூலக ஆலோசகர் மருத்துவர் எஸ்.லோகநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.



இந்த நிகழ்வில் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் பொறியியல் பிரிவு பணிப்பாளர் எந்திரி என்.ரி.எம்.சிராஜீதீன் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (வ-12)

## தருவது வித்தியா — இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

நாளை
ஐப்பசி-13 புதன்கிழமை 30.10.2013
திதி: ஏகாதசி மு.இ.08.42 வரை
நட்சத்திரம்: பூரம் மு.இ.11.50 வரை
சுபநேரம்: 04.33 - 06.03 வரை
இராகுகாலம்: 12.03 - 01.33 வரை



**மேடம்:** தன்னம்பிக்கை பிறக்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் மிகுதிகளை வசூலிப்பீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு.



**இடபம்:** மனதில் பட்டதை பளிச்சென்று பேசுவீர்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். அரசகரியங்களிலும் அனுகூலமான நிலை காணப்படும். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.



**மிதுனம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற பரபரப்புடன் செயற்படுவீர்கள். மனதுக்குப் பிடித்தவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். முன்கோபத்தைத் தவிர்ப்பீர்கள்.



**கடகம்:** சிக்கனமாக இருக்க வேண்டு மென்று நினைத்தாலும் அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். சொத்து விடயத்தில் அவசர முடிவுகள் வேண்டாம். அநாவசியமாக மற்றவர்கள் விடயத்தில் தலையிடாதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்சினைகள் ஏற்படும்.



**சிங்கம்:** பழைய கசப்பான சம்பவங்களைப் பற்றி யாரிடமும் விவாதிக்க வேண்டாம். முக்கிய ஆவணங்களை கவனமாக கையாளுங்கள். பண விடயங்களில் சாக்குப் போக்கு சொல்லிச் சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைச் சுமையால் சோர்வு வந்து நீங்கும்.



**கன்னி:** நட்பு வட்டாரம் விரிவடையும். வியாபாரத்தில் மறைமுக எதிர்ப்புகளைச் சமாளிப்பீர்கள். பிரபலங்களைச் சந்திப்பீர்கள். உத்தியோகத்தில் மகிழ்ச்சியுண்டு



**துலாம்:** சில தினங்களாகத் தடைப்பட்டுவந்த காரியங்களெல்லாம் இன்று சுமுகமாக முடியும். உறவுகளுக்கு மத்தியில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் உங்களின் திறமைகள் வெளிப்படும். சக ஊழியர்களின் ஆதரவு உண்டு.



**விருச்சிகம்:** வீண்செலவுகளைத் தவிர்ப்பீர்கள். பேச்சில் தன்னம்பிக்கை பிறக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் ஆதரவை பெறுவீர்கள். முன் கோபம் குறையும். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும்.



**தனுசு:** திட்டமிட்ட காரியங்கள் தாமதமாக முடியும். சிலர் உங்களை மட்டம் தட்டிப்பேசினாலும் உணர்ச்சிவசப்படாதீர்கள். திடீர் பயணங்கள், செலவுகளால் திணறுவீர்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும்.



**மகரம்:** திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக செய்து முடிப்பீர்கள். பணம் தேவையான அளவு இருக்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.



**கும்பம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும்.



**மீனம்:** திறமையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். வேற்று மதத்தினரால் நன்மை கிடைக்கும். வீண் அலைச்சல் விலகும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 9 | | 5 | | | 7 | | |
| 8 | | 6 | | 9 | 1 | | | 4 |
| 4 | | | 2 | 8 | 3 | | 9 | 5 |
| | | | | | | | 7 | |
| | 3 | 4 | 6 | | 7 | 5 | 2 | |
| | 1 | | | | | | | |
| 3 | 6 | | 1 | 7 | 8 | | | 9 |
| 1 | | | 9 | 4 | | 3 | | 7 |
| | | 9 | | | 6 | | 1 | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 1 | 3 | 2 | 9 | 7 | 8 | 6 | 4 |
| 8 | 6 | 2 | 5 | 4 | 3 | 7 | 1 | 9 |
| 9 | 7 | 4 | 1 | 8 | 6 | 3 | 2 | 5 |
| 2 | 9 | 7 | 6 | 1 | 5 | 4 | 8 | 3 |
| 3 | 8 | 5 | 7 | 2 | 4 | 1 | 9 | 6 |
| 1 | 4 | 6 | 9 | 3 | 8 | 5 | 7 | 2 |
| 4 | 3 | 9 | 8 | 6 | 1 | 2 | 5 | 7 |
| 7 | 2 | 1 | 3 | 5 | 9 | 6 | 4 | 8 |
| 6 | 5 | 8 | 4 | 7 | 2 | 9 | 3 | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனன் நீகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகம்

பன்னாலை தெல்லிப்பழை சிவ பூதவராயர் ஆலய கும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

சிவ பூதவராயர், விநாயகர் பெருமான், பால முருகப் பெருமான், நாகதம்பிரான், வைரவ சுவாமி முதலிய பரிவார மூர்த்திகளுக்கு முற் பகல் 10 மணி தொடக்கம் 11 மணி வரையான உள்ள சுபமுகூர்த்தத்தில் கும்பாபிஷேகம் நடை பெறவுள்ளது. முன்னதாக இன்று செவ்வாய்க் கிழமை காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம் பெறும். (ந)

## குடாநாட்டு விவசாயிகள் நெற்செய்கையில் தீவிரம்

யாழ்ப்பாணம்.ஒக்.29

கடந்த வாரம் பெய்த மழையால் குடாநாட்டு விவசாயிகள் கால போகத்துக்கான நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளனர். வறட்சிக் காலத்துக்கு ஏற்ப புழுதி விதைப்பை ஒரு பகுதி விவசாயிகள் மேற்கொண்ட போதும் தத்தமது வயல் காணிகளின் மண் தரத்துக்கு ஏற்ப விதைப்பை மேற்கொள்ள முடியாது ஏனைய விவசாயிகள் மழையை எதிர்பார்த்து இருந்தனர்.

காலபோகத்துக்காக வயல் காணிகளை உழுது பண்படுத்தி, விதை நெல்லைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கைகளை முன்னாயத்த மாக விவசாயிகள் மேற் கொண்டிருந்தனர். கடந்த வாரம் பெய்த மழையால் நிலம் குளிர்ச் சியடைந்துள்ளதால் நெல் விதைப்பு நட வடிக்கைகளை அவர்கள் ஆரம்பித் துள்ளனர். (ந-14)

## தீவக கல்வி வலயம் நடத்திய சுகாதார மேம்பாட்டு செயற்றிட்டம்



யாழ்ப்பாணம், ஒக்.29

வட மாகாணக் கல்வி, சுகாதார அமைச்சுக்களுடன் தீவக வலயக் கல்வி அலுவலகம் இணைந்து நடத்திய பாடசாலைச் சுகாதார மேம்பாட்டுச் செயற்றிட்டம் 2013, கடந்த வெள்ளிக்கிழமை காரைநகர் யாழ்ற்றன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் ரி.ஜோன் குயின்ரஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முதன்மை விருந்தினராக மாகாண மேலதிக கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரன், சிறப்பு விருந்தினர்களாக காரைநகர் பிரதேச செயலர் திருமதி தேவநந்தினி பாபு, ஊர்காவற்றுறை பொது சுகாதார வைத்திய அதிகாரி திருமதி ஜான்சி ஆனந்தராஜா, யாழ்.சுகாதாரப் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதில் விருந்தினர் உரை, சுகாதார விழிப் புணர்வு தொடர்பான அறிமுகம், இலவச மருத்துவ முகாம், காரைநகர் கோட்டப் பாடசாலைகளின் கலை நிகழ்வுகள், சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகள் என்பன இடம்பெற்றன. இதன்போது காரைநகர் கோட்டத்தைச் சேர்ந்த பத்துப் பாட சாலைகள் கலந்து கொண்டன.

சுகாதாரக் கண்காட்சியும் இடம்பெற்றது. விபத்துக்களைத் தவிர்த்தல், டெங்கு தடுப்பு, முதியவர்களுக்கான உணவு வகைகள், சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த விளக்கங்களுடன் குறித்த கண்காட்சி மிகவும் சிறந்த முறையில் காட்சிப் படுத்தப்பட்டிருந்தது. (ந-7)

## அனைத்துலக முருக பக்தி மாநாடு அடுத்தவருடம் சுவிஸ் நாட்டில்

யாழ்ப்பாணம்.ஒக்.29

மலேசியா திருமுருகன் திருவாக்கு திருப்பீடத்தின் ஏற்பாட்டில் அனைத்துலக முருகபக்தி மாநாடு அடுத்த வருடம் மே மாதம் 2ஆம் திகதி சுவிட்சர்லாந்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சுவிஸில் உள்ள 23 இந்து ஆலயங்களின் பரிபாலன சபைகளும், 45ஆயிரத்துக்கும் மேற்பட்ட புலம்பெயர் தமிழர்களும் இந்த மாநாட்டில் பங்கு பற்றவுள்ளனர்.

சைவ சமயத்தின் தொன்மையை வெளிப்படுத்தல், முருக பக்தியை மேம்படுத்தி வளர்த்தல், மதமாற்றத்தைத் தடுத்தல் ஆகிய இலக்குகளை முன்வைத்து இந்த மாநாடு நடை பெறவுள்ளது. இதில் சிறப்பு நிகழ்வுகளாக கண்காட்சி, சிறுவர்களுக்கான சமய அறிவுப்போட்டி, ஆய்வுக்கட்டுரை சமர்ப்பித்தல், சிறப்புரை, கலைநிகழ்வுகள் என்பன நடைபெறவுள்ளன.

ஆய்வுக்கட்டுரைகளை இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், ஐரோப்பா, கனடா, அமெரிக்கா, தென்னாபிரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் சமர்ப்பிக்கவுள்ளனர்.

இதேவேளை அடுத்த வருடம் நடைபெறவுள்ள இந்த அனைத்துலக முருகபக்தி மாநாட்டில் ஆய்வுக்கட்டுரைகளை சமர்ப்பிக்க விரும்புவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. "வேத ஆகம, புராண, இதிகாசம் மற்றும் தமிழ் இலக்கியம், பன்னிரு திருமுறை இவற்றில் முருகப் பெருமான்" "பக்தி நெறி யில், சித்தர் நெறியில், தத்துவங்களில் முருகப் பெருமான்", "நாட்டுப்புறவியலில் முருகப் பெருமான்", "உலக நாடுகளில் முரு கப் பெருமான்", "கோயில்கள், விழாக்கள், அடியார்கள், அருளாளர்கள், மந்திரங்கள், உபாசனைகள் நேர்த்திக் கடன், காவடி, வாழ்வியல் என்பவற்றில் முருகப்பெருமான்", "அறிவியல், மருத்துவம், வானியல், சோதிடம் ஆகியவற்றில் முருகப் பெருமான்" ஆகிய தலைப்புகளில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கலாம்.

ஆர்வமுடையவர்கள் 2014 ஜனவரி மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னதாக தமது ஆக்கங்களை Hindu verien, murugabhakthi 2014, Industric switzerland என்ற முகவரிக்கோ mbc2014swiss@gmail.com என்ற இணையத்தள முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம். (ந-14)

## பொது அறிவுப் போட்டி முடிவுகள்

திருமூலநாயனார் குருபூசை விழாவினை முன்னிட்டு உடுவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்திய இந்து சமயப் பொது அறிவுப் போட்டிப் பரீட்சைகளின் முடிவுகள் வருமாறு:

பாலர் பிரிவு-1 ஆம் இடம் - ப.கஜமுகன் (பரராஜ சேகரப் பிள்ளையார்), 2 ஆம் இடம் - ச.ரிஷிகேசன் (ஆத்மஜோதி தியான மணி மண்டபம்), 3 ஆம் இடம்- மு.பிரணவன்(பரராஜ சேகரப் பிள்ளையார்).

கீழ் பிரிவு-1 ஆம் இடம் - ம.குணாளினி (சொர்ண வரதகாளி அம்பாள்), 2 ஆம் இடம் - ஞா.இதபாஷனி (இளந்தொண்டர் சபை), 3 ஆம் இடம்- இ.கௌரீஷன்(பரராஜ சேகரப் பிள்ளையார்).

மத்திய பிரிவு

1 ஆம் இடம் -இ.சங்கீர்த்தனன் (பரராஜ சேகரப் பிள்ளையார்), 2 ஆம் இடம் - ற.கீர்த்திகா (பரராஜ சேகரப் பிள்ளையார்), 3 ஆம் இடம்- ச.சரண்யா (ஸ்ரீ. வசந்த நாகபூசணி).

மேல் பிரிவு

1 ஆம் இடம் -க.சர்ஜனன் (இளந்தொண்டர் சபை), 2 ஆம் இடம் - நி.தேனுசன் (ஆத்ம ஜோதி தியான மணி மண்டபம்), 3 ஆம் இடம் - [illegible] (ஆத்ம ஜோதி தியான மணி மண்டபம்). (ந)

---

# முதலாம் ஆண்டு நினைவில்

தோற்றம் 15 - 12 - 1924

மறைவு 08 - 11 - 2012



அமரர் தெய்வேந்திரம் பொன்னம்மா

ஆண்டு ஒன்று ஆனதம்மா
ஆறவில்லை எம் துயரம் எம் ஆசைக் கனவுகளை நிறைவேற்றி
பாசத்துடன் எமை வளர்த்த தெய்வமே பாரினில் தேடுகின்றோம்
பார்க்க முடியவில்லை உங்கள் முகம்
எம் எதிர்கால வாழ்வில் உங்கள் ஆசி தொடரட்டும்

பத்தானை வீதி,
தாவடி தெற்கு,
கொக்குவில்.
(33244)(5.6.3)

என்றும் உங்கள் நினைவில்வாழும்
குடும்பத்தினர்.

---

# விண்ணக வாழ்வின்... ஐந்தாம் ஆண்டு-நினைவு

தோற்றம் மறைவு
05.05.1930 29.10.2008

திருமதி
திரேசம்மா
(மனோன்மணி)
சின்னத்துரை

"சீவியத்தில் நேசித்தோம்
மரணத்திலும் மறவோம் அம்மா!!"



ஐந்து ஆண்டுகள் மறைந்துவிட்டன - அம்மா
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மாண்டவர் மீண்டும் வருவதில்லை
மறையுமா உங்கள் நினைவின் பாரம்
குடும்ப ஒளி விளக்காய்த் திகழ்ந்த - அன்புத் தாயே
எங்களை நிர்க்கதியாய் விட்டு
எங்கு சென்றீர்கள் - அம்மா!!
காலங்கள் ஆயிரம் போனாலென்ன
மறக்க முடியுமா உங்கள் நினைவை?
உலகில் உயிருள்ள வரைக்கும்
உங்கள் நீங்காத நினைவுகள் எம்முடன் தொடரும்...

உம் பிரிவாற்றாது துயருறும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டன்,
சகோதரர்கள்.

"மனோஸ்த்தான்"
உயரப்புலம்,
ஆனைக்கோட்டை. (33320) (7.6.3)

---

ஆதி கோயிலடி வல்வெட்டித்துறையைப்
பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட
அமரர் தங்கவேல் சண்முகவடிவேல்(குட்டிமணி)

(29.10.2013) அவர்களின்
# 31 ஆம் நாள் நினைவலைகள்

பிறப்பு 03.02.1957
இறப்பு 30.09.2013



ஆலயம் போல் ஊன்றுகோலாய் விளங்கியவரே
ஆசையோடு காலமகன் உங்களை
எம்மிடமிருந்து பிரிந்ததேனோ?
உங்கள் உறவு இன்றித் தவிக்கின்றோம்-அப்பா
எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து தாங்கள்
எங்குதான் ஒருமாதமாகியும் சென்றீர்களோ?

எங்கள் தந்தையார் உடல் நலக் குறைபாடுற்றிருந்தபோது வைத்தியசாலையிலும் வீட்டிலும் வந்து அன்போடும் அரவணைப்போடும் அன்பு வார்த்தைகளைக் கூறி எமது துன்பத்தில் கலந்து கொண்டவர்களுக்கும் நேரில் வந்து பார்வையிட முடியாததால் தொலைபேசி மூலம் உள் நாட்டிலிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் நலம் விசாரித்த அனைவருக்கும் மற்றும் தந்தையாரின் மரணச்சடங்கிலும் அந்தியேட்டி வீட்டுக்கிரியையிலும் பங்கு கொண்டு எம் துன்ப அனுதாபத்தைப் பகிர்ந்து கொண்ட அனைவருக்கும் எம் நெஞ்சப்பூக்களினால் நன்றியினைத் தங்கள் உள்ளங்களிலே காணிக்கையாக்குகின்றோம்.

ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறை. (29582) (6.3.4)

குடும்பத்தினர்.

---

# கண்ணீர் அஞ்சலி

எமது விரிவுரையாளரும் இணைப்பாளருமாகிய
சி.முகுந்தன் அவர்களின் பாசமிகு தந்தை
இராமலிங்கம் சிவசுப்பிரமணியம்
அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கல்விமாணி 2 ஆம் வருட ஆங்கில ஆசிரியர்கள்
யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி
(39536)(3.6.4)

---

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



திருமதி கண்மணி
அன்னராசா

நிகழும் விஜய வருடம் புரட்டாதி மாதம் 13ஆம் நாள் (29.09.2013) ஞாயிற்றுக்கிழமை சிவப்பேறெய்திய எமது குடும்பத் தலைவி திருமதி கண்மணி அன்னராசா அவர்களின் 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (29.10.2013) செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் வியாழக்கிழமை (31.10.2013) அச்சுவேலி இராஜமாணிக்கம் கல்யாண மண்டபத்திலும் நடைபெற்று, தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி மேற்கு,
அச்சுவேலி.
021 373 5759

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## திருமதி யோகம்மா பரமானந்தம்

புங்குடுதீவு 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோகம்மா பரமானந்தம் கடந்த (26.10.2013) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பரமானந்தனின் (ஆசிரியர்) அன்பு மனைவியும், தம்பையா வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், நவரத்தினம்- பராசக்தி தம்பதியரின் அன்பு மருமகளும், குகதாசன், காலஞ்சென்ற செல்லம்மா, பாலரத்தினம் (தெரணியகல வர்த்தகர்), சீவரத்தினம் கதிரேசு, பேரம்பலம், மீனாட்சி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலசுப்பிரமணியம், திருநாவுக்கரசு, சச்சிதானந்தன், நவமணி, கேசவராணி, புவனேஸ்வரி, புஸ்பராணி, புலேந்திரன், திருக்குமரன், காலஞ்சென்ற தியாகராஜா, வரதராஜா, பன்னீர்ச்செல்வம், சரவணமுத்து ஆகியோ ரின் மைத்துனியும், உருத்திரானந்தன் (லண்டன்), கிருபானந் தன் (கனடா), பவானந்தன் (ஜேர்மனி), மல்லிகாதேவி (கனடா), கோமளாதேவி (இலங்கை), மோகனாதேவி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், கிருபராஜா, நல்லலிங்கம், பிரபாகரன், ஷியாமலா, புவனேஸ்வரி, சுகந்திரலக்சுமி ஆகியோரின் அன்பு மாமியும், ஷாமினி , அனு, கிருபாஅருண், கிருபாரமணண், கிருஷாந்தன், நிஷாந்தன், துஷாந்தன், துவாரகா, ஜனனி, அனிதா, வசீகரன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு கிரியைகள் 31.10.2013 வியாழக்கிழமை காலை 8.00 மணிமுதல் பிற்பகல் 1.00மணிவரை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(39555.14.17)

64, 2/3, சின்சபா வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு-06,
தொலைபேசி இல. 0112553027

தகவல்:
மக்கள், மருமக்கள்

# வங்கி அதிகாரிகளாக நடித்து பணமோசடி செய்த ஆசாமிகள்

தென்மராட்சி, ஒக்.29

தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களின் பெற்றோரிடம் தனியார் வங்கியில் கடமை யாற்றும் அதிகாரிகள் எனக் கூறி இருவர் பணம் பெற்றுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக் கிழமை இடம்பெற்றது.

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் இருவரின் வீடுகளுக்கு ஓட்டோ விலும், மோட்டார் சைக்கிளிலும் சென்ற இருவர் இத்தகைய மோசடியில் ஈடுபட்டனர்.

இலங்கையில் செயற்படாத வங்கி ஒன்றின் பெயரைக் கூறி தாம் அதில் கட மையாற்றுபவர்கள் எனவும் தரம் 5 புல மைப் பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கான சேமிப்புத் திட்டம் வங்கியால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆறு மாதங்களுக்கு தலா 3 ஆயிரம் ரூபா வீதம் வங்கியில் வைப்புச் செய்தால் எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் 3 மாதங்களுக்கு ஒரு முறை கல்வி நிதி வழங்கப்படும். 18 வயதுக்குப் பின்னர் 18 லட்சம் ரூபா மீளப்பெற முடியும் எனக் கூறி செம் ரெம்பர், ஒக்ரோபர் மாதங்களுக் குரிய கட்டு நிதியை வழங்குமாறு கூறியுள்ளனர்.

அதை நம்பி ஏமாந்த இரு மாணவர்களின் பெற்றோர்களும் இரு மாதங்களுக்குரிய கட்டுப் பண மாக தலா 6 ஆயிரம் ரூபா வீதம் வழங்கியுள்ளனர்.

வங்கிப் புத்தகத்துடன் நேற்று வருவ தாகக் கூறி இருவரும் தமது தொலை பேசி இலக்கத்தையும் வழங்கிச் சென்றுள்ளனர். நேற்று நண்பகல் வரை காத்திருந்து விட்டு தொலை பேசியுடன் தொடர்பு கொண்ட போதிலும் இணைப்புக் கிடைக்கவில்லை என அப் பெற்றோர் தெரிவித்தனர். (வ-9)

# வர்த்தகர்களுக்கு அபராதம்

தென்மராட்சி, ஒக்.29

சுகாதாரத்துக்குப் பங்கம் விளைவிக்கும் வகையில் உண வுப் பொருள்களை வைத்தி ருந்த இரு வர்த்தகர்களுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 5 ஆயிரம் ரூபா வீதம் அபரா தம் விதிக்கப்பட்டது. உணவுப் பாதுகாப்பு வாரத் தையொட்டி சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தி னர் வரணிப் பிரதேசத்திலுள்ள உணவு கையாளும் நிலையங்களில் நடத்திய திடீர் பரிசோதனையின் போது சுகாதாரத்துக்கு பங்கம் விளை விக்கும் வகையில் உணவுப் பொருள்களை வைத்திருந்ததாக இனங்காணப்பட்ட இரு வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகள் நேற்று நீதிமன்றில் விசாரணைக்கு எடுக்கப் பட்டன. (வ-9)

# சடலம் மீட்பு

கிளிநொச்சி, ஒக். 29

முல்லைத்தீவு வள்ளி புனம் பகுதியிலுள்ள ஆள் நடமாட்டம் அற்ற பிரதேசத்திலிருந்து குடும்பஸ்தர் ஒருவரது சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

வள்ளிபுனம், நாவலடி ஆற்றுக்கு அண்மித்த ஆள்கள் இல்லாத காணி ஒன்றிலிருந்தே தூக்கில் தொங் கிய நிலையில் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வள்ளிபுனத்தைச் சேர்ந்த 43 வயதுடைய ஐந்து பிள்ளைகளின் தந்தையான பிச்சைமுத்து சந்தானம் என்வருடைய சடலமே பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக புதுக் குடியிருப்பு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண் டுள்ளனர். (ஜ-6-400)

# ஆக்கப் பொருள்கண்காட்சி இன்று

கச்சாய் அ.த.க.பாடசாலை மாணவர்களின் ஆக்கப் பொருள் கண்காட்சி இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும். பாடசாலை அதிபர் க.உதயகுமாரன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் கலந்துகொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார். (வ-9)

# துயர் பகிர்கின்றோம்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் சி. முகுந்தன்

அவர்களின் அன்புத் தந்தை



## இராமலிங்கம் சிவசுப்பிரமணியம்


(நெல்லியடி வடக்கு, கரவெட்டி)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும் பத்தினருடன் நாங்களும் இணைந்து கொள்கின் றோம். அத்துடன் அன்னாரின் ஆத்மா சாந்திய டைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். (39556.14.17)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம் , கோப்பாய்

# மரண அறிவித்தல்

## நாகமுத்து அமரசிங்கம்



தம்பாட்டி ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட நாகமுத்து அமரசிங்கம் நேற்று முன்தினம் (27.10. 2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து-தங்கமுத்து தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்துச்சாமி-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், சுபத்திரையின் அன் புக் கணவரும், காலஞ்சென்றவர் களான ஞானாம்பாள், திருச்செல் வம் (முன்னாள், ஊர்காவற் றுறை பிரதேசசபைத் தலைவர்., சமாதான நீதிவான்), இராசாம்பாள், மற்றும் இன்பக்கிளி, தியகராசா ஆகியோரின் அன்புச் சகோ தரனும், றேனுகா, தமிழ்ச்செல்வன் (சுதா), தயாபரன் (தயா), சிறீகா (ஜேர்மனி), சசிதா (பிரான்ஸ்), கண்ணன் (பிரான்ஸ்), தர்சினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவறாஜி, எழில்சன் (ஜேர்மனி), பிரபாகரன் (பிரான்ஸ்), சசிச்செல்வன் ஆகியோரின் அன்பு மாமனும், விந் துஷன், பிரசாந்தன், டிலானி, கைலாஷ், யது சன் (ஜேர்மனி), பிரதீபா (பிரான்ஸ்), பிரசா (பிரான்ஸ்), சுருதிகா (பிரான்ஸ்), சினேஸ்கா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2013) செவ்வாய்க்கிழமை காலை 09.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக தம்பாட்டி விறாட்டி முனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தம்பாட்டி, ஊர்காவற்றுறை. (39555.14.17) குடும்பத்தினர்.

# சாந்திகம் உளவளத்துணை நிலையம்

## பதவி வெற்றிடம் - உளசமூகப் பணியாளர்கள்

கடந்த பல வருடங்களாக உளவளத்துணை மற்றும் சமுதாயமட்ட உளமருத்துவ - உளசமூகத் துறையில் சேவை புரியும் எமது நிறுவனம் மருதங்கேணி, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் உளசமூக மேம்பாடு தொடர்புடைய நடவடிக்கைகளைச் செயற்படுத்த உள்ளது. இப்பிரதேசங்களில் அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய பொருத்தமான உளசமூகப் பணியாளர் களை நாம் உள்ளீர்க்க விரும்புகிறோம். இத்திட்டம் USAID நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் ஒரு நிகழ்ச்சித் திட்டமாகும்.

தகுதிகள்

- க.பொ.த உயர்தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
- உளவியல்/ சமூகவியலில் பட்டம் பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.
- அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றில் உளசமூக அல்லது உளவளத்துணை டிப்ளோமாப் பட்டம் பெற்றவராயிருத்தல் அவசியம்.
- சமுதாயமட்ட உளசமூகப் பணிகளில் குறைந்தது இரண்டு வருட அனுபவத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- சாந்திகம் நிறுவனத்தையும், அதன் விழுமியங்களையும் புரிந்து அவற்றைப் பிரதிபலித்துச் செயற்படக்கூடிய வராக இருத்தல்.
- மேற்குறிப்பிடப்பட்ட இடங்களில் தங்கியிருந்து வேலை செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- கணினியைக் கையாளும் திறனுடன், ஆங்கிலத்தில் கதைக்கும், எழுதும் ஆற்றல் உடையவராயிருத்தல் விரும்பத்தக்கது.

முழுநேர ஒப்பந்த அடிப்படையில் உள்ளீர்க்கப்படும் பணியாளருக்கு மாதாந்தம் ரூபா 25,000/= வழங்கப்படும். அதனுடன் ஊழியர் சேமநிதியும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியும் மேலதிகமாக வழங்கப்படும்.

**விண்ணப்பிப்பதற்கான இறுதித்திகதி - 05.11.2013**

பொருத்தமானவர்கள் எனக் கருதப்படும் விண்ணப்பதாரி கள் நேர்முகத் தேர்வுகளுக்கு அழைக்கப்படுவார்கள்.

மேலதிக விவரங்களுக்கும், சுயவிவரங்கள் அடங்கிய விண்ணப்பங்களைக் கையளிப்பதற்கும் அல்லது தபால் மூலம் அனுப்புவதற்கும் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி:

தலைவர்,
சாந்திகம்,உளவளத்துணை நிலையம்,
இல. 8, 8/1 கற்பக விநாயகர் வீதி,
கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல.: 021-2223338
மின்னஞ்சல் முகவரி: psych@sltnet.lk

# நகராட்சிமன்றம், சாவகச்சேரி
# கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைக்கான கேள்விகள் என்னால் 12.11.2013ஆம் திகதி முற்பகல் 10 மணி வரை ஏற்றுக் கொள்ளப்பட்டு அதே தினம் முற்பகல் 11 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

கீழே அட்டவணையில் குறிப்பிட்ட வேலைகளுக்கு தாங்கள் கேள்வி கோர விரும் பினால் அதற்கான கட்டணத்தைச் செலுத்தி கேள்விப் படிவம் பெற்றுக் கொள்ளலாம்.

| தொ. இல. | வேலை விவரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (VAT + NBT) |
|---|---|---|---|
| 01. | நகரமண்டபத்தில் மரத்திலான மேடை அமைத்தல். | 14500.00 | 1140.00 (நகராட்சி மன்றத்தில் பதிவு செய்யப் பட்ட ஒப்பந்தகாரர்கள் தவிர்ந்த ஏனைய ஒப்பந்தகாரர்கள் இக்கட் டணம் செலுத்தப்பட வேண்டும்.) |

கேள்விப் பத்திரங்கள் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தில் 08.11.2013ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை மேற்குறிப்பிட்ட கட்டணங்களைச் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் படிவங்கள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதி செயலாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி என முகவரியிடப்பட்டு, நேரடியாகப் பெட்டியில் இடப்பட வேண்டும். இணைப்பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 12.11.2013ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

மேற்படி கேள்வியானது உறையிடப்பட்டு உறையின் இடதுபக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்பட வேண்டும். இது தொடர்பான மேலதிக விவரங் களை அலுவலக நேரத்தில் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

இ.தேவசகாயம்பிள்ளை
தவிசாளர்,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.

நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.
28.10.2013

(சி/2774)
(7.8.3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களின் உள ஆற்றுகைக்கு கலைநிகழ்வுகள் மிக அவசியம்

## வடமாகாண சபையின் முல்லை மாவட்ட உறுப்பினர் ரவிகரன்



யாழ்ப்பாணம், ஒக். 29
சிறுவர்கள் எதிர்காலத்தில் சிறந்த பிரஜைகளாக உருவாவதற்கு கல்விக்கு அப்பாற்பட்ட ஏனைய விடயங்களும் பங்களிப்புச் செய்கின்றன. எனவே சிறுவர்களை உளரீதியாக ஆற்றுப்படுத்துவதற்கு உதவும் கலை நிகழ்வுகளை தொடர்ந்தும் நடத்த வேண்டும் என்று வடமாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார்.
முல்லைத்தீவு கள்ளப்பாட்டில் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் ஏற்பாட்டில் சிறுவர் விழா கொண்டாடப்பட்டு வருகின்றது. இதில் கடந்த சனிக்கிழமை மாலை இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக து.ரவிகரனும், சிறப்பு விருந்தினர்களாக முல்லை மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகாரி ரஜனிகாந்த் மற்றும் போதகர் ச.ஜோசப் ஜெகநாதன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.
இந்த நிகழ்வில் உரையாற்றிய ரவிகரன் தெரிவித்ததாவது:
"முல்லைத்தீவு மாவட்டத்தில் போருக்குப் பின்னரான சூழலில் இது போன்ற சிறுவர் கலைவிழாக்கள் நடத்தப்படுவதை நான் நன்றியுடன் வரவேற்கின்றேன்.
இது போன்ற விழாக்கள் எதிர்காலத் தலைவர்களான இளஞ்சிறார்களின் உள மேம்பாட்டுக்கு மிகவும் உறுதுணையாக இருப்பதோடு எதிர்கால சமூகத்தில், அவர்கள் ஆரோக்கியமான சமூக பிரஜைகளாக வாழ்வதற்கு உதவியாகவும் இருக்கும்.
அது மட்டுமல்லாமல், இவ்வாறான விழாக்கள் மூலமாக எமது கலாசாரமும் பேணிப் பாதுகாக்கப்படுகின்றது"- என்றார். (ந-5)

# அமைதியை நிலைநாட்ட இணைந்து செயற்படுங்கள்

## ரவூப் ஹக்கீம் வேண்டுகோள்



கொழும்பு, ஒக்.29
பொதுநலவாய மாநாடு நடைபெறவுள்ள நிலையில் சமாதானம், அமைதியை நிலைநாட்ட அனைவரும் இணைந்து செயற்பட வேண்டும் என நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
பௌத்த தள நிலைய திருத்தச் சட்ட மூலம் தொடர்பிலான விவாதம் வெள்ளிக்கிழமை நாடாளுமன்றத்தில் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரி வித்தார்.
அவர் மேலும் தெரிவித் ததாவது:-
பொது பலசேனா ஹலால் விடயத்தை பூதாகரமாக்கி அதன் மூலம் வேறு நோக்கங்களை அடைய செயற்பட்ட விதம் கவலை அளிக்கிறது.
சில சக்திகள் நாட்டின் அமைதி, சமாதானத்தை குழப்புவதை அவதானிக்க முடிகின்றது.
முஸ்லிம் மக்களுக்கு எதிராக பல துன்பியல் சம்பவங்கள் நடைபெறுகின்றன. அதனால் இனவிரிசல்கள் இடம்பெறுகின்றன. முஸ்லிம் மக்கள் அரசுடன் இணைந்து பல வழிகளில் ஒத்துழைப்பு வழங்கியிருந்தார்கள்.
பொதுபல சேனா முஸ்லிம்களை ஏமாற்றியதுடன் மீண்டும் பிரச்சினைகளை உருவாக்க முயற்சிக்கின்றது.-என்றார். (ச-10)


# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 - 01 - 1981
மறைவு 18 - 10 - 2011

அமரர்
செல்லத்துரை வினோகரன்

திதி: சஷ்டி
ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.
குடும்பத்தினர்.
வரணி.
(29685)(5.6.3)




# விஷம் உடலில் சேர்வதால் 120,000 பேர் சிகிச்சை

## நேற்று முதல் தேசிய விஷத் தவிர்ப்பு வாரம் அனுஷ்டிப்பு

கொழும்பு, ஒக்.29
விஷங்கள் மற்றும் நச்சுக்கள் உடலில் சேர்வதால் நோய்களுக்கு உள்ளாவோரின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துச் செல்கிறது.
இந்தத் தகவலை சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ளது.
விஷம் உடலில் சேர்வதால் வருடாந்தம் 120,000 பேர் வரை வைத்தியசாலைகளில் தங்கிச் சிகிச்சை பெறுகின்றனர் என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
இவ்வாறு வைத்தியசாலைகளில் தங்கிச் சிகிச்சை பெறுவோரில் சுமார் 1500 பேர் உயிரிழக்கின்றனர். சிகிச்சைக்காக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவோர் பலர் கிருமிநாசினிகள் உட்பட பீடை நாசினிகள் விஷமாகிப் போவதால் பாதிக்கப்பட்டவர்கள் ஆவர். வருடாந்தம் சுமார் 40 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பாம்புக் கடிக்கு உள்ளாகின்றனர் என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
இரசவாதம் மற்றும் தேசிய விஷத் தகவல்கள் மையத்தால் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவின் உத்தரவுக்கு அமைய நேற்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 13 ஆம் திகதி வரை தேசிய விஷத் தவிர்ப்பு வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. இந்த வாரத்தில் நிறுவனங்கள் மட்டத்திலும் சமூகங்கள் மட்டத்திலும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வேலைத்திட்டங்கள் கல்வி சார் நடைப் பயணங்கள் , கலந்துரையாடல்கள் ஆகியவை நடத்தப்படும் என்று சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.
இந்த வாரத்தை அனுஷ்டிப்பதன் மூலம் உயிரிழப்போர் தொகையைக் குறைத்துவிட முடியும் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் பாலித்த மகிபால தெரிவித்துள்ளார். (ச-22)

# ஹலால் பிரச்சினை; வேண்டாம் பேச்சு

கொழும்பு, ஒக்.29
ஹலால் பிரச்சினை தொடர்பில் இனி எந்தவிதமான பேச்சுக்களுக்கும் இடமில்லை என்று பொதுபல சேனாவின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.
ஹலால் தொடர்பில் பரப்பப்பட்டு வரும் தவறான செய்திகளுக்கான பகிரங்க வாதம் அவசியம் என்று நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-
ஹலால் விடயத்தில் பேச வேண்டியவை எல்லாம் ஏற்கனவே பேசப்பட்டு விட்டன. அந்தப் பேச்சுக்களின் இணக்கங்களுக்கு அமைய செயற்பட வேண்டும்.
பொதுநலவாதம் பேசும் அவரை நாம் விட நன்றாகவே நாட்டைப் பற்றியும் மக்களைப் பற்றியும் தெரிந்து வைத்துள்ளோம்.
நாட்டின் முன்னேற்றத்துக்காகவே நாம் செயற்படுகின்றோம். பொதுநலவாய மாநாட்டுக்கு முன்னர் ஹலால் பிரச்சினைக்கு தீர்வு காண்பது சிறந்தது- என்றார். (10)

# முன்பள்ளிச் சிறாரின் கண்காட்சி நாளை

யாழ்ப்பாணம், ஒக்.29
யாழ்.சைவபரிபாலன சபை, நாவலர்சோலை முன்பள்ளி சிறார்களின் கண்காட்சி நாளை புதன்கிழமை காலை 9.30 மணி முதல் மாலை 4 மணிவரை நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் என்று சபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ)

# மானிய உரத்தை இன்று முதல் பெறலாம்

தென்மராட்சி, ஒக்.29
சாவகச்சேரி கமநல சேவை பிரிவுக்குட்பட்ட நெற் செய்கையாளர்களுக்கு மானிய உரம் வழங்கப்பட்ட போது அதனைப் பெற்றுக் கொள்ளாதோர் இன்று செவ்வாய்க்கிழமை பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி பொன்மலர் கந்தையா



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் ஊரெழுவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்மலர் கந்தையா 26.10.2013 சனிக்கிழமை காலமானார்
அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை- கற்பகம் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையாவின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஜெகதாம்பிகை, ஜெகநாதன் மற்றும் சிறீஸ்கந்தராசா, சாந்தரூபி, வசந்தகுமாரன், தயாபரம், நிர்மலாதேவி (ஜேர்மனி), ஜெயமாலா (ஜேர்மனி), ஜெயவதனா, இந்திரவதனா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான சிவநாயகம், ஞானமணி மற்றும் நவரட்ணம் (உரும்பிராய்) சிவனேஸ்வரி (உரு ம்பிராய்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பொக்கனை இந்து மயானத்திற்கு (ஊரெழு) எடுத்துச் செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
ஆலடிலேன், ஊரெழுமேற்கு, சுன்னாகம். (33349) (6.3.4)
தகவல்: குடும்பத்தினர்.

## நடராசா அரியரத்தினம் (பவளம்)



மட்டுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலியை நிரந்தர வசிப்பிடமாகவும் லண்டனைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற கிராம அலுவலரான நடராசா அரியரத்தினம் (பவளம்) 24.10.2013 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.
அன்னார் மட்டுவில் தெற்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான நடராசா - பாக்கியம் தம்பதியரின் மகனும், நீர்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான இராமுப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், பத்மாதேவியின் கணவரும், செல்வரத்தினம், இராசரத்தினம், நவரத்தினம், தவரத்தினம், தேவசகாயம், இன்பராணி ஆகியோரின் சகோதரரும், நீர்வேலி பற்பநாதன், யோகர் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். தகவல்:
நடராசா நவரத்தினம் (சகோதரன்)
மட்டுவில் தெற்கு. (33344)(6.3.4) T.P:077 918 4074

## அருணாசலம் இராஜரட்ணம்


(இளைப்பாறிய ஆய்வுகூட உதவியாளர்-புலோலி)



புற்றளை புலோலியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட அருணாசலம் இராஜரட்ணம் 26.10.2013 சனிக்கிழமை நள்ளிரவு காலமானார்.
அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம்- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா -மீனாட்சி தம்பதியினரின் அன்பு மருமகனும், வள்ளிநாயகியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சிவக் கொழுந்து, தியாகராசா, கதிரவேலு, தனபாலசிங்கம், கந்தப்பசேகரம் ஆகியோரின் சகோதரனும், செல்வநாயகி( பிரான்ஸ்), புனிதவதி (வவுனியா), சச்சிதானந்தம் (குருநாகல்), கருணாநிதி (வவுனியா), இராஜேஸ்வரி (ஆஸ்திரேலியா), ஆனந்தநாயகி (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும், சந்திரவதனா (ஆஸ்திரேலியா), வசந்தாதேவி (நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் - பிரதேச வைத்தியசாலை கோப்பாய்), மகாராஜன் (லண்டன்), வரதராஜன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் தந்தையாரும், சிதம்பரநாதன் (ஆஸ்திரேலியா), சண்முகலிங்கம் (ஆசிரியர் - கற்கோவளம் மெ.மி. த.க பாடசாலை), அனுஷா ( லண்டன்), லாவன்யா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும், கனிஷா, பிரியந்தினி , கஜேந்தினி, சுசேந்தினி, அனுராம், அஞ்சனா, லக்சனா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்
அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.10.2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணிக்கு ஆனைவிழுந்தான் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
தகவல்:
புற்றளை, புலோலிதெற்கு, புலோலி. குடும்பத்தினர். (சி/13449) (3.6.4)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி விளக்குகள் ஒளிராததால் கிளிநொச்சி மக்கள் கவலை



கிளிநொச்சி.ஒக்.29

கிளிநொச்சி பகுதி வீதி விளக்குகள் மீண்டும் ஒளிராது தடைப் பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவித்துள்ளனர். கரைச்சிப் பிரதேச சபையினர் மின்சார சபைக்குச் செலுத்த வேண் டிய கட்டணங்களை உரிய காலத்தில் செலுத்த வில்லை என்பதால் வீதி விளக்குகளுக்கான மின் விநியோகம் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை போர் ஓய்வுக்குப் பின்னர் 4 வருடங்கள் கடந்த நிலையிலும் கிளிநொச்சி உட்புற வீதிகளிலும் வீதி விளக்குகள் பொருத் தப்படாத நிலையே காணப்படுகிறது. இதனால் இரவு வேளைகளில் மக்கள் சிரமத்துடன் நடமாடுவதாகவும் வீதி விபத்துக்கள் தொடர்ச்சியாக இடம்பெறுவதாகவும் மக்கள் கவலை தெரி வித்துள்ளனர்.

இதேவேளை. கரைச்சிப் பிர தேச சபை மேற்படி விடயத்தில் துரித நட வடிக்கை மேற்கொள்ளாது விட்டால் வீதி விளக்குத் தொடர்பாக கிளிநொச்சி மக்கள் ஒன்றி ணைந்து மனுவொன்றை உரியவர்களுக்குச் சமர்ப்பிப் பதற்கு நடவடிக்கை எடுக்க வுள்ளதாகத் தெரிய வருகின்றது. (க-50)

வெல்லுக மகாஜன மாதா

**யா/ மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் வருடாந்தப் பொதுக் கூட்டம் - 2013**

அன்பான பெற்றோர்களே!

மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின். வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும்(10.11.2013) ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது. சகல அங்கத்தவர்களும் தவறாது சமுகம் தருமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைமை :- திரு. கு. வேல்சிவானந்தன் (அதிபர்)
இடம் :- பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபம்
காலம் :- 10.11.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி.

கு. வேல்சிவானந்தன் தலைவர்.
ந. துளசிதாசன் செயலாளர்

மன்னார் வீதி மின் விளக்கு பாதுகாப்புக்காக

# நிதி ஒதுக்கீடு செய்தும் உரிய பராமரிப்பில்லை

மன்னார் நகரசபை தலைவர் விசனம்

மன்னார், ஒக்.29

மன்னார் நகர சபைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள இலங்கை மின்சார சபைக்குச் சொந்த மான வீதி மின் விளக்கு களின் பராமரிப்புக்கும்.மின் கட்டணத்துக்கும் வருடம் தோறும் மன்னார் நகர சபை பெரும் நிதியை ஒதுக்கீடு செய்கின்ற போதும் மன்னார் மின்சார சபை உரிய முறையில் அவற்றை பராமரிப்ப தில்லை என மன்னார் நகர சபையின் தலைவர் எஸ்.ஞானப்பிர காசம் தெரிவித் துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மன்னார் நகரசபை செயற் படத் தொடங்கியதில் இருந்து தனது பிரிவுக்குட்பட்ட பகுதி களில் பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின்றது.

இதன் ஒரு கட்டமாக நகர சபை பிரிவுக்குட்பட்ட வீதி மின் விளக்குகளின் திருத்தம். பாதுகாப்பு. மின் கட்டணம் போன்றவற்றுக்கு மன்னார் நகர சபை மன்னார் மின்சார சபைக்கு நிதி வழங்குகின்றது.

இதன் அடிப்படையில் ஒரு வருடத்துக்கான வீதி மின் விளக்குக ளுக் கான மின் கட்டண மாக 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவை யும். ஒரு வருடத்துக்கு மின் விளக்குகள் பரா மரிப்பு. திருத்த வேலைகளுக்காக மின்சார சபைக்கு 2 இலட்சம் ரூபா வையும் நகர சபை மின்சார சபைக்கு வழங்குகின்றது.

*சகல உதவிகளை யும் மேற்கொண்டும் மன் னார் மின்சார சபை உரிய முறை யில் தமது பணியை மேற்கொள்வதில்லை. மன்னார் நகர சபைக் குட்பட்ட பல இடங் களில் இரவு நேரங் களில் வீதி மின் விளக்குகள் ஒளிர்வதில்லை.*

மின் கம்பங்களில் திருத்த வேலைகளுக்காக மன்னார் நகர சபை ஊழியர்களையும், வாகனங்களையும் அனுப்பு கின்றது. சகல உதவிகளை யும் மேற்கொண்டும் மன்னார் மின்சார சபை உரிய முறை யில் தமது பணியை மேற் கொள்வதில்லை.மன்னார் நகர சபைக்குட்பட்ட பல இடங்களில் இரவு நேரங்களில் வீதி மின் விளக்குகள் ஒளிர்வ தில்லை. இதனால் விபத்துக்களும், கலாசார சீர்கேடுகளும் இடம் பெறுவதாக முறைப்பாடுகள் கிடைக்கின்றது.

நாம் பல தடவை அவர்களுக்கு அறிவித்தும் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பதில்லை. எந்தவித சேவையும் இன்றி மக்களின் வரிப்பணத்தில் மின்சார சபைக்கு நிதி வழங் குகின்றோம்.

எனவே, மன்னார் மக்கள் மன்னார் மின்சார சபைக்கு எதிராகவே இனிமேல் நடவ டிக்கை எடுக்க வேண்டும் -என்றார். (க-12)

### கருத்தரங்குகள்

சாவகச்சேரி நுணா வில் பொது நூலகத்தி னர் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி நூலக எல்லைக்குட் பட்ட மூன்று பாடசாலை களில் நாளை புதன் கிழமை கருத்தரங்கு களை நடத்தவுள்னர். மாணவர்களுக்கு விழிப் புணர்வை ஏற் படுத்தும் நோக்கில் "நூலகங்களின் ஊடாக ஆற்றல்மிக்கசமூகத்தை கட்டி யெழுப்புவோம்" என்னும் தலைப்பில் கருத்தரங்கு நடத்தப் படவுள்ளது.

நாளை காலை 9 மணிக்கு நுணாவில் கிழக்கு அமிர் தாம்பிகை வித்தியாலயத்தி லும் மு.ப.10 மணிக்கு நுணாவில் மேற்கு அ.த.க. பாடசாலையி லும், மு.ப.11 மணிக்கு மட்டுவில் தெற்கு சரஸ் வதி வித்தியாலயத் தி லும் கருத்தரங்குகள் நடைபெறும் என நூல கர் அறிவித்துள்ளார். (வ-9)

**வீடு வாடகைக்கு**

நல்லூர் சட்டநாதர் வீதியில் இரண்டு பேர் கொண்ட குடும்பத்துக்கு வீடு வாடகைக்கு உண்டு. (சைவக்காரர் விரும்பத்தக்கது)
தொடர்பு: 0777225046
Bshans@gmail.com

FARM MASTER

உழவு இயந்திரம் விற்பனைக்குக உண்டு

புத்தம்புதிய 'றொட்ட வேற்றர்' மற்றும் வீலுடன் கூடிய புதிய பாவிக்காத FARM MASTER வவுனியாவில் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: அ.இராமநாதன் மாஸ்ரர் 0771607223

**தவறிவிட்டது**

தில்லைநாதன் வினோபன் ஆகிய எனது 872141111 V இலக்க NIC லைசன்ஸ், ATM கார்ட் ஆகிய ஆவணங் கள் அடங்கிய பேர்ஸ் பொஸ்கோ றோட்டில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.
தொ.பே: 0778294199

**யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் புதிய இருதயசிகிச்சை மற்றும் இருதய நெஞ்சறை சத்திரசிகிச்சை பிரிவுக்கான புதிய கட்டடத் தொகுதி நிர்மாணித்தலுக்கான நன்றிகள்**

ஐந்து மாவட்டங்களை உள்ளடக்கிய வேறுபட்ட இரு புவியியல் சார் பகுதிகளான யாழ். குடாநாட்டையும் வன்னிப் பெருநிலப் பரப்பையும் கொண்ட வட மாகாணத்தில் உள்ள ஏறத்தாழ 1.2 மில்லியன் மக்களின் வைத்திய தேவைகளை பூர்த்தி செய்யும் ஒரேயொரு மூன்றாம் நிலை வைத்தியசாலையாக யாழ்ப் பாணம் போதனா வைத்தியசாலை விளங்கி வருகின்றது. அத்துடன் இந்த வைத்தியசாலையானது யாழ். மாவட்டத்தின் ஏனைய மாவட்ட வைத்தியசாலைகள், பிராந்திய வைத்தியசாலைகள், சுற்றயல் கூறுகள் மற்றும் கிராமிய வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் நோயாளர்களின் மேலதிக சிகிச்சைக்காகவும் பரிசோதனைக்காகவும் பிரதான பரிந்துரை செய்யப்படும் இடமாகவும் விளங்குகின்றது.

நாட்டில் ஏற்பட்ட சமாதான சூழ்நிலை காரணமாக யாழ். போதனா வைத்தியசாலையின் உட்கட்டமைப்பு வசதிகள் நவீன வைத்தியசேவைகள் படிப்படியாக அதிகரித்துச் செல்வதானது வடமாகாண மக்களுக்கு மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இதன் காரணமாக மேலதிக சிகிச்கைகளுக்காக தேவையின்றி தெற்கு வைத்தியசாலைகளுக்கு செல்லவேண்டிய தேவை குறைவடைந்துள்ளது. இருந்த போதிலும் இருதய சிகிச்சை, இருதய நெஞ்சறை சத்திரசிகிச்சை தொடர்பான சிகிச்சைகளுக்கு இதுவரை பூரண சிகிச்சை செய்முறைகள் யாழ். போதனா வைத்திய சாலையில் நடை முறைப் படுத்தப்படாத நிலையில் தவிர்க்கப்படக் கூடிய உயிரிழப்புக்களும், கொழும்பு வைத்தியசாலைகளுக்கு மாற்றலுக்கான செலவுகளும் தொடர்ந்துகொண்டே செல்கின்றது.

இந்த விடயத்தில் அதிக சிரத்தை எடுத்துக்கொண்டு வடமாகாண மக்களின் எதிர்கால இருதயசார் வைத்திய சேவையை மேம்படுத்தும் நோக்குடன் யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி திருமதி பவானி பசுபதிராஜா அவர்களும் சத்திரசிகிச்சை நிபுணரும் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட சிரேஷ்ட விரிவுரையாளருமான வைத்தியகலாநிதி எஸ்.ரவிராஜ் அவர்களும் சுவிற்ஸர்லாந்தில் இயங்கும் சுவிஸ் - இலங்கை வர்த்தகக் கவுன்ஸிலுடன் மேற் கொண்ட பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளுக்கு இணங்க நான்கு தளங்களைக் கொண்ட புதிய இருதய சிகிச்சை மற்றும் இருதய நெஞ்சறை சத்திரசிகிச்சைப் பிரிவை சுவிஸ் - இலங்கை வர்த்தக கவுன்ஸிலின் நன்கொடை 520 மில்லியன், சுகாதார அமைச்சின் நிதியிலிருந்து ரூபா 205 மில்லியன் (மொத்த மதிப்பீடு ரூபா 725 மில்லியன்) உடன் நிர்மாணம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் புதிய பிரிவுக்குரிய வைத்திய உபகரணங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வடமாகாண மக்களின் நன்மை கருதி யாழ். போதனா வைத்தியசாலையின் புதிய இருதய சிகிச்சை மற்றும் இருதய நெஞ்சறை சிகிச்சைப் பிரிவை அமைப்பதற்கு சுவிஸ் - இலங்கை வர்த்தக கவுன்ஸின் பொதுச் செயலாளர் திரு. பிரெய்ன் பஸ்நாயக்க மற்றும் பொருளாளர் திரு.சுந்தரலிங்கம் ராஜ்குமார் ஆகியோர் அயராது அளப்பரிய பணியாற்றி பெருமை சேர்த்துள்ளார்கள்.

இத்திட்டத்துக்குரிய புரிந்துணர்வு ஒப்பந்தம் சுகாதார அமைச்சருக்கும் சுவிஸ் - இலங்கை வர்த்தக கவுன்ஸிலுக்கும் இடையில் கடந்த 24 ஆம் திகதி ஒக்ரோபர் மாதம் 2013 அன்று கைச்சாத்திடப்பட்டது. சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியகலாநிதி வை.டி.நிஹால் ஜெயதிலக்க அவர்களும் சுவிஸ் - இலங்கை வர்த்தக கவுன்ஸின் பொருளாளர் திரு.சுந்தரலிங்கம் ராஜ்குமார் அவர்களும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தனர். இந்த சிறப்பான நிகழ்வின் மூலம் யாழ். போதனா வைத்தியசாலை தன் வளர்ச்சியில் மேலும் ஒரு படி உயர்ந்து நிற்கின்றது.

வடமாகாண வைத்தியத்துறையின் வளர்ச்சிக்கு தொடர்ந்தும் அளப்பெரும் பணியாற்றி வரும் சுகாதார அமைச்சர் கௌரவ மைத்திரிபால சிரிசேன அவர்களுக்கும் சுகாதார அமைச்சு செயலாளர் வைத்தியகலாநிதி வை.டி.நிஹால் ஜெயதிலக்க அவர்களுக்கும் சுகாதார அமைச்சு உதவிச் செயலாளர் திரு. மீரு அவர்களுக்கும் சுகாதார அமைச்சு திட்டப் பணிப்பாளர் திரு. வசந்த ஜெயவர்த்தன அவர்களுக்கும் இந்தத் திட்டத்தினை செயற்படுத்தி அமுல்படுத்தியமைக்கு வடமாகாண மக்களின் நன்றிகள் உரித்தாகுகின்றன.

மேலும் இன்று செயலுருவாகி இருக்கும் இந்தத் திட்டத்துக்கான ஆரம்ப வடிவமைப்பு, செயலாக்க ஆய்வு ஆகிய விடயங்களில் பொது நலத்துடன் முன்னின்று பொறுப்புடன் செயற்பட்ட யாழ். போதனா வைத்தியசாலை இருதய சிகிச்சை நிபுணர்களான வைத்தியகலாநிதி பூ.லக்ஸ்மன் அவர்களுக்கும் வைத்திய கலாநிதி எம்.குருபரன் அவர்களுக்கும் மற்றும் கண்டி போதனா வைத்தியசாலை இருதய சத்திரசிகிச்சை நிபுணரான வைத்தியகலாநிதி கு.ஞானகாந்தன் அவர்களுக்கும் வட மாகாண மக்கள் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளார்கள்.

(சி-13454)

**யாழ். போதனா வைத்தியசாலை சமூகம்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மருதமுனை அல்-ஹரமைன் பாலர் பாடசாலையில் வருடாந்த விளையாட்டு விழா ஞாயிற்றுக்கிழமை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போது, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் சிறுமி ஒருவருக்கு பரிசு வழங்கினார்.

# கல்முனை முதல்வருக்கு வியாழன் வரை அவகாசம்

## அதுவரை பொறுத்திருப்போம் என்கிறார் ரவூப் ஹக்கீம்



கல்முனை.ஒக்.29

கல்முனை முதல்வர் பதவியிலிருந்து விலகுவது தொடர்பில் எதிர்வரும் வியாழக்கிழமை வரை சிராஸ் மீராசாஹிப்புக்கு காலக்கெடு வழங் கப்பட்டுள்ளது என்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தனது பதவி விலகல் குறித்து எதிர் வரும் வியாழக்கிழமைக்கு முன்னர் தான் பதில் வழங்குவதாக என்னிடம் அவர் உறுதியளித்துள்ளார். அது வரை பொறுத்திருப்போம் என்று அமைச்சர் ஹக்கீம் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர் பீட கூட்டம் சனிக்கிழமை இரவு கட்சி தலைமையகமான தாருஸ்ஸலாமில் இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு கூறினார்.

கல்முனை முதல்வர் சர்ச்சை தொடர்பில் ஊடகங்களில் தற்போது செய்திகள் வெளிவந்த வண்ணமுள்ளன.

இதுதொடர்பில் கட்சியின் நிலைப்பாடு என்ன என்று கலீல் மௌலவி கட்சி தலைவரிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை என்னைச் சந்தித்த கல்முனை முதல்வர் சிராஸ் மீராசாஹிப் எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் இறுதி முடிவை அறிவிப்பதாகத் தெரிவித்தார் என்று கட்சி தலைவர் ஹக்கீம் பதிலளித்தார்.

இதற்கு முன்னர் மாநகர சபை அமர்வை கூட்ட வேண்டியுள்ளது. பதவி விலகல் குறித்து குடும்ப உறுப்பினர்கள் மற்றும் ஆதரவாளர்களுடன் கலந்துரையாட வேண்டியுள்ளது என்று கல்முனை முதல்வர் என்னிடம் தெரிவித்தார்.

எனினும், அவர் எனக்கு வழங்கிய உறுதிமொழிக்கும் தற்போது இடம்பெறும் நிகழ்வுகளுக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. எனினும் கட்சியின் தீர்மானத்தில் எந்த மாற்றமுமில்லை.

எதிர்வரும் 31 ஆம் திகதிக்குப் பின்னரே கட்சியின் அடுத்த கட்ட நடவடிக்கை குறித்து அறிவிக்கப்படும்- என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## கருணாவுக்கு அழைப்பில்லை; கண்டித்து மக்கள் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு.ஒக்.29


மட்டக்களப்பு, வலையிறவுப் பாலத்தின் திறப்பு விழா வைபவத்துக்கு மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் முரளிதரன் அழைக்கப்படாததைக் கண்டித்து நேற்று திங்கட்கிழமை பொதுமக்கள் சிலர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆசிய அபிவிருத்தி வங்கி நிதியுதவியுடன் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் வீதி அபிவிருத்தி திணைக்களத்தினால் நிர்மாணிக்கப்பட்ட வலையிறவுப் பாலம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

**பாலத்தின் திறப்பு விழா நிகழ்வுக்கு பிரதி அமைச்சர் அழைக் கப்படவில்லை.**

இந்த நிலையில் பாலத்தின் திறப்பு விழா நிகழ்வுக்கு பிரதி அமைச்சர் அழைக்கப்படவில்லை என்று கூறியே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. (ச)

## வலையிறவுப் பாலம் திறப்பு



மட்டக்களப்பு.ஒக்.29

மட்டக்களப்பு, வலையிறவுப் பாலம் நேற்று திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் வீதி அபிவிருத்தி திணைக்களத்தால் நிர்மாணிக்கப்பட்ட வலையிறவுப் பாலத்தை உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஏ.எல். எம்.அதாவுல்லாவும் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத்தும் இணைந்து திறந்து வைத்துள்ளனர்.

108 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இந்த வலையிறவுப் பாலமே படுவான்கரையையும் மட்டக்களப்பையும் இணைக்கும் பிரதான பாலம் ஆகும்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண அமைச்சர்களான எம். எஸ்.உதுமாலெவ்வை, ஹாபீஸ் நசீர் அகமட், விமலவீர திஸநாயக்க, கிழக்கு மாகாணசபை உறுப்பினர் சிவநேசத்துரை சந்திரகாந்தன், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான வதிவிடப் பணிப்பாளர் றிடோயே ஒசிலுவன், மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் உட்பட பலர் கலந்துகொண்டனர்.(ச)

## கல்முனை மாநகர முதல்வரை சந்தித்தனர் ஆதரவாளர்கள்




கல்முனை,ஒக்.29

கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிப்பின் ஆதரவாளர்கள் ஞாயிற்றுக்கிழமை அவரை அவரது இல்லத்தில் சந்தித்து கல்முனை மாநகர முதல்வர் விவகாரம் குறித்து கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் ஆதரவாளர்கள் மக்கள் சந்திப்பை நடத்தி மாநகர முதல்வர் சர்ச்சை குறித்து பொது மக்களின் கருத் துக்களைக் கேட்டுச் செயற்படுமாறு முதல்வர் சிராஸிடம் வேண்டிக் கொண்டனர்.

மிக விரைவில் மக்கள் சந்திப்பு நடத்தி அவர்களின் கருத்துக்களை உள் வாங்கி அதற்கேற்ப செயற்படு வேன் என்று முதல்வர் சிராஸ் தெரிவித்தார். (ச)

## மாநகர முதல்வர் விவகாரம் ஹக்கீமுடன் கலந்துரையாடல்

கல்முனை மாநகர சபை முதல்வர் பதவி விலகல் தொடர்பாக எழுந்துள்ள இழுபறி நிலை நீடித்து வரும் நிலையில், சாய்ந்த மருது ஜும் ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினர் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமை நேரில் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

கல்முனை மாநகர சபை முதல்வரான முஹம்மட் சிராஸ் மீராசாஹிப் முதல்வர் பதவியிலிருந்து விலக வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைமை கூறியுள்ளது.

அதற்கமைய சுழற்சி முறை இணக்கப்பாடு என்ற ஒப்பந்த அடிப்படையில் முதல்வர் பதவியில் இருவருடங்களைப் பூர்த்தி செய்த முஹமட் சிராஸ் மீராசாஹிப் முதல்வர் பதவியில் இருந்து விலகி பிரதி முதல்வர் சட்டத்தரணி நிஸாம் காரியப்பருக்கு முதல்வர் பதவியை வழங்க வழிவிட வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப்பீடம் வலியுறுத்தியுள்ளது. முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் இந்த உத்தரவு கல்முனை மாநகர சபைப் பிரிவில் கொந்தளிப்பையும், சர்ச்சையையும் ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக கல்முனை மாநகர சபைப் பிரிவில் கூடிய வாக்காளர்களைக் கொண்ட சாய்ந்த மருது பிரதேச மக்கள், தலைவர் ஹக்கீமின் உத்தரவு தொடர்பில் விசனங்களையும் கண்டனங்களையும் தெரிவித்து வருகின்றனர்.

முதல்வர் முஹம்மட் சிராஸ் மீராசாஹிப் தொடர்ந்து நான்கு வருடங்களுக்கும் முதல்வராகத் தன் பணியைத் தொடர வேண்டும். முதல்வர் பதவியிலிருந்து விலகக் கூடாது என்று பெரும்பாலானோர் முதல்வர் சிராஸுக்கு அழுத்தம் கொடுத்தும் வருகின்றனர். வாக்களித்த மக்களினதும் பிரதேச முக்கியஸ்தர்களதும் தீர்மானமும் கருத்தும் தான் இந்த விடயத்தில் எனது முடிவு என்று முதல்வர் சிராஸ் உறுதியான நிலைப்பாட்டை எடுத்து பதவி விலகப் போவதில்லை என்ற கருத்தையும் வெளிப்படுத்தியுள்ளார்.

இதனால் முதல்வர் பதவி தொடர்பில் கல்முனைப் பிராந்தியம் பெரும் கொந்தளிப்புடனும், பரபரப்புடனும் திகழ்வதுடன் இழுபறி நிலையும் தொடர்ந்து வருகின்றது.

இந்த நிலையில் சாய்ந்த மருது ஜும் ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை இந்த விடயம் குறித்து ரவூப் ஹக்கீமை நேரில் சந்தித்துக் கலந்துரையாடி சுமூக நிலைக்கான முயற்சியை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது. (ச-30)


## தேங்காய் விலை அதிகரிப்பு

உள்நாட்டுச் சந்தையில் தேங்காயின் விலை அதிகரித்துள்ளமையால் அது சார் உற்பத்திகளின் விலையும் அதிகரித்துள்ளது. இதன் பிரகாரம் சந்தையில் ஒரு போத்தல் தேங்காய் எண்ணெய்யின் விலை 200 ரூபாவையும் தாண்டியுள்ளது.

தேங்காய் உற்பத்தியின் வீழ்ச்சியே இதற்கு பிரதான காரணமாகும் என்று தேங்காய் எண்ணெய் உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் காரணமாகவும் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்று ஆலை உரிமையாளர்கள் கூறியுள்ளனர். இதேவேளை, உள்நாட்டு உற்பத்தி மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால் வெளிநாடுகளில் இருந்து தேங்காய் எண்ணெய்யை இறக்கு மதி செய்ய வேண்டி ஏற்படுகிறது என்று தெங்கு ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தேங்காய் எண்ணெய்யை கலப்படம் செய்து விற்பனை செய்யும் ஒரு நிலைமையும் உருவாகியுள்ளது. இதன் காரணமாக புறக்கோட்டையில் நுகர்வோர் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் நேற்றுமுன்தினம் தேங்காய் எண்ணெய்யின் தரம் தொடர்பில் ஆராயும் நடவடிக்கையிலும் ஈடுபட்டனர். (ச)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று

# தொண்டுப் பணியாளர்கள் பணிப் புறக்கணிப்பு போர்

## நிரந்தர நியமனம் வழங்க வேண்டும் எனக் கோரி



யாழ்ப்பாணம், ஒக். 29

யாழ்.போதனா வைத்திய சாலையில் பணிபுரியும் தொண் டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி நேற்றுப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். வைத்தியசாலையின் புதிய கட்டடத் தொகுதிக்கு முன் கூடிய இவர்கள் மதியம் வரை போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதன் போது மூன்று வருடங்களுக்கு மேலாக வைத்திய சாலையில் கடிமான பணிகளைச் செய்து வருகின்றோம். தம்மை சிற்றூழியராக இணைக்கும் போது தரம் 8 வரை படித்திருந்தால் போதும் என்று கூறியிருந்தனர். ஆனால் தற்போது ஜீ.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் 2 சி, 4 எஸ் இருந்தால் தான் நியமனம் வழங்க முடியும் என்று கூறுகின்றனர். இதனை முன்னரே கூறியிருந்தால் நாம் எமது நிலைக்கேற்ப வேறு வேலைகளைச் செய்திருப்போம். ஆனால் வருடக்கணக்கில் வேலை வாங்கி விட்டு தற்போது எம்மை விலக்கிவிட வைத்தியசாலை நிர்வாகம் முடிவுசெய்துள்ளது.

வைத்தியசாலையில் 5 மாடிக் கட்டடத்துக்கு லிப்ற் பொருத்தும் வரை நோயாளர்களை காவுதடியில் கைத்தாங்கலாக 5 ஆம் மாடி வரை ஏற்றுவதும் இறக்குவதுமாக இருந்தோம்.

ஒரு நாளைக்கு 175 ரூபா மாத்திரமே எமக்கு கூலியாகத் தரப்படுகிறது. பயணச் செலவுக்கும் உணவுச் செலவுக்குக் கூட இந்த நாள் கூலி போதாது. எத்தனையோ நாள் பசியுடன் பணி புரிந்திருக்கிறோம். தமக்கு நிரந்தர நியமனம் தருவார்கள் என்ற நம்பிக்கையிலேயே தொடர்ந்து பணியாற்றுகிறோம்.

இந்த நிலையில் தமக்கு முன்னுரிமை அளிக்காது வைத்திய சாலையுடன் தொடர்புபட்டிருக்காத-பலருக்கு கடந்த சனிக்கிழமை நேர்முகத் தேர்வும் நடத்தப்பட்டுள்ளது. எனவே தமக்கு அனுபவம் மற்றும் முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்த பின்னரே ஏனையவர்களுக்கு நியமனம் வழங்க வேண்டும். தவறின் தொடர்ந்து போராடுவோம் என்று தொண்டர்கள் தெரிவித்தனர். (ஐ-4)

# படகுகள் எரிக்கப்பட்டது உங்கள் அனுமதியுடனா?

## *இராணுவத்தினரிடம் கேட்டார் மாகாண சபை உறுப்பினர்*

யாழ்ப்பாணம், ஒக். 29

உங்கள் அனுமதியுடனா எங்கள் மீனவர்களின் படகுகள் எரிக்கப்பட்டன என்று தண்ணீமுறிப்பில் அமைக்கப்பட்டுள்ள இராணுவச் சோதனைச் சாவடியிலுள்ள இராணுவத்தினரைப் பார்த்துக் கேள்வியெழுப்பினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முல்லைத்தீவு மாவட்ட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன்.

முல்லைத்தீவு தண்ணீமுறிப்பில் தமிழ் மீனவர்களின் 3 படகுகள் கடந்த 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இனந்தெரியாதோரால் எரித்து நாசமாக்கப்பட்டிருந்தன.

இது தொடர்பில் சம்பவ இடத்துக்குச் சென்ற மாகாண சபை உறுப்பினர், பாதிக்கப்பட்ட மீனவர்களுடன் கலந்துரையாடினார். அத்துடன் இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிவாரணம் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

தென்னிலங்கையிலிருந்து வந்த மீனவர்களே இந்த நாசகாரச் செயலைச் செய்ததாக பாதிக்கப்பட்டவர்கள் மாகாண சபை உறுப்பினரிடம் தெரிவித்தனர்.



இதனையடுத்து தென்னிலங்கை மீனவர்களின் பகுதிக்கு இராணுவக் காவலரணைத் தாண்டியே செல்ல வேண்டியிருந்தது. அங்கு சென்ற மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் காவலரணிலிருந்த இராணுவத்தினரைப் பார்த்து, உங்கள் காவலரணைத் தாண்டி அவர்கள் இங்கே எப்படி வந்து எரியூட்டியிருக்க முடியும்? நீங்கள் தான் அவர்களை அனுமதித்தீர்களா? என்று கேள்வியெழுப்பினார்.

பின்னர் தென்னிலங்கை மீனவர்கள் தங்கியுள்ள பகுதிக்குச் சென்ற அவர், படகுகளை எரித்ததாக சந்தேகிக்கப்படும் மீனவரைக் கடுமையாக எச்சரித்தார். அத்துடன் அங்கு தடை செய்யப்பட்ட வலைகளை வைத்திருந்த மீனவர்களையும் கண்டித்தார். (து-5)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### படையினரின்

தழிக்கப்பட்டு வருகின்றன.

இதனை நேரில் சென்று பார்வையிடுவதற்காகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், மாகாணசபை உறுப்பினர்களான த.சித்தார்த்தன், த.சிவாஜிலிங்கம், பா.கஜதீபன், பிரதேச சபைத் தவிசாளர் தி.பிரகாஷ், உபதவிசாளர் ச.சஜீவன், பிரதேச சபை உறுப்பினர் சி.ஹரிகரன், நகர சபை உறுப்பினர் நா.கிஷோர் ஆகியோர் சென்றிருந்தனர்.

இவர்கள் உயர்பாதுகாப்பு வலயத்தை அண்மித்த போது, இராணுவ முகாமிலிருந்து வந்த 15 இராணுவ சிப்பாய்கள், பிரிகேட் கொமாண்டர் ஆகியோர் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் இருந்தவாறே மக்கள் பிரதிநிதிகளுடன் தர்க்கப்பட்டனர். வாய்த்தர்க்கம் முற்றிய நிலையில் உயர் பாதுகாப்பு வலய வேலியின் கதவைத்திறந்துகொண்டு வெளியே வந்தனர் இராணுவத்தினர்.

இதன்போது ஏன் இந்தப் பகுதியிலுள்ள வீடுகள் இடிக்கின்றீர்கள்? என்று நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவனும் ஏனைய மக்கள் பிரதிநிதிகளும் அவர்களிடம் கேள்வி எழுப்பினர். இங்கு இராணுவக் குடியிருப்புக்கள் நிறுவப்பட உள்ளதுடன் எங்களது குடும்பங்கள் குடியமர்த்தப்படப் போகின்றன என்று தன்னை உயர் பாதுகாப்பு வலயத்துக் குப் பொறுப்பான பிரிகேடியர் என்று அறிமுகப்படுத்திக் கொண்ட இராணுவ அதிகாரி கூறினார் என நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் தெரிவித்தார்.

குறித்த பிரிகேடியரிடம் அவரது பெயரை நாடாளுமன்ற உறுப்பினர் பல முறை கேட்டபோதும் அதனைத் தெரிவிக்கமறுத்ததுடன் நாடாளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமையை மீறும் வகையில் நடந்துகொண்டார். இந்தப் பிரதேசங்கள் மக்கள் பாவனைக்கு படிப்படியாக விடப்படும் என்று அரசு அறிவித்துள்ளதே என அந்த அதிகாரியிடம் நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தபோதும் அதைப் பற்றி தனக்குத் தெரியாதெனவும் இந்தப் பகுதி அரசால் வர்த்தமானி மூலம் சுவீகரிக்கப்பட்டுள்ளதாகவும் கடும் தொனியில் அவர் கூறினார்.

உங்கள் பகுதியில் உங்கள் வீடுகளை இடித்து அழிப்பதற்கு நீங்கள் அனுமதிப்பீர்களா? என்று அவரிடம் கேள்வி எழுப்பியதற்கு எனக்குரிய அதிகாரத்தைப் பயன்படுத்தி நான் எதுவும் செய்வேன் என்றும் மிரட்டல் பாணியில் பதிலளித்தார் குறித்த பிரிகேடியர்.

மக்கள் பிரநிதிகள், இராணுவத்தினருடன் நீண்ட நேரம் கடுமையாக வாதம் செய்த பின்னர் உரிய இடத்தில் பேசுவாதாக தெரிவித்து அங்கிருந்து வெளியேறியுள்ளனர். (5-21)

### காணாமற்போ

வைக்க உள்ளன.

1980 முதல் 1990 வரையில் நடந்த ஜே.வி.பியின் ஆயுத கிளர்ச்சியின் போது காணாமற் போனவர்கள் மற்றும் இலங்கையில் நடைபெற்ற தீவிர போரின் போது காணாமற்போன தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்கள் தொடர்பான விடயங்கள் இந்த திரைப் படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக லீனா மணிமேகலை தெரிவித்துள்ளார். (ஐ)

### 4 அம்சக்

அவர் அழைப்பு விடுத்தார்.

ஐ.தே.க. தலைமையகமான சிறி கொத்தாவில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

கோட்டை ரயில் நிலையத்தின் முன்பாக மாலை 3 மணிக்கு ஆர்ப் பாட்டம் ஆரம்பமாகும் என்று தெரி விக்கப்பட்டுள்ளது.

ரத்துபஸ்வெல மக்களின் குடி தண்ணீர் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணவேண்டும், 17ஆவது திருத்தச் சட்டத்தை அரசு மீள் அமுலாக்கம் செய்ய வேண்டும் ஆகிய கோரிக்கைகளும் முன்வைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

### ரயிலில்

தெரி விக்கப்படுகிறது.

சம்பவத்தில் முறிகண்டிப் பகுதியைச் சேர்ந்த பிச்சைமுத்து கணேஸ் (வயது - 65) என்பவரே உயிரிழந்து உள்ளார்.

நேற்று அதிகாலை ரோந்து சென்ற இராணுவத்தினர் குறித்த சடலத்தைக் கண்டு பொலிஸாருக்கு தகவல் கொடுத்ததையடுத்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்ட சடலம் உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-6)

### படங்கள்

இராணுவத்தினரால் இடித்தழிக்கப்பட்டு வருகின்றன. இதனையடுத்து குறித்த பகுதிக்குத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபைத் தவிசாளர்கள் எனப் பலரும் நேற்றுக் காலை சென்றனர்.

இந்த விடயம் தொடர்பில் செய்தி சேகரிப்பதற்காக உள்ளூர் ஊடகவியலாளர்கள் 5 பேர் களத்துக்குச் சென்றிருந்தனர்.

இராணுவத்தினர் புல்டோசர்களால் வீடுகளை இடித்துத் தரைமட்டமாக்கிக் கொண்டிருப்பதை ஊடகவியலாளர்கள் ஒளிப்படம் எடுத்தனர். இதனை அவதானித்த இரா ணுவத்தினர் உயர்பாதுகாப்பு வலய பகுதிக்குள் இருந்து வெளியே ஓடி வந்து ஊடகவி யலாளர் தங்கள் ஒளிப்படக் கருவிகள் ஒலிப்பதிவுக்கருவிகள் என்பவற்றைப் பறித்து அதிலிருந்து சகலவற்றையும் அழித்தனர்.

அத்துடன், ஏதாவது ஒளிப்படம் ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டால் அதன்பின் னர் நடப்பது வேறு எனவும் இராணுவ அதிகாரி ஒருவர் ஊடகவியலாளர் களுக்கு அச்சுறுத்தல் விடுத்தார்.

இராணுவத்தினரின் இந்த நடவடிக்கைக்கு ஊடக அமைப்புக்கள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இதேவேளை,

இராணுவத்திற்கென்று ஒதுக்கப்பட்டுள்ள இடங்களில் இடம் பெறுகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகளை ஒளிப்படம் எடுப்பது தவறு. ஆகவே ஊடகவிய லாளர்களிடம் படங்களை அழித்து விடுமாறுதான் இராணுவம் கோரியதாக இராணுவப் பேச்சாளர் ருவான் வணிக சூரிய பி.பி.சி செய்திச் சேவைக்கு தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், பலாத்காரமாகப் படங்களை அழிக்குமாறு இராணுவத்தினர் தெரிவிக்கவில்லை. இராணுவத்திற் கென வழங்கப்பட்டுள்ள இடத்தில் இடம்பெறுகின்ற அபிவிருத்திச் செயற்பாடுகளைப் படம் பிடிப்பது இராணுவப் பாதுகாப்புக்கு எதிரானது எனவே இங்கு படம் பிடிக்க வேண்டாம் என்று எடுத்துக் கூறியதாகவும் அவர் குறிப்பிட்டார்.

'எடுத்த படங்களை அழித்து விடுமாறுதான் கூறப்பட்டது. எடுக்கப்பட்ட படங்களைப் பலாத்காரமாக எவரும் அழிக்கவில்லை. அவ்வாறு கூறுவது பொய்ப்பிரசாரமாகும். இது எங்களுக்குக் கவலையளிக்கின்றது. முன்னர் அந்த இடங்கள் பொது மக்களுக்குச் சொந்தமானதாக இருந்திருக்கலாம். ஆனால் அந்த இடங்கள் பலாலி இராணுவ முகாமுக்கென இப்போது வழங்கப்பட்டிருக்கின்றது. எனவே இராணுவ முகாம் பகுதியில் இடம் பெறுகின்ற வேலைகளைப் படம் எடுப்பதற்கு எவருக்கும் அதிகாரமில்லை' என்றார் இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய. (து-5-21)

### வடக்கு கன்னி

வரன் தனது கருத்தை திரும்பப்பெற வேண்டும் என்றும் இது தொடர்பில் அரசு மௌனம் காப்பதை கண்டித்தும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வசந்த பண்டார மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாண சபையின் கன்னி அமர்வில் முதலமைச்சர் விக்னேஸ்வரன் உச்சக் கட்டமாக தமிழ் இனவாத நஞ்சைக் கக்கியுள்ளார்.

வடக்கு மாகாணத்தில் சிங்கள மக்களைப் புதிதாக குடியேற்றவோ, குடியமர்த்தவோ இட மளிக்கப் போவதில்லை யென்று அவர் தெரிவித்துள்ளார்.

அப்படியென்றால் கொழும்பிலும், தென் பகுதியிலும் தமிழ் மக்களை குடியேற்ற இடமளிக்கப் போவதில்லையென்ற எதிர்ப்பு இங்கு உருவாகும். அதற்கான பொறுப்பை விக்னேஸ்வரனே ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் இனவாதிகளைப் போன்று சிங்கள இனவாதக் கும்பல்களும் இயங்குகின்றன.

எனவே விக்னேஸ்வரனின் கருத்தை மையமாக வைத்து தமிழர்களுக்கு எதிராக இனவாத மோதலைக் கொழும்பில் ஏற்படுத்தினால் என்ன நடக்கும்? அவ்வாறான தொரு நிலைமை உருவானால் அதற்கான முழுப்பொறுப்பையும் விக்னேஸ்வரனே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

சிங்கள மக்களை குடியேற்ற இடமளிக்க முடியாது என்று எப்படிக் கூற முடியும். தற்போது நாவற்குழியில் தொடர்மாடி வீட்டுத் திட்டம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதில் வீடுகளைக் கேட்டு விண்ணப்பங்களை பொதுமக்கள் தேசிய வீடமைப்பு அதிகார சபைக்கு அனுப்பி வைப்பார்கள். அந்த விண்ணப்பங்கள் தமிழர்கள், சிங்களவர்கள் , முஸ்லிம்கள் என்று இன ரீதியாகப் பிரித்து ஆராயப்பட மாட்டாது.

எனவே இன வாதத்தை இன மோதல்களை ஏற்படுத்தக் கூடிய கருத்துக்களை வெளியிடலாகாது. எனவே தனது கருத்தை விக்னேஸ்வரன் திரும்பப் பெற வேண்டும். இல்லாவிட்டால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அவரே தான் பொறுப்பு- என்றார். (5)

### வடக்கு

ஆளுநரை நியமிக்க வேண்டும் என வடமாகாண முதல்வர் தற்போது முன்வைத்துள்ள இந்தக் கோரிக் கையை நாம் ஆரம்பம் முதலே முன் வைத்து வருகிறோம்.

வடக்கு அரச நிர்வாகங்களில் தமிழ் தெரிந்தவர்கள் இணைத்துக்கொள்ளப் படவேண்டும் எனவடக்குமுதல்வர் கோரிக்கை விடுத்துள்ளார். இது வடக்கு மக்களின் உரிமை. எனவே அதற்கு இனவாதச் சாயம் பூச முடியாது " என்றும் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

### மாநாட்டை

வித்தார்.

இலங்கை அரசுக்கு கனடா நேரடியாக நிதியுதவிகளை வழங்குவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

போர் மற்றும் போருக்கு பின்னரான மனித உரிமை மீறல்கள் தொடர் பில் இலங்கை அரசு உரிய முனைப்பு களை மேற்கொள்ள தவறியமை குறித்து கனடா தொடர்ந்தும் குற்றம் சுமத்தி வருகிறது.

அதன் ஒரு கட்டமாக கொழும்பில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடை பெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை புறக்கணிக்கும் முடிவை யும் அந்த நாடு எடுத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி வலயத்தின் உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.29

வடமராட்சி கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான 14 வயது, 16 வயது பிரிவு ஆண்களுக்கான உதைபந் தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் எதிர்வரும் 5 ஆம் திகதி பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம், இமையாணன் அ.த.க. பாடசாலை மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)

## சமநிலையில் முடிவடைந்த ஆட்டம்

திருகோணமலை,ஒக்.29

திருகோணமலை சென். ஜோசப் கல்லூரிக்கும், கிண்ணியா மத்திய கல்லூரிக்கும் இடையில் முதல் முறையாக நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டி சமநிலையில் முடிவடைந்தது.

கடந்த சனிக்கிழமை திருகோணமலை ஏகாம்பரம் மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் திருகோணமலை சென்.ஜோசப் கல்லூரி அணியை எதிர்த்து கிண்ணியா மத்திய கல்லூரி அணி மோதிக்கொண்டது.

இதில் இரு அணிகளும் ஆட்ட நேர முடிவில் தலா ஒரு கோலைப் பெற்றதனால். ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. (த-23)

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம், ஒக்.29

வவுனியா உதைபந்தாட்ட லீக்கினால் பண்டார வன்னியன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத் தப்படும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட் டத்தில் இளம் தென்றல் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து வட தாரகை விளையாட்டுக் கழகம் மோதும். (த-23)

* * *

ஊர்காவற்றுறை சென். அன்ரனீஸ் கல்லூரி யாழ். மத்திய கல்லூரி அணிகளுக்கு இடையிலான நட்பு ரீதியான உதைபந்தாட்ட போட்டி இன்று செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறை சென்.அன்ரனீஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (த-23)

# அரச ஊழியர்கள் வலைப்பந்தாட்டம் தேசிய சம்பியனானது யாழ்.அணி



வலி.வடக்கு, ஒக்.29

அரச ஊழியர் விளையாட்டுச் சங்கத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட ஆண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்ட அரச ஊழியர்கள் வலைப் பந்தாட்ட அணி வெற்றி பெற்று தேசிய சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு ரொறிங்டன் விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற இறுதிப் போட்டியில் கொழும்பு பொலிஸ் அணியும் யாழ்ப்பாணம் அரச ஊழியர் அணியும் மோதிக் கொண்டன.

ஆரம்பத்தில் இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொள்ளும் என எதிர் பார்க்கப்பட்ட போதும் யாழ். மாவட்ட அரச ஊழியர் அணியின் கைகளே மேலோங்கிக் காணப்பட்டன.


முதல் பாதி ஆட்டத்தில் யாழ். மாவட்ட அரச ஊழியர் அணி 9:5 புள்ளிகள் என முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் பொலிஸ் அணிக்கு மைதான ஆதரவு கிடைத்தது. ஆயினும் யாழ். மாவட்ட அரச அணி வீரர்கள் மனம் சலிக்காமல் திடமான நிலையில் விளையாடியதன் மூலம் மீண்டும் முன்னிலை பெற்று 8:5 புள்ளிகள் என்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் யாழ். மாவட்ட அரச ஊழியர் அணி 17:8 புள்ளிகள் என்ற அடிப்படையில் கொழும்பு பொலிஸ் அணியை வெற்றி பெற்று தேசிய சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

(த-86-422)

# வென்றது ஜொனியன்ஸ்



யாழ்ப்பாணம், ஒக்.29

நியூஸ்ரார் பிறிமியர் லீக் வெற்றிக்கிண்ணத்துக்காக நியூஸ்ரார் விளையாட்டுக் கழகம் 2 ஆவது ஆண்டாக நடத்திவரும் 20 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் 2 ஆவது சுற்றில் முதலாவது போட்டியில் யாழ். ஜொனியன்ஸ் அணி, திருநெல்வேலி கிரிக்கெட் அணியை 4 இலக்குகளால் வெற்றி கொண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய திருநெல்வேலி கிரிக்கெட் அணி 19.1 பந்துப் பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 111 ஓட்டங்களைப் பெற்றது.

ரி.பிரபு 28 ஓட்டங்களையும், சுரேஸ் 23 ஓட்டங்களையும், விதுன் 19 ஓட்டங்களையும் பெற்றனர். கபில்ராஜ் 03 இலக்குகளையும், யதுர்ஸன் 04 இலக்குகளையும், அகிலன்,லவேந்திரா தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ்.ஜொனியன்ஸ் அணி 19.3 பந்துப் பரிமாற்றங்களில் 6 இலக்குகளை இழந்து 112 ஓட்டங்களைப் பெற்றனர்.

யதுர்ஸன் 28 ஓட்டங்களையும், விதுஸன் 23 ஓட்டங்களையும் , காண்டீபன் 19 ஓட்டங்களையும், அன்புஜன் 16 ஓட்டங்களையும் பெற்றனர்.

திருநெல்வேலி கிரிக்கெட் அணி சார்பில் பிரபு 02 இலக்குகளையும், கோபி, சுரேன், சுரேஸ் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியின் மூலம் யாழ்.ஜொனியன்ஸ் அணி 4.12 புள்ளிகளையும், திருநெல்வேலி கிரிக்கட் அணி 1.71 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன.

(த)

# கலப்பு ஆட்டத்திலும் யாழ்.அணி சம்பியன்



வலி.வடக்கு, ஒக்.29

அரச ஊழியர் விளையாட்டுச் சங்கத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட ஆண்கள் பெண்களுக்கான கலப்பு வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்.மாவட்ட அரச ஊழியர்கள் கலப்பு வலைப் பந்தாட்ட அணி வெற்றி பெற்று தேசிய சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கொழும்பு ரொறிங்டன் விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்ற இறுதிப் போட்டியில் கொழும்பு பொலிஸ் கலப்பு அணியும் யாழ்ப்பாணம் அரச ஊழியர் கலப்பு அணியும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் ஆரம்பத் தில் மிகவும் இறுக்கமான நிலையில் விளையாடிய போதிலும் பொலிஸ் அணியின் ஆட்டத்தில் தொய்வு ஏற்பட்டது.

முதல் பாதி ஆட்டத்தில் யாழ். மாவட்ட அரச ஊழியர் கலப்பு அணி 10:7 புள்ளிகள் என்ற நிலையில் முன்னணி பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் மீண்டும் யாழ்.மாவட்ட அரச ஊழியர் கலப்பு அணி தனது திறமையை வெளிப் படுத்திய நிலையில் 7:5 புள்ளிகள் என்ற நிலையில் முன்னிலை பெற்றது.

ஆட்ட நிறைவில் யாழ். மாவட்ட அரச ஊழியர் கலப்பு அணி 17:12 புள்ளிகள் என்ற அடிப்படையில் கொழும்பு பொலிஸ் அணியை வெற்றி பெற்று அகில இலங்கை சம்பியனாக தெரிவு செய்யப்பட்டது. (த-86-422)

# திருமலை இறுதியாட்டத்தில் சம்பியனானது அன்ரனிஸ்



யாழ்ப்பாணம், ஒக்.29

திருகோணமலை உதைபந்தாட்ட லீக்கினால் நடத்தப்பட்ட தலைவர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியனானது.

கடந்த சனிக்கிழமை திருகோணமலை ஏகாம்பரம் மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் சென். அன்ரனீஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பற்றிமா விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் சென்.அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது.

இதில் பிரதம விருந்தினராக இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் தலைவர் றஜீத் றொட்றிக்கோ கலந்து கொண்டார். (த-23)





வவுனியா பிரதேச செயலகத்தினால் சிறுவர், முதியோர் தினத்தை முன்னிட்டு பூவரசங்குளம் மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கான முட்டி உடைத்தல், பெண்களுக்கான தேசிக்காய் கரண்டியில் வைத்துக் கொண்டு ஓடுதல் போட்டிகளில் பங்குபற்றிய முதியவர்கள். (த-23)

# விபுலானந்தன் கிண்ணத்தை தனதாக்கியது ஜொலிஸ்ரார்



யாழ்ப்பாணம், ஒக்.29

விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்தை ஜொலிஸ்ரார் வென்றது.

யாழ்.சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்திய பொன்.விபுலானந்தன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் மின்னொளியில் இடம்பெற்றது.

இறுதியாட்டத்தில் சென்றலைட்ஸ் புளூஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் மோதிக் கொண்டது.

இதில் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியினர் 42:37 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்றனர்.

ஆட்டத் தொடர் நாயகனாக ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக அணி வீரன் அனுஷன் தெரிவானார்.

(த-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஏ அணி இலகுவான வெற்றி




இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள கென்ய அணிக்கும், இலங்கை ஏ அணிக்குமிடையிலான 7 போட்டிகள் கொண்ட 20/20 தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை ஏ அணி வெற்றிபெற்றுள்ளது.
கொழும்பு கிரிக்கெட் கழக மைதானத்தில் இடம்பெற்ற இந்தப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கென்ய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.
இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய கென்ய அணி 19.4 பந்துப்பரி மாற்றங்களில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது.
முதலாவது விக்கெட்டுக்காக 4.3 ஓவர்களில் 41 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, அதன் பின்னர் அந்த வேகத்தில் துடுப்பெடுத்தாட முடியாது தடுமாறியதோடு, அதன் பின்னர் விக்கெட்டுக்களைத் தொடர்ச்சியாக இழந்திருந்தது.
அவ்வணியின் இறுதி 6 விக்கெட்டுக்களும் 35 ஓட்டங்களுக்குள் வீழ்த்தப்பட்டன. துடுப்பாட்டத்தில் கென்ய அணி சார்பாக ஸ்டீவ் ரிக்கலோ 40 பந்துகளில் 44 ஓட்டங்களையும், ஷெம் கோச்சே 16 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர்.
பந்துவீச்சில் இலங்கை ஏ அணி சார்பாக டில்ஹார லொக்குஹெட்டிகே 3.4 பந்துப் பரிமாற்றங்களில் 20 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், ரமித் ரம்புக் வெல்ல 4 பந்துப்பரிமாற்றங்களில் 23 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக் களையும், சீக்குகே பிரசன்ன, ஜீவன் மெண்டிஸ் இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். 127 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை ஏ அணி 17.3 ஓவர்களில் 4 விக் கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.
முதல் பந்துப்பரிமாற்றத்தின் முடிவில் 4 ஓட்டங்களுக்கு முதலாவது விக்கெட்டை இழந்த போதிலும், தொடர்ந்து வந்த வீரர்கள் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி இலங்கை ஏ அணியின் வெற்றியை உறுதி செய்தனர்.
துடுப்பாட்டத்தில் இலங்கை ஏ அணி சார்பாக தனுஷ்க குணதிலக 41 பந்துகளில் 37 ஓட்டங்களையும், லஹிரு திரிமன்ன 26 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 36 ஓட்டங்களையும், டினேஷ் சந்திமால் 19 பந்துகளில் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் கென்ய அணி சார்பாக ஸ்டீவ் ரிக்கலோ 4 பந்துப்பரிமாற்றங்களில் 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், நெஹேமியா ஒடியம்போ, எலிய ஒட்டியானோ இருவரும் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (த)


முதலில் துடுப்பெடுத்தாடிய கென்ய அணி 19.4 பந்துப்பரி மாற்றங்களில் சகல விக்கெட்டுக் களையும் இழந்து 125 ஓட்டங்களைப் பெற்றது.

# சம்பியன் பட்டம் வென்றார் செரீனா


துருக்கியில் நடைபெற்ற டபிள்யூ.டி.ஏ சம்பியன்ஷிப் பட்டத்தை அமெரிக்காவின் செரீனா வில்லியமஸ் வென்றார்.
துருக்கியின் இஸ்தான்புல்லில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் உலகின் முதல் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியமஸ், சீன வீராங்கனை லீ நாவை எதிர்கொண்டார். இதில் செரீனா 2-6, 6-0, 6-3 என்ற செற் கணக்கில் லீ நாவை தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றார். (த)



# ஏமாற்றம் அளித்த சச்சின்



ரஞ்சிக் கிண்ணப் போட்டியில் மும்பாய் அணிக்காக களமிறங்கிய சச்சின் 5 ஓட்டங்களில் 'கிளீன் போல்ட்' ஆகி ஏமாற்றம் அளித்தார்.
ஹரியானாவின் ரோடக்கில் நடந்த ரஞ்சிக் கிண்ணப் போட்டியில் நேற்று மும்பாய்-ஹரியானா அணிகள் மோதின.
மும்பாய் அணியில் சச்சின் டெண்டுல்கர் இடம் பெற்றிருந்தார். இவரது தனது 200ஆவது டெஸ்ட் போட்டியுடன் ஓய்வு பெற உள்ளதால், நேற்றைய ஆட்டத்தை ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்த்து இருந்தனர். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மும்பாய் அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது. இதனையடுத்து களமிறங்கிய ஹரியானா அணி 134 ஓட்டங்களுக்கு சுருண்டது.
அதிக பட்சமாக சர்மா 49 ஓட்டங்களும், கோட் 27 ஓட்டங்களும் எடுத்தனர். இதனை தொடர்ந்து விளையாடிய மும்பாய் அணியின் தொடக்க வீரர் ஜாபர் 14 ஓட்டங்களிலும், பவார் 8 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.
இதனை தொடர்ந்து களமிறங்கிய சச்சின் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவார் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் 5 ஓட்டங்கள் எடுத்த நிலையில் மோகித் சர்மா பந்தில் 'கிளீன் போல்ட்' ஆகி ஏமாற்றம் அளித்தார். (த)



# சாதனை படைத்த டிவில்லியர்ஸ்

டெஸ்ட் போட்டியில் சிறந்த விளங்கும் வீரர்களுக்கான தரவரிசை பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை டுபாயில் வெளியிட்டது. பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் அசத்திய தென்னாபிரிக்காவின் டிவில்லியர்ஸ் 909 புள்ளிகளுடன் முதலிடத்துக்கு முன்னேறினார். இதன்மூலம் 900 அல்லது அதற்கு மேல் புள்ளிகள் பெற்று முதலிடம் பிடித்த 28ஆவது வீரர் என்ற பெருமை பெற்றார்.
முதலிடத்தில் இருந்த மற்றொரு தென்னாபிரிக்க வீரர் ஹசிம் ஆம்லா, 898 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்துக்கு தள்ளப்பட்டார்.
மூன்றாவது இடத்தில் மேற்கிந்திய தீவுகளின் சந்தர் போல் உள்ளார். பாகிஸ்தானுக்கு எதிராக இரட்டைச் சதம் அடித்த தென்னாபிரிக்க அணித்தலைவர் ஸ்மித், ஏழு இடங்கள் முன்னேறி [illegible] அணித்தலைவர் மிஸ்பா, 6ஆவது இடத்தைக் கைப்பற்றினார். இந்தியாவின் புஜாரா 8ஆவது இடத்தில் இருந்து 7ஆவது இடத்துக்கு முன்னேறினார். ஒரு இடம் பின்தங்கிய இந்திய அணியின் அணித்தலைவர் டோனி, 20ஆவது இடத்தை மேற்கிந்திய தீவுகளின் கிறிஸ் கெய்லுடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.
பந்துவீச்சாளர்களுக்கான தரவரிசைப் பட்டியலில் முதல் மூன்று இடங்களில் தென்னாபிரிக்காவின் ஸ்டைன், பிலாண்டர் மற்றும் இலங்கையின் ஹெறோத் ஆகியோர் உள்ளனர்.
இந்தியாவின் அஷ்வின் 8ஆவது இடத்தை தக்கவைத்துக் கொண்டார். இரண்டு இடங்கள் முன்னேறிய மற்றொரு இந்தியச் சுழற்பந்துவீச்சாளர் பிரக்யான் ஓஜா 11ஆவது இடம் பிடித்தார்.
மேலும் மூத்த வேகப்பந்துவீச்சாளர் [illegible]ன் 16ஆவது இடத்தில் இருந்து [illegible]7ஆவது இடத்துக்குத் தள்ளப்பட்டார். (த)

# சூதாட்டச் சர்ச்சையில் இங்கிலாந்து வீரர்

சூதாட்டச் சர்ச்சையில் இங்கிலாந்து வீரர் ரவி போபரா சிக்கியுள்ளமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.
இந்த ஆண்டின் தொடக்கத்தில் நடந்த பங்களாதேஷ் பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியில், சிட்டகொங் கிங்ஸ் அணிக்காக இங்கிலாந்து சகல துறை வீரர் ரவி போபரா விளையாடினார்.
இவர் சூதாட்டத்தில் ஈடுபட்டதாகக் குற்றச்சாட்டு எழுந்தது. இதனையடுத்து இவரிடம் ஐ.சி.சி மற்றும் இங்கிலாந்து கிரிக்கெட் சபை ஊழல் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் 2 மணி நேரம் விசாரணை நடத்தியதாகவும், அவரது வங்கிக் கணக்கு, தொலை பேசிக் கட்டணப் பட்டியல் ஆகியவை ஆய்வு செய்யப்பட்டதாகவும் இங்கிலாந்து பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. இந்திய வம்சாவளியை சேர்ந்த ரவி போபரா 94 ஒருநாள் போட்டி மற்றும் 13 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக 20/20 தொடரில் முதல் குழுவில் இலங்கை

ICC WORLD
TWENTY20
Bangladesh 2014

அடுத்த ஆண்டு பங்களா தேஷில் இடம்பெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் சபையின் உலக 20/20 தொடரில் இலங்கை அணி குழு 1 இல் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. இப்போட்டிகள் மார்ச் 16ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளன.

16 அணிகள் பங்குகொள்ளவுள்ள இந்தத் தொடரில் 8 அணிகள் நேரடியாக சுப்பர் 10 சுற்றுக்குத் தெரிவாகவுள்ளன. 2012ஆம் ஆண்டு ஒக்ரோபர் 8ஆம் திகதி உலக 20/20 தரப்படுத்தலில் முதல் 8 இடங்களைப் பெற்ற அணி களே இவ்வாறு நேரடியாகத் தகுதி பெற்றுள்ளன. மிகுதி 2 இடங்களுக்கு தகுதிகாண் போட்டிகள் போன்று இடம் பெறவுள்ள முதற்சுற்றுப் போட் டிகளிலிருந்து அணிகள் தகுதி பெறவுள்ளன.

போட்டிகளை நடத்தும் பங்களாதேஷ், சிம்பாப்வே அணிகளோடு மேலும் 6 அணிகள் முதற்சுற்றில் போட்டியிடவுள்ளன. 8 அணிகளும் 4 அணிகள் கொண்ட இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டுப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. இவற்றில் முதலிடம் பெறும் அணிகள் சுப்பர் 10 சுற்றிற்குத் தெரிவாகும்.

இலங்கை அணியானது இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, முதற்சுற்றுப் போட்டிகளில் தகுதிபெற்ற ஓர் அணி ஆகியவற்றோடு குழு 1 இல் சேர்க்கப்பட்டுள்ளது. குழு 2 இல் மேற்கிந்தியத் தீவுகள், இந்தியா, பாகிஸ்தான், ஆஸ்திரேலியா ஆகியவற்றோடு, முதற்சுற்றுப் போட்டிகளில் தகுதிபெற்ற ஓர் அணி ஆகியன இடம்பெற்றுள்ளன.


இந்தப் போட்டிகள் மார்ச் 16ஆம் திகதியே ஆரம்பிக்கவுள்ள போதிலும், மார்ச் 21ஆம் திகதியே சுப்பர் 10 போட்டிகள் ஆரம்பிக்கவுள்ளன. இலங்கை அணி தனது முதலாவது போட்டியில் மார்ச் 24 ஆம் திகதி முதற்சுற்றுப் போட்டிகளில் தகுதிபெற்ற அணியோடு விளையாடவுள்ளது.

இதன்போது, பெண்களுக்கான உலக 20/20 குழுக்களின் விபரங்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் குழு ஏ இல் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா, பாகிஸ்தான், அயர்லாந்து ஆகிய அணிகளும், குழு பி இல் இங்கிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய அணிகள் இடம் பெற்றுள்ளன. பெண்களுக்கான போட்டிகள் மார்ச் 23ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளன.

(கு)

## அஜ்மலுக்கு எச்சரிக்கை



விதிமுறைகளை மீறி ஒழுங்கீனமாக நடந்து கொண்ட பாகிஸ்தான் வீரர் அஜ்மலுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

டுபாயில் பாகிஸ்தான்- தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நடைபெற்றது.

இதன் மூன்றாவது நாளில் பாகிஸ்தான் சுழல் சயீத் அஜ்மல் வீசிய 162ஆவது பந்துப்பரிமாற்றத்தை, தென்னாபிரிக்க அணியின் மோர்னி மோர்கல் எதிர் கொண்டார்.

இதில் பந்தைப் பிடி எடுத்ததாக அஜ்மல் செய்த முறையீட்டை நடுவர் இயன் கவுல்ட் நிராகரித்தார். ஆனால் அடுத்த பந்திலேயே மோர்கல் யூனிஸ் கானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

நடுவர் ஆட்டமிழப்புக் கொடுத்த பிறகும் அஜ்மல் நீண்ட நேரம் வேண்டுமென்றே வெறுப்பேற்றும் வகையில் செயல்பட்டார்.

இதையடுத்து ஐ.சி.சி விதிமுறைகளை மீறி ஒழுங்கீனமாக நடந்துகொண்ட அஜ்மலை போட்டி நடுவர் டேவிட் பூன் கடுமையாக எச்சரித்தார்.

(கு)

## பார்சிலோனா அணி வெற்றி



ஸ்பெயின் பிரீமியர் லீக் உதைபந்தாட்டப் போட்டியில் பார்சிலோனா அணி 2-1 என்ற கணக்கில் றியல் மட்ரிட் அணியை தோற்கடித்தது.

பார்சிலோனாவில் நடைபெற்ற ல லீகா உதைபந்தாட்டப் போட்டியில் பார்சிலோனா, றியல் மட்ரிட் அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

பார்சிலோனா அணியில் பப்ரிக்கஸ், எக்ஸ்சாவி, மெஸ்ஸி உள்ளிட்ட வீரர்களும், றியல் மட்ரிட் அணியில் பெப்பே, கேரெத் பேலே, செர்ஜியோ ராமோஸ், கிறிஸ்ரியானோ றொனால்டோ உள்ளிட்ட நட்சத்திரங்களும் களமிறங்கினர்.

சமபலம் வாய்ந்த இரு அணிகள் மோதிய இந்தப் போட்டியில் பார்சிலோனா அணியின் இளம் வீரர் நெய்மர் 19அவது நிமிடத்தில் கோல் அடித்தார்.

78ஆவது நிமிடத்தில் பார்சிலோனா அணியின் அலெக்சிஸ் சான்ஷெஸ் இரண்டாவது கோலை அடித்தார். றியல் மேட்ரிட் அணி வீரர்களின் கோல் முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்தன.

ஆட்டத்தின் கடைசி நிமிடத்தில் றியல் மட்ரிட் அணியால் ஒரு கோல் மட்டுமே அடிக்க முடிந்தது. இதன்மூலம் பார்சிலோனா அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ல லீகா உதைபந்தாட்டத் தொடரில் பார்சிலோனா அணி 28 புள்ளிகளுடன் தொடர்ந்து முதலிடத்திலும், றியல் மட்ரிட் அணி 22 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளது. (கு)

# டெஸ்ட்டில் 100 ஆவது வெற்றியை பதிவு செய்தது தென்னாபிரிக்க அணி

டெஸ்ட் அரங்கில் 100ஆவது வெற்றியை பதிவு செய்த தென்னாபிரிக்க அணிக்கு அந்த நாட்டு கிரிக்கெட் சபையின் தலைமை அதிகாரி ஹாரூண் லார்கட் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

கடந்த 1889ஆம் ஆண்டில் போர்ட் எலிசபெத் நகரில் இங்கிலாந்துக்கு எதிரான போட்டி மூலம் தென்னாபிரிக்க அணி முதன்முதலில் டெஸ்ட் அரங்கில் காலடி வைத்தது.

இதன் பின் 1970இல் தென்னாபிரிக்க அரசின் இனவெறி கொள்கையை எதிர்த்த சர்வதேச கிரிக்கெட் சபை, சர்வதேச போட்டிகளில் விளையாட தென்னாபிரிக்காவுக்கு தடை விதித்தது.

பின்பு 1991ல் அந்த தடை நீக்கப்பட்ட மீண்டும் சர்வதேசப் போட்டிகளில் விளையாட அனுமதி வழங்கியது. இதனையடுத்து 1992 இல் மேற்கிந்திய தீவுகள் சென்ற தென்னாபி



ரிக்கா, பிரிட்ஜ் ரவுனில் முதன் முறையாக டெஸ்ட் போட்டியில் விளையாடியது.

சமீபத்தில் டுபாயில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்டில் தென்னாபிரிக்க அணி இன்னிங்ஸ் மற்றும் 92 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இது தடை நீக்கப்பட்டதற்கு பின்(1991) தென்னாபிரிக்காவுக்கு கிடைத்த 100ஆவது டெஸ்ட் வெற்றி.

இதில் ஸ்மித் தலைமையிலான அணி 51 வெற்றிகளைப் பதிவுசெய்தது. குரேன்ஞ்யே(27 வெற்றி), போலக்(14 வெற்றி), வெசல்ஸ்(5வெற்றி), பௌச்சர்(2 வெற்றி), கலிஸ்(ஒரு வெற்றி), கிறிஸ்டன் (ஒரு வெற்றி), பிரின்ஸ்(ஒருவெற்றி) ஆகியோரது தலைமையிலான தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றது.

இது குறித்து தென் ஆப்ரிக்க கிரிக்கெட் சபையின் தலைமை அதிகாரி ஹாரூண் லார்கட் கூறுகையில், தென்னாபிரிக்க அணியின் 100ஆவது டெஸ்ட் வெற்றி ஒரு புதிய மைல்கல்.

தற்போதுள்ள ஸ்மித் தலைமையிலான அணி இதுவரை விளையாடிய தென்னாபிரிக்க டெஸ்ட் அணிகளில் சிறந்த அணியாக வலம் வருகிறது.

இந்த அணியின் வெற்றிநடை தொடர்ந்து நிறைய சாதனைகள் படைக்க வாழ்த்துகிறேன் என்று தெரிவித்துள்ளார். (கு)

# களமிறங்குவாரா சகீர்கான் ?



மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் 3 ஒரு நாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

முதல் டெஸ்ட் நவம்பர் 6ஆம் திகதிமுதல் 10 ஆம் திகதி வரை கொல்கத்தாவிலும், 2ஆவது டெஸ்ட் 14ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை மும்பாயிலும் நடக்கிறன.

அதைத்தொடர்ந்து ஒருநாள் போட்டிகள் நவம்பர் 21, 24, மற்றும் 28ஆம் திகதி நடக்கவுள்ளது

டெஸ்ட் தொடருக்கு முன்னதாக மேற்கிந்தியதீவுகள் அணி உத்தரபிரதேச அணியுடன் மோதும் 3 நாள் பயிற்சி ஆட்டம் கொல்கத்தாவில் நாளை மறுதினம் 31 ஆம் திகதி தொடங்குகிறது.

மேற்கிந்தியதீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடும் இந்திய அணி இன்று அறிவிக்கப்படுகிறது. சந்தீப் பட்டீல் தலைமையிலான தேர்வு குழு வீரர்களை தேர்வு செய்கிறது.

முன்னணி வேகப்பந்து வீரர்களில் ஒருவரான சகீர்கான் அணியில் மீண்டும் இடம் பெறுவாரா? என்று எதிர்பார்க்கப்படுகிறது. மோசமான பந்து வீச்சு மற்றும் உடல் தகுதியின்மை காரணமாக இங்கிலாந்து தொடரின்போது அவர் நீக்கப்பட்டார். அதன்பிறகு அவர் அணிக்கு தேர்வு பெறவில்லை.

சகீர்கான் தனது பந்துவீச்சு மற்றும் உடல் தகுதியை மேம்படுத்த பிரான்ஸ், தென்னாபிரிக்கா சென்று வந்தார். இதன் பயனாக மேற்கிந்திய ஏ' அணிக்கு எதிரான ஆட்டத்தில் சிறப்பாக விளையாடினார். இதனால் சகீர்கானுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு கொடுப்பது பற்றி தேர்வுகுழு ஆலோசித்து வருகிறது.

தற்போது நடைபெற்று வரும் ரஞ்சி கிண்ணப்போட்டியில் சிறப்பாக பந்து வீசினால் இடம் பெறுவார். இஷாந்த் சர்மாவுக்கு பதில் அவர் இடம் பெறலாம்என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஒருநாள் போட்டியில் மட்டுமின்றி டெஸ்டிலும் ஓரங்கட்டப்பட்டுள்ள ஷேவாக், காம்பீர் ஆகியோர் இந்திய அணியில் மீண்டும் இடம் பிடித்து விட வேண்டும் என்ற ஆர்வத்தில் உள்ளனர்.

ஷிகார் தவான், முரளி விஜய் தொடக்க வீரர்களாக டெஸ்ட் தொடரில் இங்க உள்ளனர். இதில் முரளி விஜய் நீக்கப்பட்டால் ஒருவேளை ஷேவாக் அல்லது காம்பீருக்கு வாய்ப்பு கிடைக்கும்.

ஆனால் இந்த இருவரும் உள்ளூர் போட்டியில் சிறப்பாக ஆடவில்லை. இதனால் அணிக்கு மீண்டும் திரும்புவது கேள்விக்குறியானதே.

இதேபோல சுழற்பந்தில் அஸ்வினும், ஒஜாவும் உள்ளனர். ரஞ்சி போட்டி 6 இலக்குகளை கைப்பற்றி உள்ள ஹர்பஜன் சிங் மீண்டும் இடம் பெறுவதற்கான வாய்ப்பு குறைவே.

இந்த டெஸ்ட் தொடரோடு டெண்டுல்கர் ஓய்வு பெறுகிறார். கொல்கத்தா டெஸ்ட் அவருக்கு 199ஆவது போட்டியாகவும், மும்பை டெஸ்ட் 200ஆவது போட்டியாகவும் இருக்கும். (கு-400)

## 'டக் அவுட்' ஆக்குவோம்



கிரிக்கெட் சாதனை மன்னன் சச்சின் டெண்டுல்கர் தனது 200 ஆவது டெஸ்ட் போட்டியுடன் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற உள்ளார். மேற்கிந்தியத்தீவகள் அணிக்கு எதிராக அடுத்த மாதம் 14ஆம் திகதி தொடங்கி நடைபெற உள்ள டெஸ்ட் போட்டி தான் சச்சினின் கடைசி போட்டியாகும். இப்போட்டி அவரது சொந்த ஊரான மும்பாயில் உள்ள வான்கடே மைதானத்தில் நடைபெற உள்ளது. போட்டியின் முடிவில் அவ ருக்கு பிரமாண்டமான பிரிவு பசார விழா நடத்தவும் கிரிக் கெட் சபை திட்டமிட்டுள்ளது.

இதனால் சச்சின் விளையாடும் கடைசி போட்டியைக் காண ரசிகர்கள் ஆர்வமாக உள்ளனர். மேலும் அந்த போட்டியில் சச்சின் சதம் அடிக்க வேண்டும் என்றும் அவரது ரசிகர்கள் விரும்புகின்றனர்.

இந்நிலையில், சச்சினின் வரலாற்று சிறப்பு மிக்க 200 ஆவது டெஸ்ட் போட்டியில் அவரை 'டக் அவுட்' ஆக்கி, பிரிவுபசார விழாவின் உற்சாகத்தை குலைக்க மேற்கிந்தியதீவுகள் அணி தயாராகி வருகிறது. சச்சினை முதல் பந்திலேயே ஆட்டமிழப்பு செய்ய திட்டமிட்டுள்ளதாக மேற்கிந்தியதீவுகள் அணியின் தலைவா டரன் சமி கூறினார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு இதே வான்கடே மைதானத்தில் சச்சினின் 100ஆவது சதம் அடிக்கும் முயற்சியை 94 ஓட்டங்களில் முடிவுக்கு கொண்டு வந்ததுபோல், இந்த முறையும் ஆட்டமிழக்கச் செய்வோம் என்று சமி கூறுகிறார்.(400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29.10.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.